54135

# நீயா, நானா?



1

கடல் ஆழ்ந்த நீல நிறத்துடன் இருந்தது. அலைகள் எல்லாம் கரைப் பக்கத்திலேயே பேரிரைச்சலுடன் போரிட்டு கரைப் பகுதியை ஆக்கிர மிக்க முயற்சி செய்து கொண்டிருக்க, தனது மொத்த அலைப்படைகளையும் கரையோரம் அனுப்பியிருந்த கடல் மட்டும் நிலவுடன் காதலிப்பதில் ஈடுபட்டிருந்தது.

நிலவின் ஒளி கடலின் வெள்ளி நீர்ப்பரப்பை முத்த மிட்டுக் கொண்டிருந்தது. அந்த முத்தத்தால் தனக்கு அளித்த இன்பத்தை மிக அமைதியுடன் அனுபவித்துக் கொண் டிருந்தது கடல்.

நிலவைச் சுற்றியிருந்த நட்சத்திரத் தோழிகள் அந்தக் காட்சியைப் பார்க்காமலும் இருக்க முடியாமல், பார்த்தால் நிலவென்ன சொல்லுமோ என்ற பயத்தாலும் கண் மூடித் திறந்து, கண்மூடித் திறந்து இரவு முத்தத்தை ரசித்துக் கொண்டிருந்தன.

54135



காற்று சத்தமின்றி வீசிக் கொண்டிருந்த அந்த இரவு நேரத்தில் அந்த கடற்பிரதேசத்தில் நிலவிய அமைதியைக் கிழித்தது ஒரு விசைப் படகின் மெல்லிய ஒலி.

டாப்ளர் எஃபக்ட் காரணமாக விசைப்படகின் ஒலி முதலில் மிகவும் தூரத்திலிருந்து கேட்டது. வினாடிகள் கரையக் கரைய கரையோரம் விசைப்படகின் இடைவிடாத 'விர்ர்' கொஞ்சம் கொஞ்சமாக அதன் டெஸிபலை அதிகப்படுத்தியது.

இரவு இரண்டு மணிக்கு நல்ல பால் நிலவில் விசைப் படகொன்று கரை நோக்கி வந்தது தெரிந்தது. முழுக்க முழுக்க வெள்ளை பெயின்ட். அதன் உடல் பாகத்தில் தூய வெள்ளையின் இடையில் தீட்டப்பட்டிருந்த கருநீல திட்டு ஒன்று. அந்தக் கருநீலத் திட்டில் வரையப்பட்டிருந்த ஒரு வெள்ளைக் குதிரை. குதிரைப் படத்திற்குக் கீழே ரன்ஜித் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

படகு மெல்ல மெல்லக் கரையை நெருங்கிக் கொண்டிருந்தது. அதில் நான்கு பேர் இருந்தார்கள். ஆண்கள் திடகாத்திரர்கள். ஒருவன் படகின் மோட்டார் ரூமில் இருந்தான். அவன் முகம் வியர்த்திருந்தது. கையில் ஒரு காரட் வைத்திருந்தான். அதை அவ்வப்போது கடித்துக் கொண்டு படகைச் செலுத்தினான்.

படகில் இருந்த மற்ற மூவரும் ஆளுக்கொரு அலுமினியக் குப்பி வைத்திருந்தார்கள். முப்பது வினாடிக்கொரு முறை அந்த அலுமினியக் குப்பியை வாயில் வைத்துச் சரித்துக் கொண்டார்கள்.

மூவரில், உயரமாய், குளிர் கண்ணாடி அணிந்திருந்தவன் ஒரு நீளமான சிகரெட்டைப் பற்ற வைத்தான். ஒரு இழுப்பு இழுத்துவிட்டு அதை இன்னொருவனிடம் நீட்டினான். கொஞ்சம் குண்டாய், தலை முடி கம்மியாய், மூக்கு அகலமாய், சதை நிறைந்த கழுத்துப் பகுதியைக் கொண்ட இன்னொருவன் அந்த சிகரெட்டைப் பெற்று ஒரு இழுப்பு இழுத்து மூன்றாவது ஆளிடம் கொடுத்தான்.



மூன்றாவது ஆள் விஸ்வம். போலீஸ் வேலைக்கு மனுப் போட்டிருந்தால் அவனை அடுத்த கேள்வி கேட்காமல் போலீஸ் டிபார்ட்மென்ட்டில் சேர்த்துக் கொண்டிருப்பார்கள். போலீஸ் வேலையில் நிறைய சம்பாதிக்க முடியாது என்பதாலோ, நீதி, நேர்மை எல்லாவற்றையும் சாக்கடையில் தூக்கி இப்போது எறிந்திருப்பதைப் போல் எறிய முடியாது என்பதாலோ அவன் போலீஸ் வேலையில் சேராமல் ரன்ஜித்திடம் சேர்ந்திருந்தான்.

அவன் தேவைக்கு ஏற்ற பணம் ரன்ஜித்திடம் கூட கிடைக்காததில் அவனுக்குக் கொஞ்சம் ஏமாற்றம்தான். அதனால்தான்... அதனால்தான்...

குளிர்காற்று அடர்மேகத்தைக் கலைப்பதுபோல், அவன் மூக்கருகே வீசிய சிகரெட் புகையின் நெடி அவனது எண்ணத்தைக் கலைத்தது.

விஸ்வம் கேள்வி கேட்காமல் திரும்பி அவர்களைப் பார்த்தான். அவன் கண்கள் மதுவின் காரணமாகச் சிவந்திருந்தன. அவனது நீள மூக்கு மட்டும் தனியாக வியர்த்திருந்தது. தலையில் போலீஸ் ஸ்டைலில் முடி அமைத்திருந்தான். இருந்தும் அந்த முடியும் காற்றில் கலைந்து விடும் என்று பயப்படுபவன் போல, தலையைச் சுற்றி ஒரு ரப்பர் பட்டி கட்டி இருந்தான். அவனது ஜீன்ஸ் உப்புத் தண்ணீரை நிறைய சுவாசித்து அங்கங்கே வெள்ளைத் திட்டுகளுடன் இருக்க, பனியன் வெளிர் மஞ்சள் நிறத்தில், நிர்வாணப் பெண் ஒருத்தியின் நடனப் போஸுடன் அமைந்திருந்தது. அது அழுக்காய் இருந்தது.

சிகரெட்டை வாங்கிக் கொண்டான். ஒரு இழுப்பு இழுத்தான். உயரமாய் இருந்த முதலாவது ஆசாமியிடம் நீட்டினான். கரைப் பக்கம் பார்வையைச் செலுத்தினான். கரை நெருங்கிக் கொண்டிருந்தது. விசைப் படகிலிருந்து நூறடி தூரத்தில் ஒரு கட்டு மரம் நீரில் தள்ளாடிக் கொண் டிருந்தது.

''வந்து விட்டோம்'' என்றான் விஸ்வம்.

அவர்கள் ஏன் இன்னும் வரவில்லை?

விஸ்வம் இடுப்புப் பாக்கெட்டில் செருகியிருந்த துப்பாக் கியை எடுத்துக் கொண்டான். படகின் மேல் டெக்கில் இத்தனை நேரமும் அனாதைக் குழந்தைபோல் கவனிப் பின்றி இருந்த ஒரு சூட்கேஸை எடுத்துக் கொண்டான்.

மற்ற இருவரில் உயரமாய் இருந்தவன் சிகரெட்டைச் கடலில் வீசினான். கையில் தன் பங்குக்கு ஒரு சூட் கேஸையும், துப்பாக்கியையும் தயார் நிலையில் வைத்துக் கொண்டான். குண்டாக இருந்தவன் ஒரு நீளமூக்குத் துப் பாக்கியை மட்டும் தயார் நிலையில் வைத்துக் கொண்டான்.

விசைப்படகு கட்டுமரத்தை நெருங்குமுன் தனது மோட்டாரை மௌனமாக்கியிருந்தது.

கட்டுமரம் நீரில் தள்ளாடித் தள்ளாடி படகை நெருங் கியது.

விசைப் படகில் இருந்து ஒரு நூலேணி அதன் சைட் போர்ட் வழியாகத் தொங்க விடப்பட்டு, முதலில் விஸ்வம் இறங்கினான். கட்டு மரத்தில் காலூன்றியதும் சைகையால் அடுத்தவனை இறங்கச் சொன்னான்.

மூவரும் கட்டுமரத்தில் இறங்கியதும், கட்டு மரத்தின் இரு முனைகளிலும் உட்கார்ந்திருந்த படகோட்டிகள் கட்டுமரத்தைக் கரை நோக்கிச் செலுத்தத் தொடங்கினர்.



விசைப்படகு தண்ணீரில் தான் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தது.

விசைப்படகை இவ்வளவு நேரமும் காரட் தின்று கொண்டே செலுத்திக் கொண்டிருந்தவன், காரட்டின் அடிப் பாகத்தை கடலில் வீசினான். கையை பான்டில் துடைத்துக் கொண்டான். புறங்கையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

கட்டுமரத்தின் பயணத் திசையை ஒரு ஐந்து வினாடிகள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தவன் படகின் டாஷ் போர்டில் இருந்து ஒரு வாக்கி - டாக்கியை எடுத்து, அதன் அலைவரிசையைச் சரி செய்து கொண்டு,

''ஹலோ...'' என்று பேசத் தொடங்கினான்.



## 2

கட்டுமரம் அலைகளை எதிர்த்தும், அலைகளோடு சில சமயங்களில் சேர்ந்து கொண்டும், கரை நோக்கி வெகு விரைவாகச் சென்றது. மணலில் போய்ச் செருகிக் கொண்டு நின்றது.

விஸ்வம் இறங்கினான். அவர்கள் இருவரும் இறங்கினார்கள். கரையில் நிறையப் படகுகள் ஒதுங்கியிருந்தன. கட்டு மரங்கள் எக்ஸிபிஷனில் வைக்கப் பட்ட மாதிரி வரிசையாக நின்று கொண்டிருந்தன. மீன் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வலைகள் அங்கங்கே மணல் மேடுகளில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

விஸ்வம் முன்னால் நடந்தான். பின்னால் உயரமானவன். இருவருக்கும் பாதுகாப்பாக குண்டான ஆசாமி பின்னால் அவர்களைக் கவர் செய்து கொண்டு பார்வையை அறை யின் மூலையில் அகப்பட்ட பூனையின் பார்வையைப் போல அலைய விட்டுக் கொண்டு சென்றான்.

மணல் பகுதி ஐம்பதடி தூரத்தில் முடிந்தது. இருபுறமும் சவுக்கு மரங்கள் நிறைந்த மணற்பாங்கான பகுதியில் ஒரு பாதை எங்கோ செல்ல அந்தப் பாதையில் விஸ்வம் நடந்தான்.

அவர்கள் மூவரும் சுமார் நாற்பதடி தூரம் நடந்திருப் பார்கள். அப்போதுதான் அந்தச் சின்ன சத்தம் கேட்டது. சருகை யாரோ அல்லது எதுவோ மிதிக்கும் சத்தம்.

விஸ்வம் நின்று விட்டான். பின்னால் சென்ற உயர மானவன் கையில் பிடித்திருந்த துப்பாக்கியை தோளுக்கு நேரே நீட்டி தலையை இடதும் வலதுமாகத் திரும்பிப் பார்த்தான்.

குண்டன் விர்ரென்று சூதாட்டப் பலகை சுற்றுவது போல் சுற்றித் திரும்பினான்.

காற்று கிழியும் சத்தம் கேட்டது.

ட்புக். ட்புக். ட்புக்.

அவை சைலன்ஸர் துப்பாக்கியில் இருந்து வெளிப்பட்ட குண்டுகள் ஏற்படுத்திய ஒலி.

குண்டனின் நடு மார்பினை முதல் குண்டு தாக்கியது. 'க்ஹ்ம்' என்ற வினோதமான முனகலை வெளிப்படுத் தினான். அவன். சரிந்தான்.

அடுத்த குண்டு உயரமானவனின் முதுகைத் துளைத்தது. குண்டு அவன் முதுகைத் துளைக்கு முன் அவன் துப்பாக்கியின் ட்ரிக்கரை ஒரு முறை இழுத்து விட்டதன் காரணமாக துப்பாக்கி வெடித்தது. துப்பாக்கியிலிருந்து ஒரு தீ நாக்கு கிளம்பி அமிழ்ந்தது. அதன் ஒலியில் பிரதேசம் ஒரு முறை அதிர்ந்தது.

உயரமானவன் முதுகில் துப்பாக்கிக் குண்டு துளைத்து, அது அவன் மார்பில் வெளிப்பட்டது. வெளிப்பட்ட



இடத்தில் வட்டம் கிட்டத்தட்ட இரண்டு இன்ச் விட்டத் துடன் இருக்க, ரத்தமும், சதையும் குபுக்கென ஒரு சின்னப் பந்தாக வெளிப்பட்டு தரையில் விழுந்தது. மார்பில் ரத்தக் கோடு ஒழுகி ஓடத் தொடங்கியது. உயரமானவன் சத்தம் எதுவும் இன்றித் தரையில் சரிந்தான்.

விஸ்வத்தின் மார்பை இடிதாக்கியது போல் இருந்தது. விஸ்வம் அதிர்ந்தான். அவன் மார்பில் ஒரு சிகப்பு வட்டம். சிகப்பு நிறத்தில் ரத்தம் தரையில் சிதறியது. கீழே சரிந்தான். கண்களை மூடினான்.

ஆகாயம் காற்று இன்றி ஸ்தம்பித்தது. நிலவு கடலை முத்தமிடுவதை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தது. நட்சத்திரங்கள் இமைக்க மறந்தது. அலைகள் முன்பைவிட ஆக்ரோஷமாக, 'இந்த அநியாயத்தை யாரும் கவனிக்கவே மாட்டார்களா?' என்று குரல் எழுப்பின.

அவர்கள் மூவரும் சரிந்த பின்னர், சவுக்குத் தோப்பில் சலனம் கேட்டது அவர்கள் மூன்று பேர் இருந்தார்கள். வந்தார்கள். சரிந்திருந்த மூவரும் இன்னும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்த துப்பாக்கிகளை எடுத்துக் கொண் டார்கள். இரண்டு சூட்கேஸ்களையும் எடுத்துக் கொண் டார்கள்.

அங்கிருந்து புறப்பட்டு மணல் பகுதியை நோக்கி வர, மணல் பகுதியில் ஒரு ஜீப் விளக்கின்றி மெல்ல உருண்டு வந்து அவர்கள் சவுக்குத் தோப்பில் இருந்து வெளிப்பட்ட இடத்தில் நின்றது.

அவர்கள் மூவரும் ஜீப்பில் தாவி ஏறினார்கள்.

முழுநிலவு அவர்கள் ஒவ்வொருவரும் ஜீப்பில் தாவும் போது, அவர்களது இறுக்கமான முகபாவத்தைக் கொஞ்சம் அச்சத்துடனேயே வேடிக்கை பார்த்தது.

அவர்கள் ஏறியதும் ஜீப் மணலை வாரி இறைத்துக் கொண்டு, கடற்கரையோரமாக வந்து, கொஞ்சம் ஈரமான கெட்டியான மணலில் டயர் பதித்து வேகமாக ஓடத் தொடங்கியது.



3

ரன்ஜித் தனது படுக்கையறையில் ஒரு வெல்வெட் நைட் கவுனை அணிந்து கொண்டு படுத்திருந்தார். அறையில் கீழே டைல்ஸ். சுவர்களில் டைல்ஸ். உயரமான கூரை முழுக்கக் கண்ணாடிப் பரப்பு. கண்ணாடிப் பரப்பில் ஏதோ ஒரு பகுதியில் இருந்த கொக்கி ஒன்றில் இருந்து ஒரு ஷாண்டலியர் தொங்கிக் கொண்டிருந்தது. கீழே தரை மீது ரத்தச் சிகப்பில் கார்ப்பெட்.

சுவரின் ஒரு பக்கத்தில் மூன்றுக்கு இரண்டு அளவில் ஃப்ரேம் போடப்பட்டு ஃப்ரேம் சிறையில் ஒரு ஆர்ட் பேப்பர் ஆறு கலர் வெங்கடாஜலபதி அருள் பாலித்துக் கொண்டிருந்தார்.

ரன்ஜித்தின் முக அமைப்பில் இருந்து அவருக்கு ஐம்பத்தைந்து வயது சொல்லலாம் போல் இருந்தது. இருந்தும் ஒரு வளைவு சுளிவற்ற சீரான வழவழ முகம். முகத்திலேயே அதீத பணத்தின் கவர்ச்சி தெரிந்தது. சாந்தம் இருந்தது. அகன்ற நெற்றி. வாரி விடப்பட்ட தலை. மூடியிருந்த கண்ணிமைகள் பாதாம் பருப்பை நினைவு படுத்தின. உடலில் மார்பு வரை போர்வை போர்த்தியிருந்தார். பக்கத்தில் துணையில்லை. தனித்துதான் படுத்திருந்தார். இந்த அளவு பணம், வசதி என்றாலே மது, மாது என்ற எல்லா வழக்கங்களும் ரன்ஜித் போன்ற ஆசாமிகளிடம் நிரந்தரமாகக் குடியேறுவது வழக்கம். ரன்ஜித் அப்படியில்லை. மனைவி



கான்சரில் செத்துப் போனதில் இருந்து இன்றுவரை தனிப் படுக்கைதான்.

இன்டர்காம் ஒலித்தது.

ரன்ஜித் எழுந்திருக்கவில்லை. இன்டர்காமின் ஒலி நின்றது. மறுபடி ஒலித்தது. இம்முறை சற்று நீளமாக. அறையில் இருக்கும் யாரையும் உலுக்கியாவது எழுப்பிவிட வேண்டும் என்ற ஆர்வத்துடன்.

ரன்ஜித் தனது தூக்கத்தில் காரில் போய்க் கொண்டிருந்தார். காரில் அவரும், அவரது மகளும் மட்டுமே. காரை அவர்தான் செலுத்திக் கொண்டிருந்தார். மிக வேகமாக தன் மகளை உலகின் ஏழு கடல்களையும், ஏழு மலைகளையும் தாண்டி எங்கோ ஓர் தனிமையிடத்தில் பாதுகாப்பாக வைத்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் காரை ஓட்டிய மாதிரி இருந்தது.

ஏழு கடலையும், ஏழு மலைகளையும் தாண்டுவதற்கு முன்பாக, நடுவில் திடீரென்று முளைத்த ரயில்வே கேட்டை ஆத்திரத்துடன் பார்த்தார். பக்கத்தில் அமர்ந்திருந்தவளைப் பார்த்து, ''பயப்படாதே... இன்னும் சிறிது நேரத்தில் உன்னை யாரும் அணுக முடியாத ஒரு இடத்தில் கொண்டு போய் வைத்து விடுகிறேன்'' என்று சொல்ல, அது லேசான முனகலாக வெளிப்பட, ரயில்வே கிராஸிங்கில் ணிக், ணிக் என்று மணியடிக்கத் தொடங்கி, கேட் மூடப்பட்டு, அவர் பாதையை மறிக்க, ரன்ஜித் 'சே' என்று அலுத்துக் கொண்ட வேளையில் ரன்ஜித்தின் தூக்கம் இன்டர்காமின் ணிக் ணிக்கால் கலைந்தது.

எழுந்தார். ரிசீவரை எடுக்குமுன், தலையணைக்குக் கீழே கை வைத்துத் துழாவி பைப்பை எடுத்தார்.

ரிசீவரை எடுத்தார். ''ஹலோ...''

''சார். நான் சந்திரசேகரன்.''

''என்ன சேகர்? கொஞ்சம் இரு பைப்பைப் பற்ற வைத்துக் கொள்கிறேன். என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டாய் இல்லையா? பைப்பைப் பற்ற வைக்கும் வரை நீ காத்திருக்க வேண்டியதுதான்'' என்று பாதி சீரியஸாகவும் பாதி கிண்டலாகவும் சொல்லிவிட்டு, ரிசீவரை டீப்பாயில் வைத்தார். ஒரு தரமான ப்ளாஸ்டிக் பையில் இருந்த ஸ்டேட் எக்ஸ்பிரஸ் சிகரெட்டின் ப்ளென்டட் புகையிலையை எடுத்து உள்ளங்கையில் ஒரு கசக்கு, கசக்கி பைப்பில் அடைத்துப் பற்ற வைத்தார். இருமுறை பைப்பை ஆழமாக உள்ளிழுத்தார்.

''சொல்லு.''

''தப்பு நடந்து போய் விட்டது சார்.''

''என்ன சொல்கிறாய்?''

''சரக்கு கைமாறி விட்டது.''

''என்னது?''

''ஆம் சார்.''

''சேகர். என்ன நடந்தது?''

''நான் கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் படகை நிறுத்தினேன் சார்.''

''ப்ரொஸீட்.''

''கட்டுமரத்தில் சரக்கோடு அவர்கள் ஏறி கரை நோக்கிப் போக ஆரம்பித்தவுடன் நான் நம் நண்பர்களுக்குத் தகவல் தெரிவித்து விட்டேன்.''

''ஜெகனுக்கா?''

''ஆம். காரில் வாக்கி - டாக்கியில் எனக்குப் பதில் அளித்தவன் ஜெகன்தான்.''



''அப்புறம்?''

''அவர்கள் சவுக்குத் தோப்பில் நுழைவதை நான் பார்த்தேன் பைனாகுலரால்.''

ரன்ஜித் ஒருமுறை புகையை இழுத்துவிட்டார். லேசாக மார்பில் வலித்தது. சேகர் ஒரு செய்தியைச் சொன்னால். அது நூறு சதவீதம் உண்மையாக இருக்கும். சரக்கு போய் விட்டது. இரண்டு கோடி ரூபாய் பறி போய் விட்டது.''

''சார்? ஆர் யூ ஆன் தி லைன் சார்?''

''சொல்லு.''

''நான் படகைக் கிளப்பலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் சவுக்குத் தோப்பில் இருந்து மூன்று பேர் வெளிப்பட்டார்கள். அவர்களின் கைகளில் நம் ஆட்களின் துப்பாக்கிகள். நம் சரக்கு அடைத்திருந்த சூட்கேஸ்கள். ஒரு ஜீப் வந்து அவர்களை ஏற்றிக் கொண்டு போனது.''

''நம் ஆட்கள்?''

''ஜோ, பண்ணி, விஸ்வம் மூன்று பேரும் சுடப்பட்டுக் கிடந்தார்கள் - சவுக்குத் தோப்பில்.''

''ச்....ச்...ச்...''

''ஜெகன் அவர்களைப் பார்த்துவிட்டு என்னிடம் வாக்கி - டாக்கியில் சொன்னான். அவன் உடல்களை ஏற்றிக் கொண்டு அங்கே வந்து கொண்டிருக்கிறான்.''

''யார் அந்த மூன்று பேர்?''

''சார்?'' என்று கேட்ட சந்திரசேகரின் குரலில் பயம் கலந்து இருந்தது.

''சவுக்குத் தோப்பில் இருந்து நம் சரக்கோடு ஓடிய வர்கள்?''

''ஜெயதேவியின் ஆட்கள்.''

''மறுபடியுமா?''

''ஆம்.''

''அவர்களை அடையாளம் தெரிந்ததா?''

''தெரிந்தது சார்.''

''சொல்லு. ஹூ ஆர் தோஸ் பாஸ்டர்ட்ஸ்?''

''மோகன், மாலிக், அலெக்ஸாண்டர்.''

''ஓ.கே. கட் தி கான்வர்சேஷன். நீ கரையிலிருந்து தண்ணீருக்கு போய்விடு. எங்கேயாவது போ. மீன் பிடி. கரைக்குக் கொஞ்ச நாட்களுக்குத் திரும்ப வேண்டாம்.''

''யெஸ் சார்.'' என்று சந்திரசேகர் போன் தொடர்பைத் துண்டித்தான்.



## 4

**ர**ன்ஜித் நைட்கவுனுடன் தன் குளிரூட்டப்பட்ட அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டார். அறை வாசலில் காவலாக நின்றிருந்த மில்டன் சல்யூட் அடித்தான்.

''மில்டன் கார் வருகிறது. கதவைத் திற.''

மில்டன் ''யெஸ் ஸார்'' என்று சொல்லிவிட்டு, சுவரில் பொருத்தப்பட்டிருந்த ஒரு இன்டர்காமின் ரிசீவரை எடுத்து, கேட்டில் நின்று கொண்டிருந்தவனுக்கு ரன்ஜித்தின் உத்தரவைத் தெரிவித்தான்.

ரன்ஜித் புகை பிடித்துக் கொண்டு, பின்னால் கைகளைக் கட்டிக் கொண்டு, விரல்களை முறுக்கிக் கொண்டு ஒரு



பசித்த புலிபோல அங்கிருந்த நீளமான பளிங்கு வராந்தாவில் நடந்தார். அவருடைய நடை ஒரு பசித்த புலியின் நடையை ஞாபகப்படுத்தியது.

ஒரு நான்கு முறை ரன்ஜித் இந்தக் கோடியில் இருந்து அந்தக் கோடிக்கு நடந்திருப்பார்.

காரிடார் சுவரில் பதிந்திருந்த இன்டர்காம் 'குக் குக் குக்' என்றது.

மில்டன் அவரைப் பார்த்தான். இவருடைய கண்களின் அனுமதி பெற்று ரிசீவரை எடுத்துக் கேட்டு, ''சார்'' என்று பணிவுடன் ரிசீவரை அவரிடம் நீட்டினான்.

ரன்ஜித் ''ஹலோ'' என்று உறுமினார்.

''ஜெகன் சார்.''

''எங்கேயிருந்து?''

''திருவான்மியூர் பக்கத்தில் இருந்து.''

''என்ன விஷயம்?''

''காரை ஒரு இன்ஸ்பெக்டர் நிறுத்தியிருக்கிறார் சார். அவருக்கு விளக்கம் வேண்டுமாம்!''

''இன்ஸ்பெக்டர் பெயர் என்ன?''

''முருகவேல்.''

''காரை விடமாட்டானாமா?''

''யெஸ் சார்! அவனைத் தீர்த்துக் கட்டி விடவா சார்?''

''வேண்டாம். பொறு. ஏற்கெனவே நாம் கொஞ்சம் சிக்கல் நூலைக் கையில் வைத்திருக்கிறோம். இந்த சமயத்தில் இது வேண்டாம்! பொறு. நான் அந்த முருக வேலைப் படிய வைக்கிறேன்.''

ரன்ஜித் இன்டர்காமின் தொடர்பைத் துண்டித்தார்.

''ஆப்பரேட்டரைக் கூப்பிடு'' என்றார் மில்டனிடம்.

ஆப்பரேட்டர் லைனில் வந்ததும், ரன்ஜித் மவுத்பீசில் சுருக்கமாக ''எழில்நாதன்'' என்றார்.

மூன்றாவது நிமிடம் எழில்நாதனின் குரல் அவரை அடைந்தது.

''என்ன இந்த நேரத்தில்?'' என்று போனில் எழில்நாதனின் குரல் கேட்டபோது அதில் கொட்டாவி கலந்திருந்தது தெரிந்தது.

''ஒரு சின்ன ஆப்ளிகேஷன்.''

''என்ன?''

ரன்ஜித் சொன்னார். எழில்நாதன் 'சரி சரி' என்று ஆமோதிப்பை மட்டும் ரிசீவர் வழியாக வெளிப்படுத்தினார்.

மூன்று நிமிடப் பேச்சு முடிந்ததும், ரன்ஜித் திருப்தியாக ரிசீவரை மில்டனிடம் கொடுத்தார்.

அடுத்த பத்தாவது நிமிடம், ரன்ஜித்தின் காம்பவுண்ட் கேட்டில் அம்பாஸிடர் ஒன்று நுழைந்தது. அது வெகு அவசரத்தில் இருக்கிற மாதிரி டயர்களைக் கதறடித்துக் கொண்டு திரும்பி, அறுபது கிலோ மீட்டர் வேகத்தில் புற்களின் நடுவே ஓடிய கான்க்ரீட் பாதையில் ஓடி வந்து, ரன்ஜித் நின்றிருந்த இடத்திற்கு நேராக வந்து நின்றது.

கதவு உடனே திறந்து, ஜெகன் வெளிப்பட்டான். ஜெகனுக்குப் பக்கத்தில் இருந்த இரண்டு ஆட்கள் வெளிப்பட்டார்கள். காரின் பின் சீட் கதவைத் திறந்து, அவர்கள் ஒன்றன் மேல் ஒன்றாய் அடுக்கியிருந்த உடல்களை எடுத்து, கீழே புல்வெளியில் கிடத்தினார்கள்.

ஜோ.

பண்ணி.



விஸ்வம்.

ரன்ஜித் சற்றுநேரம் அந்த மூன்று முகங்களையும் வெறித்துப் பார்த்தார். அவருக்காக உழைத்து, அவருக்காக ரத்தம் சிந்தி, அவருக்காக உயிர்விட்ட மூன்று முகங்கள்.

''ஜெகன்.''

''சார்.''

''இவர்களைக் கிணற்றில் போட்டு விடு.''

''யெஸ் சார்.''

''இவர்களுக்கு குடும்பம்?''

''விஸ்வத்திற்கு மட்டும் குடும்பம் இருக்கிறது சார்.''

''அவர்களை நல்லபடி கவனித்து விடு.''

''யெஸ் சார்.''

''எல்லாம் முடிந்ததும் நாயக்கை என்னை வந்து பார்க்கச் சொல்.''

''யெஸ் சார்.''

ரன்ஜித் மற்றபடி அந்த முகங்களை ஒருமுறை பார்த்து விட்டு தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்.



## 5

ஜெகன், ரன்ஜித் தனது அறைக்குள் நுழைந்ததும் விரைந்து செயல்பட்டான். தன் கூட அழைத்து வந்திருந்த இரண்டு ஆட்களிடமும் ஜாடை காட்டினான்.

அவர்கள் உடனே பழையபடி அந்த உடல்களை அம்பாஸிடரின் டிக்கியில் ஒன்றன் மேல் ஒன்றாக

அடுக்கினார்கள். காரின் முன் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந் தார்கள்.

ஜெகன் காரைப் புயல் வேகத்தில் கிளப்பினான்.

கார், ரன்ஜித்தின் அடையாறு பங்களாவிலிருந்து வெளிப்பட்டு, ராஜ்பவன் கடந்து, கிண்டி தொட்டுக் கடந்து, மீனம்பாக்கம், பல்லாவரம் என்று சென்னையில் சின்னஞ் சிறு நகரங்களை மகாப்பசியுடன் விழுங்கி விட்டு குரோம் பேட்டையில் திரும்பியது.

இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்று, ரன்ஜித் டான ரீஸின் கேட்டில் நுழைந்தது.

ரன்ஜித் டானரீஸ், ரன்ஜித் நிறுவியிருந்த தோல் தொழிற்சாலை. தொழிற்சாலை பதினைந்து ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்திருந்தது. அதன் வடமேற்கு மூலையில் ஒரு காலத்தில் விவசாயத்திற்காக, நீர் பாய்ச்சப் பயன்பட்டுக் கொண்டிருந்த கிணறு ஒன்று இப்போது பாழடைந்து, தோல் தொழிற் சாலையின் கழிவு நீரை உள்வாங்கி, உள் வாங்கி நாற்றமடித்துக் கொண்டிருந்தது.

அம்பாஸிடர் அதன் அருகில் போய் நின்றது.

காரிலிருந்து உதிர்ந்த இருவரும், பின் கதவு திறந்து உடல்களை வெளியே எடுத்து, பக்கத்தில் இருந்த சிறு பாதைகளை அந்த உடல்களுடன் பிணைத்துக் கிணற்றில் எறிவதற்கு மொத்தம் முப்பது நிமிடங்கள் பிடித்தன.

கிணறு கிட்டத்தட்ட நாற்பதடி ஆழம். அது ஏற்கெனவே பல உடல்களை முக்கல் முனகல் எதுவுமின்றி வாங்கிச் சேகரித்துக் கொண்டிருக்கிறது.

இப்போது ஜெகன் எறியச் சொன்ன மூன்று உடல் களையும் அது முன் போலவே எந்த எதிர்ப்பும் தெரிவிக் காமல் 'ஸ்ப்ளாஷ்' 'ஸ்ப்ளாஷ்' 'ஸ்ப்ளாஷ்' என்ற மூன்று சந்தோஷ ஆரவாரக் கூச்சலுடன் பெற்றுக் கொண்டது.



ஜெகன் ஒரு முறை சக்தி வாய்ந்த டார்ச் விளக்கின் உதவியால் கிணற்றின் கருஞ்சிவப்பு நீர்ப் பரப்பைப் பார்த்தான். சிறு அலைகள் அதன் விளிம்புச் சுவரை மோதின.

ஒரு தவளை எகிறிக் குதித்து அமர்ந்து கழுத்துப் பகுதியை அசைத்துக் காட்டியது.

ஜெகன் விலகி வந்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து விட்டு, தன்னிடம் ஒப்படைத்த வேலையைத் திருப்தி கரமாக முடித்து விட்ட செய்தியைச் சொல்லுவதற்காக டெலிபோன் நோக்கிச் சென்றான்.



## 6

ரன்ஜித் தன் எதிரில் வந்து நின்ற நாயக்கைப் பார்த்தார்.

இளங்காலை நேரம். சூரியன் நாயக் கின் முகத்தை இளஞ்சூடான தன் கதிர்களால் நனைத்துக் கொண்டிருந் தான்.

நாயக்கின் முகம் சாந்தமாக இருந்தது. அவன் ஆறடி இரண்டங்குலம் இருந்தான். நன்கு விரிந்த தோள்கள், குறுகிய இடை, உள் அழுந்திய வயிறு. திடமான கால்கள்.

ரன்ஜித் அழைத்து வரச் சொன்னது அவனுக்குத் தெரிய வந்த போது நாயக் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தான். அதனால் உடலெங்கும் வியர்வைத் துளிகள் - மழைத்துளிப் பட்ட ரப்பர் கூரை போல் உடலில் ஒரே ஒரு அரை டிராயர்.

நாயக்கிற்கு அதிகம் போனால் இருபத்தைந்து வயதிருக் கலாம்.

"நாயக்."

''சொல்லுங்கள் சார்'' என்றான் நாயக் பணிவாக.

ரன்ஜித் கண்ணாடி டீப்பாயின் மீது மூன்று புகைப் படங்களைப் பரப்பினார்.

''ஜோ... பண்ணி, விஸ்வம் மூன்று பேரை நாம் இழந் திருக்கிறோம்.''

''வருத்தமாக இருந்தது சார்.''

''அவர்களைத் தீர்த்துக் கட்டியவர்கள் இந்த மூன்று பேரும்தான். ஜெயதேவின் ஆட்கள், மோகன், மாலிக், அலெக்ஸாண்டர்...''

''நான் என்ன செய்ய வேண்டும் சார்?''

''இந்த மூன்று பேரும் இந்த உலகில் வாழத் தகுதி யற்றவர்கள்.''

''புரிகிறது.''

''சாக வேண்டும்.''

''புரிகிறது.''

''உன் கையால் சாக வேண்டும்.''

''ரைட் சார்.''

''மாட்டிக் கொள்ளாதே.''

''தெரியும் சார்.''

''எப்போது முடிப்பாய்?''

''ஒரு வாரத்தில்.''

''ரைட்... நீ போ. உனக்கு எவ்வளவு வேண்டும்?''

''பணத்தை வைத்துக் கொண்டு நான் எதுவும் செய்யப் போவதில்லை.''



''என்னிடம் கொடுப்பதற்கு அதுதான் இருக்கிறது. எவ்வளவு வேண்டும்?''

''மூன்று லட்சங்கள்.''

''வாங்கிக் கொள்.''

நாயக் ஒருமுறை குனிந்து நிமிர்ந்து விட்டு, வெகு டிராமாட்டிக்காக அந்த அறையை விட்டு வெளிப்பட் டான்.



## 7

ஜெயதேவ் மிக எளிமையான ஒரே ஒரு ஜிப்பா அணிந்திருந்தார். சூப்பர் ரின்னில் சலவை செய்யப்பட்ட ஒரு பைஜாமா அணிந்திருந்தார். அண்ணா நகரின் கோடியில் அவரது வீடு அமைந்திருந்தது. வீடு கிட்டத் தட்ட பண்ணை வீடு போல் காட்சி அளித்தது. நிறைய பரப்பளவு நிலம். ஏராளமான மரங்கள் வளர்ந்திருந்தன. பூச்செடிகள். புல்வெளி. நடுநாயகமாக அவர் வீடு இருந்தது. முழுக்க முழுக்க மரத்தால் கட்டப்பட்ட ஒரு பிரமையை அளித்துக் கொண்டு அந்த வீடு.

போர்டிகோவில் ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு அதில் ஜெயதேவ் அமர்ந்திருந்தார். அவர் நெற்றியில் ஒரு குங்குமக் கீற்று. தலைமுடி நன்றாகப் பின்னோக்கி வாரப்பட்டு அந்த நாள் பாகவதர் கிராப்பை நினைவு படுத்தியது. அவர் உட்கார்ந்திருந்த நாற்காலியைச் சுற்றிலும் நிறைய நாய்கள். டாபர்மேன், அல்சேஷன், ராஜபாளையம், புல்டாக் என்று உலகின் தேர்ந்தெடுத்த ஒவ்வொரு ஜாதியிலும் இரண்டிரண்டு நாய்கள் அவர் காலைச் சுற்றி உட்கார்ந்திருந்தன.

ஜெயதேவைச் சுற்றி யார் வந்து நின்றாலும் அந்த நாய்கள் ஜெயதேவைப் பார்ப்பதை விட்டு, வந்து எதிரில் நின்றவரைப் பார்க்கத் தொடங்கின. கர் கர் என்று விரோத பாவத்துடன் அவ்வப்போது உறுமின.

''என்னடா?'' என்றார் ஜெயதேவ்.

'என்னடா' என்றது அவருக்கு எதிரில் வந்த ஒரு பத்தடி தள்ளி நின்ற மோகனைப் பார்த்து.

''கூப்பிட்டு அனுப்பியதாக என்னிடம் வந்து சொன்னார்கள்.'' என்றான் மோகன் வெகு பணிவாக.

''ஆமாம். கூப்பிட்டு அனுப்பினேன் இல்லை...? எதற்கு கூப்பிட்டு அனுப்பினேன்? கரெக்ட் - கரெக்ட் ரன்ஜித்தின் சரக்கை எடுத்து வர உன்னோடு யார், யார் வந்தார்கள்?''

''மாலிக், அலெக்ஸாண்டர்.''

''ரைட். அவர்களைக் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கச் சொல். வெளியே எங்கேயும் தலைகாட்ட வேண்டாம் என்று சொல்.''

''சரி...''

''நீ கூட எச்சரிக்கையாக இரு.''

''என்னை யார் வந்து...?''

''ஷ்... இந்த மாதிரி கர்வப் பேச்சு பேசினால் நிச்சயம் உன்னை ரன்ஜித்தின் ஆட்கள் நசுக்கி விட்டுப் போய் விடுவார்கள். நீ நிறைய தண்ணி அடிப்பாய் இல்லை?''

''ஸ்டெடியாக இருப்பேன்.''

''ஸ்டெடியாக இருந்தால்தான் உன் உயிருக்கு நல்லது. அப்புறம், மாலிக் பெண் பித்தன். எங்கேயாவது போய் மாட்டிக் கொள்ளப் போகிறான். அந்த சூதாடி அலெக் ஸாண்டரிடமும் சொல்லி வை.''



''யெஸ் சார்.''

''ரன்ஜித்தை நாம் சாதாரணமாக எடை போட முடியாது. அவன் அடிபட்ட புலி. இந்நேரம் தன் காயத்தை நக்கிக் கொண்டிருப்பான். பதுங்கியிருப்பான். சமயம் பார்த்துப் பாய்வான். அவன் ஆட்கள் மூன்று பேரை நாம் பலி கொடுத்து விட்டோமென்ற ஆத்திரத்தில் இருப்பான். அதனால்தான் சொல்கிறேன்... நீங்கள் மூன்று பேரும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று...''

''சார்.''

''என்ன?''

''ரன்ஜித் உங்களையும் தாக்க முயல்வார் இல்லையா? நீங்கள் இவ்வளவு சாதாரணமாக இருக்கிறீர்களே. ஒரு பாதுகாப்பும் இல்லாமல். யாராவது ஒரு கார்டைப் போட்டு வைத்துக் கொள்ளலாமே. அவன் கையில் துப்பாக்கியுடன் காவலுக்கு இருந்தால் உங்களுக்கும் நல்லதில்லையா?''

''மோகன்.''

''சார்?''

''நீ அனுபவம் இல்லாதவன். அதனால் நிலைமை தெரியாமல் பேசுகிறாய். நான் பாதுகாப்புடன் இல்லை யென்று யார் சொன்னது? என் பாதுகாப்பு என்னவென்று காட்டட்டுமா?'' என்று கேட்ட ஜெயதேவ் கை தட்டினார்.

வீட்டுக்குள் இருந்து ஒருவன் எட்டிப் பார்த்தான்.

''கேசவா... நம்மைக் காட்டிக் கொடுக்கப் பார்த்தானே... ஒரு துரோகி.''

''மகேந்திரன்.''

''ஆம். அவனை ரூமில் இருந்து ரிலீஸ் பண்ணி என்னிடம் அனுப்பு. அவன் கையில் ஒரு துப்பாக்கியைக் கொடு.

லோட் ஆன துப்பாக்கி. பயப்படாதே. எனக்கு ஒன்றும் ஆகாது. ரகசியமாக அவனை விடுவிப்பதுபோல் பாசாங்கு செய்து அவனை அனுப்பு. நான் இங்கே தனியாக உட்கார்ந்திருக்கிறேன் என்று சொல். என்னை இப்போது தொலைத்துக் கட்டுவது சுலபம் என்று சொல். அவன் நிச்சயம் என்னைக் கொல்ல வேண்டும் என்ற வெறியுடன் தான் வருவான்.''

கேசவன் என்று அழைக்கப்பட்டவன் தலையை அசைத்து விட்டு அப்படியே பின்னேறினான்.

ஜெயதேவ் தனியாக உட்கார்ந்திருந்தார். கையில் ஒரு பெரிய பிஸ்கெட் பாக்கெட். அதிலிருந்து ஒவ்வொரு பிஸ்கெட்டாக உருவி உருவி வீசினார். நாய்கள் ஒன்றை யொன்று முந்திக் கொண்டு ஓடி பிஸ்கெட்டைக் கவ்வின.

மோகன் வீட்டில் மாடியில் இருந்த பால்கனியில் உட்கார்ந்திருந்தான். அவன் உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து ஜெயதேவ் தெரிந்தார். சுற்றிலும் யாரும் இல்லை. சாயங்காலப் பட்சிகளின் கூட்டையும் ஒலிக் குறிப்புகள். நாய்கள் பிஸ்கெட்டைச் சுவைத்ததால் ஏற்பட்ட சத்தம் இவை தவிர அங்கே வேறெந்த ஒலியும் இல்லை.

வீட்டின் பின்பக்கக் கதவு திறக்கப்படும் மெல்லிய ஒலி மோகனுக்குக் கேட்டது. மோகன் பால்கனியின் மறு முனைக்குச் சென்று பார்த்தான். மகேந்திரன் அவன் கண பார்வையில் தெரிந்தான். கையில் நீட்டிய துப்பாக்கியுடன் அவன் மெதுவாக, மிக மெதுவாக ஜெயதேவ் உட்கார்ந் திருந்த இடத்தை அணுகிக் கொண்டிருந்தான்.

ஒரு திருப்பம். அந்தத் திருப்பத்தின் முனையில் நின்றால் நிச்சயம் மகேந்திரனால் ஜெயதேவைப் பார்க்க முடியும். குறி வைத்துச் சுட முடியும்.



மகேந்திரன் அந்தத் திருப்பத்தில் வந்து நின்றான். துப்பாக்கியை உயர்த்தினான். ஜெயதேவை குறி பார்த்தான்.

மகேந்திரன் சுட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ள வழி இருக்கிறதா என்று மோகன் ஆராய்ந்தான்.

பின்னால் வந்த வழியே ஓடினால் இருபது மீட்டர் தூரத்தில் காம்பவுண்ட் சுவர் இருந்தது. நிச்சயம் அவனால் ஏறிக் குதிக்க முடிகிற காம்பவுண்ட் சுவர். நாய்களை விட மகேந்திரன் வேகமாக ஓடக் கூடியவன் என்று மோகன் அறிந்திருந்தான். நாய்களுக்குக் குண்டு எங்கேயிருந்து வந்தது என்று தெரிவதற்குள் மகேந்திரன் ஓடியிருப்பான்.

மோகன் படபடக்கும் இதயத்துடன் பார்த்தான்.

மகேந்திரன் கையை உயர்த்தியிருந்தான். மோகனுக்கு ஜெயதேவை எச்சரித்துக் கத்த வேண்டுமென்ற உணர்வு, அவன் தொண்டைக் குழி வரை குரலைத் தள்ளிக் கொண்டு வந்தது. ஆனாலும் ஜெயதேவின் எச்சரிக்கைக் காரணமாக, அவன் வியர்த்துப் போன முகத்துடன் அந்த பால்கனியில் உட்கார்ந்திருந்தான்.

மகேந்திரனைப் பார்த்தான்.

நாய்களைப் பார்த்தான்.

ஜெயதேவைப் பார்த்தான்.

ஜெயதேவ் இன்னும் மிகச் சாதாரணமாகத் தெரிந்தார். அவர் உடலில் படபடப்போ, எச்சரிக்கையோ, தன்னை ஏதோ ஒரு துப்பாக்கி எங்கிருந்தோ குறி பார்க்கிறது என்ற உணர்வோ இல்லாமல் இருந்தார்.

மகேந்திரன் விசையை இழுத்த நேரம் -

நாய்களின் காதுகள் விறைத்துப் போய்க் குத்திட்டு நின்றன.

துப்பாக்கிக் குண்டுகள் வெளிப்பட்டதன் ‘டிஷ்யூங்’ மோகனின் காதை எட்டுமுன் நாய்கள் சத்தம் வந்த திசையில் பாய்ந்தன.

ஒரு நாய் மகேந்திரனின் துப்பாக்கியிலிருந்து வெடித்த குண்டைத் தன் உடலில் வாங்கிக் கொண்டு, ஒரு ஈனமான குரலை எழுப்பிக் கொண்டே துள்ளி விழுந்தது.

கீழே விழுந்த நாய் மீது மற்ற நாய்கள் கால்களை வைத்து எம்பிக் குதித்து, கண் மூடித் திறப்பதற்குள் மகேந்திரனின் கால்களைப் பற்றின. ஓடிய மகேந்திரன் ‘ஐயோ’வென்று கத்திக் கொண்டே இடறி விழுந்தான். கையில் பிடித்திருந்த துப்பாக்கி எகிறியது.

மகேந்திரனை முழுக்க முழுக்க நாய்கள் ஆக்கிரமித்தன.

ஒரு முழு நிமிட நேரத்திற்கு அப்பால் ஒரு நாய் மகேந்திரனின் குடலைக் கவ்விக் கொண்டு போய் ஜெய தேவின் காலடி அருகே சென்று வைத்தது.

மகேந்திரன் விழுந்த இடத்தில் மகேந்திரன் இல்லை. ஒரு சதைக் கோளம்தான் இருந்தது.

ஜெயதேவ் பால்கனி பக்கம் திரும்பி, ‘‘மோகன்’’ என்று அழைத்தார். மோகன் நடுக்கத்துடன் கீழே இறங்கினான். அவன் உடலின் அத்தனை துவாரங்களில் இருந்தும் வியர்த்து ஊற்றிக் கொண்டிருந்தது.

‘‘போதுமா எனக்குப் பாதுகாப்பு?’’

‘‘போதும் சார்’’ என்றான் நடுக்கத்துடன் நாய்களைப் பார்த்துக் கொண்டு.

‘‘போ. நீ உன்னைப் பார்த்துக் கொள். நமக்குத் தகவல் கொடுத்தானே. ரன்ஜித்தின் சரக்கு வருவதாக... அவன் பெயர் என்ன?’’

‘‘விஸ்வம்.’’



‘‘அவனையும்தானே தீர்த்துக் கட்டினீர்கள். இல்லை வேறு யாரையாவதா?’’

‘‘இல்லை. சரக்கு எடுத்துப் போக விஸ்வமும் வந்திருந் தான். அவனையும்தான் சுட்டோம்.’’

‘‘ரைட். துரோகிகளுக்கு அது ஒன்றுதான் வழி. நீ போ மோகன்.’’

மோகன் மெல்ல நடந்து அவனுக்கென ஜெயதேவ் கொடுத்திருந்த மாருதியின் டிரைவிங் சீட்டில் அமர்ந்து காரைக் கிளப்பினான்.



## 8

**நா**யக் தன்னுடைய ஃபோர்ஷோர் எஸ்டேட் அறையை விட்டு வெளிப் படும்போது கிட்டத்தட்ட ஒரு கன வானைப் போல வெளிப்பட்டான். அவனுடைய அறை வெளியிலிருந்து பார்ப்பதற்கு மிகச் சாதாரணமாகத் தெரியும். ஆனால் அறைக்குள் சகல சௌபாக்கியங்களையும் பெற்றிருந்தான். ஏ.ஸி., டி.வி., வி.ஸி.ஆர்., வாக்கி - டாக்கி, டெலிபோன்.

நாயக் நல்ல க்ரே நிறத்தில் பான்ட் அணிந்திருந்தான். கோட் அணிந்திருந்தான். அவன் அறையை விட்டு வெளியே வந்து பிரதான சாலைக்கு வந்ததும் அவனை உரசிக் கொண்டு ஒரு மாருதி கார் வந்து நின்றது. ஜெகன் நாயக்கைப் பார்த்துச் சிரித்தான்.

நாயக் காரில் ஏறி உட்கார்ந்தான். துப்பாக்கி பத்திரமாக இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

‘‘எங்கே?’’ என்று கேட்டான் ஜெகன்.

''காரின் நம்பர் ப்ளேட்டை மாற்றி விட்டாயா?''

''விட்டேன்.''

''எண்ணூருக்குப் போ.''

எண்ணூரில் இருந்த கிளியோபாட்ரா கிளப் அந்த நேரத்தில் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது.

ஒரு பெரிய அறையில் கார்ப்பெட்டின் மேலிருந்த மேஜைகள், நாற்காலிகள், ஷாண்டலியர்கள், சன்னமான வெளிச்சம். ஓரத்தில் இருந்த பார். விமான பணிப் பெண்களைப் போல உடை உடுத்தியிருந்த பெண்கள் ஐந்து பேர் டேபிளுக்கு டேபிள் விஸ்கி, ஒயின், பிராந்தி, சிக்கன், மட்டன் என்று சகலத்தையும் பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

அந்த ஹாலின் மூலையில் இருந்த டேபிள் ஒன்றில் அலெக்ஸாந்தர் சீட்டுக்களைக் கையில் வைத்திருந்தான். அவனது மூளை தீவிரமாக ஆட்டத்தில் ஆழ்ந்திருந்தது. நிறைய ஜெயித்திருந்தான். அலெக்ஸாந்தருக்கு ஓய்வு என்றால் சீட்டாட்டம். மதுவில் மயங்குவதை விட, மாதுவில் அமிழ்வதை விடவும் அதிக இன்பத்தை அவனுக்கு சீட்டாட்டம் தந்து கொண்டிருந்தது.

அவனுக்கு எதிரில் அமர்ந்திருந்தவனின் முகம் வெளிறிப் போயிருந்தது.

''ஷோ'' என்றான் கதவிடுக்கில் அகப்பட்டு பயந்த எலியின் குரலில்.

அலெக்ஸாந்தர் சிரித்துக் கொண்டே சீட்டுக்களை மேஜை மீது விரித்து வைத்தான்.

மூன்று ஏஸ்கள்.

அலெக்ஸாந்தர் மேஜையில் இருந்த அத்தனை டோக்கன் களையும் கவர்ந்து கொண்டான். அவன் எப்போதுமே இப்படித்தான் எடுத்த வேலையை கச்சிதமாக முடிப்பான்.



அலெக்ஸாந்தர் எழுந்தான். கவுண்டரை அடைந்தான். டோக்கன்களுக்குப் பதிலாக பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

அவன் வெளிப்படுவதற்காக ஒரு பெண் கதவு திறந்தாள். அலெக்ஸாந்தர் அவள் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு நன்றியை உதிர்த்ததை அந்தப் பெண் வரவேற்றாள்.

அலெக்ஸாந்தர் வெளியே வந்தான்.

கார் பார்க்கிங்கில் தன் காரைத் தேடினான். வலது மூலையில் அவனது ஏ.ஸி. ஹோண்டா கார் அவன் கை பட்டுத் திறப்பதற்காகக் காத்திருந்தது. அதை நாடிச் சென்றான். கதவைத் திறந்தான். ஏறி அமர்ந்து காரைக் கிளப்பினான்.

பார்க்கிங்கின் இடது மூலையில் ஏற்றி விடப்பட்டிருந்த கண்ணாடிக்குப் பின்னால் இருந்த நாயக் பற்களைக் காட்டிச் சத்தமின்றிச் சிரித்தான். இரையைக் கண்டு விட்ட சிறுத்தையின் மகிழ்ச்சியைப் போல் இருந்தது அந்தச் சிரிப்பு.

''பார்த்தாயா?'' என்றான் நாயக்.

''ஆச்சரியமாக இருக்கிறது. அலெக்ஸாந்தர் எங்கே இருக்கிறான் என்று யாருக்குமே தெரியாதபோது உனக்கு மட்டும் தெரிந்திருப்பது மகா ஆச்சரியமாக இருக்கிறது.''

''பணம் நுழையாத இடமும் இல்லை. வீக்னஸ் இல்லாத மனிதனும் இல்லை.''

''இப்போது என்ன செய்யட்டும்?''

''அவனைத் தொடர். கிளியோபாட்ராவில்தான் அவன் இருப்பான் என்று சொன்ன என் நண்பனுக்கு ஒரு பத்தாயிரம் கொடுக்க வேண்டும். ரன்ஜித்திடம் வாங்கி வா.''

மாருதி ஒரு குலுக்கலுடன் புறப்பட்டு ஏ.ஸி. ஹோண்டா அக்கார்டரைத் தொடரத் தொடங்கியது. தொந்தரவற்ற பின் தொடர்தல்.

முன்னால் போய்க் கொண்டிருந்த அலெக்ஸாந்தர் கொஞ்சம் கூட சந்தேகமின்றி காரை சீரான வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்தான். ராயபுரம் அருகே வந்தவன் ரயில்வே ஓவர் பிரிட்ஜ் வழியாகக் காரை செலுத்தாமல், கடற்கரையோரமாக ரயில் பாலத்தைக் கடந்து செல்லலாம் என்று நினைத்தது அவனது முதல் முட்டாள்தனம்.

ரயில் பாலத்திற்கருகே இருந்த கேட் மூடியிருந்தது. இரவு ஒரு மணி. அந்த க்ராஸிங்கில் அவனைத் தவிர வேறு யாரும் பாலத்தைக் கடக்கக் காத்திருக்கவில்லை.

அலெக்ஸாந்தர் காரை நிறுத்தினான். பின்னால் வந்த கார் நிழலில் புலி போல் ஒதுங்கியது. அந்த நேரத்தில் அந்த இடத்திற்குப் பேய் கூட வரப் பயப்படும் போல் ஒரு அமைதி நிலவியது.

கேட்டின் முகப்பில் ஒரு சிகப்பு விளக்கு எரிந்தது. அலெக்ஸாந்தரிடம் அபாயம் என்று சொல்வது போல.

தூரத்தில் ஒரு டீசல் என்ஜினின் அபார 'பாங்க்' ஒலி அந்த இடத்தின் அமைதியைக் குலைத்தது.

நாயக் காரில் இருந்து நழுவி இறங்கினான். கைகளில் கிளவுஸ் மாட்டியிருந்தான்.

ஹோண்டா அக்கார்டை நெருங்கினான். ரயில் பாலத்தில் ஒரு நீ££ளமான சரக்கு ரயில் தன் டீசல் மூக்கை நீட்டிக் கடந்தது.

தண்டவாளத்தின் மீது சக்கரங்கள் உராய்ந்து, அமிழ்ந்து ஏகப்பட்ட இரைச்சல்களை எழுப்பின.



க்யீங்க். க்யீங்க். தடக். தடக். தடால். தடால். தடக். தடக். க்யீங்க். க்யீங்க்.

நாயக்கின் முழங்கை ஹோண்டா அகார்டின் டிரைவிங் சீட் கண்ணாடியை ஒரே மோதலில் உடைத்தது. உடைத்த அடுத்த கணம் அது கதவின் லாக்கை விடுவித்தது. கதவு திறந்து, திகைத்துப் போன அலெக்ஸாந்தர் தன் காரின் டாஷ் போர்டில் வைத்திருந்த துப்பாக்கியை எடுக்கும் முன்னர், நாயக்கின் கை அவன் மூக்கை உடைத்தது.

'ஐயோ' என்று அலறிய அலெக்ஸாந்தரின் அலறல் எங்கேயோ காணாமல் போனது. நாயக் அலெக்ஸாந்தரின் ஒரு கையைப் பற்றி, அசௌகர்யமான ஒரு கோணத்தில் மடக்கினான். கட்டக்.

அலெக்ஸாந்தர் காலால் ஆக்ஸிலேட்டரையும், க்ளட்ச் பெடலையும் உதைத்தான். அவனது ஒரு கை, காரின் கியர் ராடை பலங் கொண்ட மட்டும் இழுத்து விடுவித்தது.

நாயக் தன்னுடைய வலுவான கையை அவன் கழுத்தில் பதித்தான்.

அழுத்தினான். அலெக்ஸாந்தரின் கை காரின் முன் கண்ணாடியை உதைத்தது. இலக்கின்றி கியர் ராட் இப்படியும் அப்படியுமாக அலைந்தது. அவன் கண்கள் முகத்திலிருந்து பிதுங்கின. நரம்புகள் அத்தனையும் உச்சக் கட்டம் வரை இழுத்துக் கொண்டு தளர்ந்தன. ஒரேயடியாகத் தோய்ந்தன.

நாயக் அலெக்ஸாந்தரின் பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்தான். கொஞ்சம் காரிலேயே சிதற விட்டான். மிச்சத்தை தன் கோட் பாக்கெட்டில் செருகிக் கொண்டு, மாருதியில் ஏறி உட்கார்ந்தான்.

சரக்கு ரயிலின் கடைசி பெட்டி அந்த இடத்தைக் கடந்து போய், மாருதி அந்த இடத்தில் சின்ன அவசர வட்டம் அடித்து வந்த வழியே திரும்பி இருந்தது.



9

நாயக்கின் அடுத்த இலக்கு மாலிக். மாலிக் பற்றி துல்லியமாக விசாரித்தான்.

நாயக் ரன்ஜித்திடம் சிறு வயதிலிருந்து வளர்ந்தவன். குறுக்கு வழி பிறப்பினால் தாயினால் நிராகரிக்கப்பட்டவன். அதனால் ரன்ஜித்தை தான் அவன் தாய், தந்தை குரு, தெய்வம் என்று எல்லா கோணங்களில் இருந்தும் பார்த்தான்.

ரன்ஜித் சொன்ன வேலையை வெகு நேர்த்தியாக, வெகு கச்சிதமாக முடிப்பதில் வல்லவன். ரன்ஜித்தின் சாம்ராஜ்யத்தில் அவன் அங்கீகரிக்கப்பட்ட போதே ரன்ஜித்தின் எதிரி யார். அவன் பலம் என்ன? பலவீனம் என்ன? என்று எல்லா வகைகளிலும் கற்றுத் தேர்ந்தவன்.

அதனாலேயே ரன்ஜித்தின் ஆட்களின் நடமாட்டத்தை விடவும் ஜெயதேவின் ஆட்களைப் பற்றிய நடமாட்டத்தை மிகவும் அதிகமாகத் தெரிந்து வைத்திருந்தான்.

ரன்ஜித் அவனுக்கு அவ்வப்போது அன்பளிப்பாகக் கொடுக்கும் பணம் எல்லாவற்றையும் தனது இன்ஃபார்மர்களுக்குக் கொடுப்பதிலேயே செலவழித்து வந்தான்.

இப்போதுகூட அப்படித்தான். விஸ்வம், பண்ணி, ஜோ மூன்று பேரும் சாய்க்கப்பட்டார்கள் என்று தெரிந்தவுடனேயே, அவர்களைக் கொன்றது யாராக இருக்க முடியும் என்று தீர்மானித்து விட்டான்.

நிச்சயம் மோகன், மாலிக், அலெக்ஸாந்தர் தான் என்று அவன் தீர்மானித்து விட்டான். ரன்ஜித்திடமிருந்து அவனுக்கு அழைப்பு வரும் என்று தெரிந்து அடுத்த கணத்தில் இருந்தே அவர்களின் நடமாட்டத்தைப் பற்றி தனது இன்ஃபார்மர்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆரம்பித்தான்.

அதன்படி முதல் இலக்கு அலெக்ஸாண்டர்.

முதல் இலக்கை அவன் குறி பார்த்து அடித்ததும் இரண்டாவது இலக்கான மாலிக்கைப் பற்றிக் கேட்டான்.

மாலிக் இப்போது கேரள கோவளத்தில் இருந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் 'குஷி'யாக ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருந்த செய்தி அவனை எட்டியது.

நாயக் செய்தி கிடைத்தபிறகு ஒரு வினாடி கூடத் தாமதிக்கவில்லை. முதல் நாளிரவு ராயபுரம் ரயில்வே கேட்டருகே நடந்த சம்பவத்தைப் பற்றிய செய்தியில், அது பணத்திற்காகச் செய்யப்பட்ட கொலை என்று போலீஸ் அறிவித்திருந்தது. மேலும் அந்த விஷயத்தில் போலீசார் தீவிரமான விசாரணை செய்து கொண்டிருப்பதாகவும் போலீஸ் அந்து செய்திக் குறிப்பில் கூறியிருந்தது.

நாயக் சிரித்துக் கொண்டான். போலீசின் மூக்கிற்குத் தன் வாசனை எட்டவில்லை. அது போதும்.

திருவனந்தபுரத்திற்குச் செல்லும் முதல் விமானத்தில் பறந்தான். விமானம் திருவனந்தபுரம் சென்று தரையைத் தொட்டுத் திரும்பி நின்றவுடன் விமானத்திலிருந்து முதல் ஆளாக நாயக் இறங்கினான்.

கையில் ஒரே ஒரு சூட்கேஸ்.

நடந்து, நிதானமாக வந்து ஒரு டாக்ஸி பிடித்து, ''ஃபைவ் ஸ்டார் கோவளம்'' என்றான். தனது ஒட்டுத் தாடியை மெல்ல வருடிக் கொண்டான்.

ஹோட்டல் ஃபைவ் ஸ்டார் அவனை வரவேற்றது. நாயக்கின் முகத்தில் இருந்த அரைக் கண்ணாடியும், கன்னத்தில் எல்லாம் விழுந்து புரண்ட பாதி நரைத்த முடியும், அவனது லேசான நொண்டி நடையும் அவனை ஒரு பைத்தியக்கார புரொஃபசரைப் போல் காட்டினாலும், ஃபைவ் ஸ்டாரின் ரிசப்ஷனில் இருந்தவளுக்குத் தேவையானது நாயக்கின் பணம்.

நாயக் அதை அதிகமாகவே செலவு செய்தான். அதனால் நாயக்கிற்கு கடலைப் பார்த்த பால்கனி கொண்ட ஒரு சூட் கிடைத்தது.

நாயக் தன் சூட்டை அடைந்ததும் கதவை உட்புறமாகச் சாத்திக் கொண்டான். பால்கனியில் வந்து அமர்ந்தான். அவன் கைகளில் சக்தி வாய்ந்த பைனாகுலர்கள் இருந்தன.

அந்த பைனாகுலரால் நாயக் கடற்கரையை மிக உன்னிப்பாக சீப்பால் வருடுவது போல் வருடினான்... மெதுவாக, மிக மெதுவாக, இடது கோடியிலிருந்து வலது கோடி வரை. வலது கோடியிலிருந்து இடது கோடி வரை.

நாயக்கின் பைனாகுலர்களில் கடல் தெரிந்தது. கடலை ஒட்டியிருந்த கரை தெரிந்தது. கோவளத்தின் கடற்கரையில் சூரியக்குளியல் எடுத்துக் கொண்டிருந்த இந்திய, அ.இந்திய ஜோடிகள் தெரிந்தார்கள்.

மாலிக் கோவளத்திற்கு எதற்கு வந்திருக்கிறான்? ஓய்வெடுக்க. அதுவும் ஜாலியாக ஓய்வெடுக்க. அதுவும் ஒரு இளம் பெண்ணுடன் குஷியாய் ஓய்வெடுக்க என்ன செய்வான்?



எவ்வளவு நேரம்தான் அறையிலேயே அடைந்து கிடப்பான். ஜலக்கிரீடைக்காவது அறையை விட்டு வெளிப்பட்டுத்தான் ஆக வேண்டும். அப்போதுதான் அவனைச் சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்தான் நாயக்.

மாலிக்கை அவன் அறையிலேயே சந்திக்கலாம். காரியத்தை முடிக்கலாம். ஆனால், அது தலைவலியாகப் போகும். போலீஸ் வந்தால், யார் யார் தங்கியிருந்தார்கள் என்றெல்லாம் விசாரிக்கத் தொடங்கும். ஏதாவது ஒரு [illegible]க்கலில் தான் சுட்டிக் காட்டப்பட்டாலும், படலாம் என்ற சந்தேகம் அவனுக்கு இருந்ததால், நாயக் மாலிக்கை ஹோட்டலுக்கு வெளியே சந்திக்க ஆசைப்பட்டான்.

காலையிலிருந்து மாலை ஆறு முப்பதுக்கு சூரிய அஸ்தமனம் முடியும் வரை கண்களைக் கொஞ்சம் கூட [illegible]த்தாமல் பார்த்தும் கூட நாயக் மாலிக்கை பைனாகுலர் [illegible]டத்தில் பார்க்க முடியவில்லை. ஒருவேளை மாலிக் இந்த ஹோட்டலுக்கு வரவே இல்லையா?

அவனுக்குத் தகவல் கொடுத்த இன்ஃபார்மரின் குரல் அவன் நினைவில் வந்தது. இதுவரை அந்தக் குரல் தப்பே செய்ததில்லை. இன்ஃபார்மர் கொடுத்த செய்தியில் ஒன்றுகூட இதுவரை பொய்யானதே இல்லை.

அதனால் நம்பிக்கை இழக்காமல் நாயக் காத்திருந்தான்.

ஆறு முப்பத்தைந்திற்கு மாலிக் தெரிந்தான். வெறும் நீச்சல் ஷார்ட்ஸ் மட்டும் போட்டுக் கொண்டு கடலை நோக்கி ஓடினான் அவன். அவன் பின்னால் அந்தப் பெண். [illegible]. அழகாத்தான் இருந்தாள். அவள் ஓடியபோது அவளது இடுப்பின் வளைவுகள் அலைபோல் எழுந்து எழுந்து தாழ்ந்தன. அவளுக்கு அதிகம் போனால் இருபது வயது இருக்கலாம். நல்ல துடிப்பான, இளமையான பெண்.

ஆனால், நாயக்கிடம் அவள் எந்த பாதிப்பையும் ஏற்படுத்த வில்லை.

நாயக் எழுந்தான். வார்ட்ரோபைத் திறந்து ஷார்ட்ஸைத் தேர்ந்தெடுத்தான். அணிந்திருந்த உடைகளைத் துறந்து விட்டு ஷார்ட்ஸ் மட்டும் அணிந்துகொண்டு இறங்கினான்.

நாயக் கடற்கரையை நோக்கி நடந்ததை ஹோட்டலில் இருந்த யாரும் கவனிக்கவில்லை.

கடற்கரையில் ஒரு டூரிஸ்ட் பஸ் கூட்டத்தைக் கொண்டு வந்து இறக்கியிருந்தது. பஸ்ஸில் இருந்தவர்கள் எல்லாம் ஒதுக்குப்புறமான ஒரு கேரள கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

கடலில் அரை நிர்வாணமாகக் குளித்துக் கொண் டிருந்தவர்களை அவர்கள் வாய்பிளந்து பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

நாயக் அவர்களிடையே ஊடுருவி கடலை நோக்கி நடந்தான்.

மாலிக் ஐம்பதடி தூரத்தில் கடலில் உற்சாகமாக நீச்சல் பழகிக் கொண்டிருந்தான்.

''ஸ்வீட்டி... கம் ஹியர்'' என்று அவனுடன் இருந்த பெண்ணை அழைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக ஆழமான பகுதிக்குப் போய்க் கொண்டிருந்தான்.

நாயக் கடலில் நடந்தான். படகின் முகப்பு போல் கைகளைக் குவித்து நீட்டி சர்ரென்று நீரைப் பிளந்து கொண்டு பாய்ந்தான்.

நாயக், ஒரு காவல் நாய்போல் நீரில் முன்னேறினான். அவன் தலைமட்டும் நீருக்கு வெளியே இருந்தது. உடல் முழுக்க நீரில் அமிழ்ந்திருந்தது.



கிட்டத்தட்ட ஐம்பதடி போனவுடன் நாயக் சர்ரென்று நீருக்குள் விலாங்கு மீனைப் போல நழுவினான்.

மேலே நிலா மேகத்திற்குள் ஒளிந்து கொண்டது. நட்சத்திரங்கள் 'திக்' 'திக்' நெஞ்சுடன் பார்க்கத் தொடங்கின.

நாயக்கின் காதுகளில் மாலிக்கின் உற்சாகமான குரல் மிக மெல்லியதாகக் கேட்டது. மேலே பார்த்தான். உப்பு நீர்ப்பட்டு அவன் கண்கள் எரிந்தன.

நாயக் அந்த மாதிரியான சின்னச்சின்ன சித்ரவதைகளுக்கு நிறையப் பழகியிருந்தான். அதனால், கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு பார்ப்பது அவனுக்கு ஒன்றும் சிரமமான வேலையாகத் தெரியவில்லை.

மாலிக்கின் கால்கள் தெரிந்தன. நீரை மோதி மோதி மேலேறிய கால்கள். பக்கத்திலேயே அந்தப் பெண்ணின் இளமையான கால்கள்.

நாயக் சர்ரென்று மேல் எழும்பினான். மாலிக்கின் கால்கள் இரண்டையும் பற்றி, ஒரு துப்பாக்கிக் குண்டு நீரில் கீழ்நோக்கிப் பாய்ந்து செல்லும் வேகத்தில் கீழிறக்கினான்.

மாலிக் என்ன நடக்கிறது என்று தெரியாமல் கைகள் இரண்டையும் மேல் நோக்கித் தூக்கிய வண்ணம் தண்ணீரில் இறங்கினான்.

''டார்லிங்'' என்று அந்தப் பெண்ணின் கொஞ்சலான குரல் கேட்டது.

நாயக் மேலும் கீழே இறங்கினான். இப்போது மாலிக் திமிறத் தொடங்கினான். மாலிக் நிலத்தில் யானை. எதிரில் வந்து நிற்கும் எதிரியைத் தைரியமாகச் சந்திக்கும் மனநிலை கொண்டவன். ஆனால், நீரில்... ம்ஹூம்ஹூம்.

நீருக்குள்ளிருந்து ஏதோ, முதலையோ, சுறாவோ அவன் கால்களைப் பற்றிவிட்டதாக நினைத்துப் பீதியடைந்தான். கால்களை உதறிக் கொண்டான். கைகளை வளைத்து நாயக்கின் வலுவான கைகளைப் பற்றப் பார்த்தான்.

கல்ப், கல்ப், கல்ப்.

உப்பு நீர் மாலிக்கின் தொண்டைக்குள் இறங்கியது.

''டார்லிங்... டோண்ட் ப்ளே... எனக்கு பயமாக இருக்கிறது... வந்துவிடு'' என்றாள் அந்தப் பெண்.

நாயக், மாலிக்குடன் சேர்ந்து சென்று நீர்மட்டத்தைத் தொட்டான். கீழே மணல், சிப்பிகள், மீன்கள் பயந்து கொண்டு மேலேறின. இருட்டு. நிலவின் கதிர்கள் கூட தொட முடியாத ஆழத்தில் அந்த இருட்டில் நாயக்கிற்கும், மாலிக்கிற்கும் நடந்த புலி - மான் போராட்டத்தில் மாலிக் வெகு சீக்கிரம் தோற்றுப் போனான்.

அவன் கழுத்தை நெறிக்க வேண்டிய அவசியம் இன்றி, மூச்சுக் குழலில் காற்றுப் போகாமல், பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியமின்றி, கத்தியின்றி, ரத்தமின்றி, இதுநாள் வரை தான் பூமியில் வாழ்ந்ததற்கான எந்தவித அடையாளமுமின்றி மாலிக் கடலின் மடியில் நிரந்தரமாகத் தூங்கத் தொடங்கினான்.

அவன் உடல் எழும்ப இன்னும் சற்று நேரம் பிடிக்கும் என்று தீர்மானித்துக் கொண்டு நாயக் சரேலென்று மேல் எழும்பினான்.

வேறு திசையில் மேல் எழும்பி, நீர்மட்டத்திற்கு மேலே வந்து இவ்வளவு நேரம் நெஞ்சில் தேக்கி வைத்திருந்த மூச்சை ஹாஹா என்று விட்டான்.



நீச்சலில் களைத்துப் போனவர்கள் கரையேறி, ஹோட்டலின் நல்ல நீர் நீச்சல் குளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்க அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

நாயக் நல்ல நீரில் குளித்து முடித்து, நன்றாக உடை உடுத்துக் கொண்டு, ரெஸ்டாரண்டில் போய் உட்கார்ந்து இரவு உணவிற்கு ஆர்டர் செய்தபோது, மாலிக்கின் உடல் கரையில் ஒதுங்கியதை சர்ச் லைட் மூலம் கண்டு பிடித்தது தெரிந்து ஒரு குரூரத் திருப்தியடைந்தான்.

மாலிக்கின் உடலைப் பார்ப்பதற்காக எழுந்து ஓடியவர்களுடன் சேர்ந்துகொண்டு அவனும் கடற்கரை நோக்கி நடந்தான்.



10

அலெக்ஸாண்டரும் மாலிக்கும் அடுத்தடுத்து இறந்த செய்தி கேட்டு, மோகன் திகைத்துப் போனான். ஜெயதேவை போனில் தொடர்பு கொண்டான்.

''சார்...?''

''என்ன மோகன்?''

''அலெக்ஸாண்டர்... மாலிக்.''

''தெரியும். நான் என்ன சொன்னேன்? அவர்களை எச்சரிக்கை செய்யச் சொன்னேன் இல்லையா?'' என்று ஜெயதேவின் குரல் மிகச் சாதாரணமாக போனில் கேட்டது.

''நான் அவர்களை வார்ன் பண்ணினேன் சார்.''

''அப்புறம்... இரண்டு பேரும் எப்படிச் செத்தார்கள்? அலெக்ஸாண்டர் ராயபுரம் ரயில்வே கேட்டருகே

திருடர்களால் தாக்கப்பட்டுச் செத்துப் போயிருக்கிறான் என்று போலீஸ் சொல்கிறது. மாலிக் கடலில் மூழ்கி உயிரிழந்தான் என்று கேரளா போலீஸ் ரிப்போர்ட். நானும், நீயும்தான் நம்பப் போவதில்லை. ரன்ஜித்தின் ஆட்கள்தான் இதைச் செய்தார்கள் என்று சொன்னால் போலீஸ் நம்பாது. ஆதாரம் கேட்கும். நம்மால் எதுவும் தரமுடியப் போவதில்லை. துப்பாக்கி தூக்குகிறவனுக்கு அதனால்தான் சாவு என்று தெரியுமில்லை. போ, போனவர்கள் திரும்ப வர மாட்டார்கள். நீயாவது எச்சரிக்கையாக இரு. இன்னும் ஒரு மாதத்திற்காவது நீ பத்திரமாக இருக்க வேண்டும்...''

''அதற்கு மேல் ரன்ஜித்தின் ஆட்கள் என்னைச் சும்மா விட்டுவிடுவார்களா?''

''ரன்ஜித்தின் சரக்கை நாம் அடித்துவிட்டோம். அதை நான் அனுப்ப வேண்டிய இடங்களுக்கு அனுப்பி விட்டேன். பணமும் வந்து சேர்ந்துவிட்டது. இரண்டு கோடி. ரன்ஜித்திற்கு அடுத்த தவணை சரக்கு வந்துதான் திரும். அந்த சரக்கை இம்முறை பத்திரமாகக் கொண்டு வருவதில் ரன்ஜித் எச்சரிக்கையாக செயல்படுவான். தன் ஆட்கள் அத்தனை பேரையும் அதில்தான் ஈடுபடுத்துவான். அப்போது உன்னை மறந்து போவார்கள். அடுத்த முறை, அதற்கடுத்த முறை என்று அவர்கள் கவனம் தொழிலில் பதிந்தால் நிச்சயம் உன்னை யாரும் கவனிக்கப் போவதில்லை. மேலும் நீதான் ரன்ஜித்தின் சரக்கைக் கடத்தி அவன் ஆட்களை சுட்டாய் என்று ரன்ஜித்திற்கு எப்படித் தெரியும்? மாலிக்கும், அலெக்ஸாந்தரும் இறந்துபோனது நிஜமாகவே விபத்தாகக் கூட இருக்கலாம். எதற்கும் நீ எச்சரிக்கையாக இரு...''

''யெஸ் சார்'' என்றான் மோகன். பொம்மை போல ரிசீவரை வைத்தான்.



அவனுக்குப் பின்னால் இருந்து யாரோ அவனைக் கத்தியால் குத்துவது போல் உணர்ந்தான்.

திடுக்கிட்டுத் திரும்பினான் ஃப்ளவர் வாஸின் நிழல்தான் இருந்தது. அவனைப் பயமுறுத்தி இருந்தது. மோகன் விறைத்துப் போனான். உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அவனை ரன்ஜித்தின் ஆட்கள் தேடிக் கொண்டு வரப்போகிறார்கள் என்று அவனுடைய உள்ளுணர்வு கூறியது.

எப்படியும் அவர்களிடமிருந்து தப்பிக்க வேண்டும். தப்பித்தே ஆகவேண்டும்.

மோகன் ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

முதல் வேலையாகத் தான் மட்டும் தனியாக வசித்துக் கொண்டிருந்த தன் சி.ஐ.டி. நகர் பங்களாவைக் காலி செய்தான்.

இந்த மாதிரியான சந்தர்ப்பங்களுக்காகவே அவன் தனக்கென்று தேடி வைத்துக் கொண்டுள்ள ஒரு எலிப் பொந்தை மறுபடியும் வாடகைக்கு எடுத்தான்.

அவனுடைய எலிப்பொந்து திருவல்லிக்கேணியில் இருந்தது.

திருவல்லிக்கேணியில் இருக்கும் காயிதே மில்லத் சாலை நெடுக சிறுசிறு சந்துகளைக் கொண்டது. அந்தச் சந்துகளில் ஒன்று முத்தாரப்பன் சந்து.

முத்தாரப்பன் சந்து காயிதே மில்லத் சாலையில் போன நூற்றாண்டில் இருந்தே கட்டிக் கொண்டிருக்கும் ஒரு [illegible]ட்டர் காம்ப்ளக்ஸின் நேர் எதிர் சந்தாக இருந்தது. [illegible]ட்டர் காம்பளக்ஸ் இன்னும் முற்றுப் பெறவில்லை. இரும்பு எலும்புகளும், சிமெண்ட் சதையுமாய் இருந்த

அதனைச் சுற்றி, சாரம் கட்டி, ஓலைத் தட்டி கட்டி, சாலையில் பயணம் செய்பவர்களுக்கு, சாரத்தின் பின்னால் என்ன இருக்கிறது என்று தெரியாவிட்டாலும் கோவிந்தப்பன் அங்கேதான் தன் மனைவியுடனும், மச்சினியுடனும் இரண்டு மகன்களுடனும் அடைந்து கிடந்தான்.

கோவிந்தப்பன் இந்தி கலந்த தமிழ் பேசுபவன். ரோடு ரோடாகப் பிழைப்பு நடத்துபவன். தன் குழந்தைகளும், மனைவியும், மச்சினியும் தானும் அணிந்து கொள்ள ஒரு செட் நல்ல உடையில்லையே என்று ஏங்குபவன்.

கோவிந்தப்பனின் பிழைப்பு பற்றியும், ஏக்கம் பற்றியும் இன்னும் சில பக்கங்கள் கழித்துத் தெரிந்து கொள்வதற்கு முன் இப்போது முத்தாரப்பன் சந்தும், மோகனின் எலிப்பொந்தும்.

முத்தாரப்பன் தெருவில் நுழைந்தவுடன் சந்து ஓரத்தில் கட்டியிருக்கும் எருமை மாடுகள் வரவேற்கும். எருமைகள் தவிர பொதுமக்களும் அந்தச் சந்தின் முனையில் எருமைகள் போல் நின்று கொண்டே....

வேண்டாம்... நம் கதைக்கு அது அப்பாற்பட்ட விஷயம். மூக்கைக் கர்ச்சீப்பை வைத்துப் பொத்திக் கொண்டோ, அல்லது விரல்களால் அழுந்தப் பிடித்துக் கொண்டோ, சந்தில் ஒரு ஐம்பது மீட்டர் சென்றதும் சந்து விசாலமாகி விடும். மார்க்கெட் ஏரியா. கறிகாய்கள், கீரை வகைகள், மண்பாண்டங்கள். கோலமாவு என்று வர்ஜா வர்ஜியமின்றி அனைத்துப் பொருட்களும் விற்கப்படும் வாங்கப்படும் இடம்.

அதன் இதயத்தில்தான் விடுமுறை விடுதி அமைந்திருந்தது. இங்கிலீஷ்காரன் ஒருவனால் ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்றில் திட்டம் போட்டு



கட்டப்பட்ட விடுதி அது. அன்றைக்கு வைக்கப்பட்ட பெயர் ஹாலிடே இன். சுதந்திரத்திற்குப் பிறகு விடுமுறை விடுதியாகிவிட்டது.

விடுமுறை விடுதி கிட்டத்தட்ட மூன்று கிரவுண்ட் பரப்பளவில் எழுப்பப்பட்ட ஒரு கல்கட்டிடம். ஏழாயிரத்து இருநூறு சதுர அடியிலும் கட்டிடம் தன் அஸ்திவாரத்தை வைத்துக் கொண்டிருந்தது.

ஐந்து மாடிகள், லிஃப்ட் இருக்கிறது. விடுதியின் சொந்தக்காரர் பழமை விரும்பி என்பதால், இன்றும் கட்டிடம் பூச்சுவேலை எதுவும் பார்க்காமல், டியூப்லைட் கியூப்லைட் என்று நவீன மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல், முப்பத்தைந்து வயதாகியும் கல்யாணமாகாத கன்னியின் முகத்தைப் போல கொஞ்சம் முதிர்ந்துபோய் வற்றலாய்க் காட்சி அளித்தது.

மோகன் அந்த விடுதியின் ஐந்தாவது மாடியில் இருக்கும் நூற்று பத்தாம் நம்பர் ரூமை ஆக்கிரமித்தான். அந்த ரூம் பால்கனி வசதியுடன் இருந்தது. அங்கிருந்து கீழே பார்த்தால், சாலையின் சுறுசுறுப்பான மக்கள் தெரிவார்கள். கலைந்த எறும்புப் புற்று போல் எப்போதும் காட்சியளிக்கும் அந்தத் தெருவைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்து இருப்பது மோகனுக்கு மிகவும் பிடித்தமான ஒரு பொழுது போக்கு.

ஜெயதேவ் அவனைப் பதுங்கச் சொன்னவுடன் மோகன் அந்த விடுதியைத் தான் தேர்ந்தெடுத்தான். யாராலும் எதிர்பார்க்க முடியாத ஒரு இடம்.

ஜெயதேவுக்கே கூட அவன் அங்கேதான் தங்கியிருப்பான் என்ற விவரம் இதுநாள் வரை தெரியாது.

மோகன் அந்த அறைக்கு தற்காலிகமாகக் குடிவந்த போது, தன் பெயரை கிருஷ்ணகாந்தன் என்று எப்போதும் போல மாற்றிக் கொடுத்தான். எப்போதும் அவன் தனியாக வந்து தங்குவது அவன் பழக்கம். இந்த முறை கூடவே இரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு வந்திருந்தான்.

முகுந்த், சிஷ்யா.

இருவருக்கும் தமிழ் தெரியாது.தெரிந்த விஷயம் ஒன்றே ஒன்று தான். துப்பாக்கியால் சுடுவது. ஒரு நெரிசலான மார்க்கெட்டில் இருக்கும் ஆயிரக்கணக்கான மக்களில் கலந்திருக்கும் சிவப்புக்காலர் சட்டைக்காரனின் மூளை என்று சொன்னால், சிவப்புக் கலர் சட்டைக்காரனின் மூளையை மட்டும் தனியாகத் தங்கள் துப்பாக்கிக் குண்டால் எடுக்கும் திறமை இருவருக்குமே பொது. மார்க்கெட்டில் ஒருவேளை நான்கு சிவப்புக்காலர் சட்டைக்காரர்கள் இருந்தால் நான்கு பேரின் மூளைகளையும் தனித்தனியாகக் கழற்றி விடுவார்கள்.

அவர்கள் தொழில் சுடுவது. இலக்குத் தப்பாமல் சுடுவது. அர்ச்சுனன் இருட்டிலும் அம்பை தன் இலக்கு நோக்கி விடப் பழகிக் கொண்டவன் போல அவர்கள் இருவரும் அடர் இருட்டிலும் குறிபார்த்துச் சுட்டுத் தங்கள் இலக்குகளைச் சாய்க்கத் தெரிந்தவர்கள்.

அந்த இருவரும் மோகனிடம் அவ்வப்போது பாதுகாப்பிற்காக வந்திருந்து செயல்படுபவர்கள். அவர்களுடைய ஒரு நாளைய கூலி ஐயாயிரம். இருவருக்கும் சேர்த்து பத்தாயிரம் ரூபாய்.

மோகன் கொஞ்சம் பயந்திருந்தான் என்றுதான் சொல்ல வேண்டும். அலெக்ஸாந்தரையும், மாலிக்கையும் வீழ்த்திய வர்கள் எப்படியும் தன்னையும் குறி வைப்பார்கள் என்பதில்



அவன் சந்தேகம் எதுவுமின்றி இருந்ததால்தான் அவர்கள் இருவரையுமாக காசு போனால் கூடப் பரவாயில்லை என்று ஒரு பாதுகாப்பிற்காக வைத்துக் கொண்டான்.

யார் அவனைச் சந்திக்கப் போகிறார்கள் என்றுதான் அவனுக்குப் புரியவில்லை. ரன்ஜித்தின் ஆட்கள் அத்தனை பேரையும் அவனுக்குத் தெரியும். பெரும்பாலானவர்கள் சரக்குகளைக் கடத்துவதில், கொண்டுபோய்ச் சேர்ப்பதில், விற்பதில் தங்கள் திறமையை காட்டுபவர்கள். கொலை செய்வதில்? ரன்ஜித்தின் ஆட்கள் தைரியசாலிகள். நேருக்குநேர் எதிரிகளைச் சந்தித்தால் துப்பாக்கியால் சுடுவார்கள். கத்தியால் குத்துவார்கள். சைக்கிள் செயின்களால் கழுத்தை இறுக்கிப் பிடிப்பார்கள். சோடா பாட்டிலை உடைத்து வயிற்றில் செருகுவார்கள். அதெல்லாம் நேருக்கு நேர் என்ற நிலை வரும்போது.

ஆனால், ஒளிந்திருக்கும் ஒருவனைத் தேடிக் கண்டு பிடித்து அவனைத் தீர்த்துக் கட்டி அதை விபத்து போல் மாற்றிக்காட்டக் கூடிய சாதுர்யம் ரன்ஜித்தின் ஆட்களில் யாருக்கு இருக்கிறது என்றுதான் அவனுக்குப் புரியவில்லை.

அதனாலேயே, அவன் தன்னைத் தேடி யார் வரப் போகிறார்கள் என்று புரியாத நிலையில் முகுந்தையும், சிஷ்யாவையும் துணைக்குச் சேர்த்துக் கொண்டான்.

தன்னுடைய எலிப்பொந்தான ஐநூற்றுப் பத்தில் நுழைந்து கதவு சாத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தான். முகுந்தும், சிஷ்யாவும் அந்த அறைக்கு வெளியே இருந்த வராந்தாவில் இப்படியும் அப்படியுமாக உலவிக் கொண் டிருந்தார்கள்.

மோகனின் அறைக்குள் அவர்களே நுழைந்து மோகனின் தேவைகளை அவ்வப்போது கொண்டு வந்து சேர்த்தார்கள்.

காலை உணவு, பிற்பகல் உணவு, இரவு உணவு... அப்புறம் குடிக்க விஸ்கி, ஷீவாஸ் ரீகல். ஷீவாஸ் - ரீகல் பாட்டில்கள் மட்டும் மினரல் வாட்டர் பாட்டில்கள் போல் உள்ளே கொண்டுவந்து சேர்க்கப்பட்டுக் கொண்டே இருக்க, மோகன் மூடிய கதவுகளுக்குப் பின்னால் வெகு பாதுகாப்பாக உணர்ந்தான்.

தன்னுடைய இருபத்து நான்கு மணி நேரத்தையும் ஷீவாஸ் ரீகலுடன் கழித்தான். தன்னை இனிமேல் யாரும் எதுவும் செய்து விட முடியாது என்ற தைரியம் வந்து ஒரு முறை தன் எலிப்பொந்தில் இருந்து வெளிப்பட்டுக் கீழே வந்து தனக்கு ஷேவ் செய்து கொள்வதற்காகப் பிளேடு கூட வாங்கிப் போனான்.

அந்த அவனுடைய வெளிப்படல்தான், மோகன் தன் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறு என்பதை அவன் அப்போது புரிந்து கொள்ளவில்லை.



11

**நா**யக் சென்னை வந்து சேர்ந்ததும் முதல் வேலையாக ரன்ஜித்தை சந்தித்தான். மூன்று நாட்களுக்குள் இரண்டு காய்களை வெற்றிகரமாக வெட்டி விட்டதை ரன்ஜித்திடம் தெரிவித்து விட்டு, அவரிடம் ஒரு பாராட்டைப் பெற்றுக் கொண்டு தன் சாந்தோம் அறையை அடைந்தான்.

மோகன் மிச்சமிருந்தான். மோகனைத் தீர்த்துக் கட்டி விட்டால், தன்னுடைய வேலை முழுமையடைந்து விடும்.



மோகன் எங்கே இருக்கக் கூடும் என்று ஆராயத் தொடங்கினான்.

மோகனின் பலவீனம் மது. விதம் விதமான மதுவகைகள். மோகனைப் பிடிக்க வேண்டும் என்றால், ஏதாவது பாரில் இருந்தால்தான் உண்டு. ஜெயதேவுக்கு சொந்தமான கிளப் ஒன்று அடையாறு போட் ஹவுஸில் இருந்தது. அங்கே மோகன் வரவில்லை. மெட்ராஸில் இருக்கும் அத்தனை பார்களுக்கும் மோகன் வரவில்லை என்று செய்தி அவனை அவ்வப்போது வந்தடைந்து கொண்டே இருந்தது.

மோகனின் சி.ஐ.டி. நகர் பங்களாவில் அவன் இருப்பதற்கான வாய்ப்புகளே தெரியவில்லை. மோகன் எங்கே போயிருக்கக் கூடும்? மோகனை அழிக்க வேண்டும் என்றால் முதலில் மோகனைக் கண்டு பிடித்தாக வேண்டும்.

மோகனைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் அவன் கிட்டத்தட்ட குறைய தோற்று விட்டதாகவே கருதிக் கொண்டிருந்த வேளையில் அவனுக்கு அந்த தொலைபேசி அழைப்பு அவனுடைய சாந்தோம் அறையை வந்தடைந்தது.

தொலைபேசியில் அழைத்தவன் நாயக்கிடம் காசுவாங்கி செய்தி சொல்லும் இன்ஃபார்மர்.

"ஹலோ..." என்றான் நாயக்.

"நான் நண்பன்" என்று எதிர்முனையில் இருந்து பதில் வந்தது.

"ஹலோ 33..." என்றான் நாயக் உண்மையான பரவசத்துடனும் உண்மையான மகிழ்ச்சியுடனும், "நான் உன் குரலைக் கேட்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் நான் இருந்தேன்."

"எதற்காக?"

“நீ தகவல் கொடுத்துத்தான் அலெக்ஸாந்தர் எங்கிருக்கிறான் என்று தெரிந்து கொண்டு அவனை முடிக்க முடிந்தது. நீ தகவல் கொடுத்துத்தான் மாலிக் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது. இப்போ மோகன்.”

54135
6070525

எதிர்முனைக் குரல் சிரித்தது.

“பார் பாராகத் தேடினாயே நாயக். உன்னால் அவன் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லையா?”

நாயக் ஒரு வியப்புக் குரலை வெளிப்படுத்தினான்.

“நான் பார் பாராக மோகனைத் தேடினேன் என்று உனக்கு எப்படித் தெரியும் ஃப்ரண்ட்?”

“நான் எல்லோரைப் பற்றியும் தெரிந்து வைத்திருப்பதால் தான் நான் ஒரு நல்ல இன்ஃபார்மராக இருக்கிறேன்”.

“போகட்டும் என்னால் மோகனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.”

“எனக்குத் தெரியும்.”

முழுநேர கிளை நூலகம்
வில்லிவாக்கம்,
சென்னை-49.

“சொல்லு.”

“இருபத்தைந்தாயிரம்...”

“கொடுக்கிறேன். வழக்கம்போல அதை நான் நீ சொல்லும் போஸ்ட் பாக்ஸில் போட்டு விடுகிறேன்.”

“இந்த முறை மயிலாப்பூர் லஸ் சர்ச் ரோடில் இருக்கும் ஒரு புத்தகக் கடை. பழைய புத்தகக் கடை. ஒரு கிழவன் உட்கார்ந்திருப்பான். சலீம் என்று பெயர். அவனருகே ஒரு பழைய மரத்தாலான போஸ்ட் பாக்ஸ் இருக்கும். அந்த போஸ்ட் பாக்ஸில் பணத்தைப் போட்டுவிட்டு.”

“ரைட்”



“என்னைக் கண்டுபிடிக்க முயலாதே. என்னைத் தொடர நினைத்தால், என்னைக் கண்டுபிடித்துப் பேச நினைத்தால், அப்புறம் உனக்கொரு நல்ல இன்ஃபார்மர் கிடைக்காமல் போய்விடுவான்.”

“தெரிந்தது தானே ப்ரண்ட் நான் இதுவரை அம்மாதிரி முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேனா?”

“ரைட். மோகன் இப்போது இருப்பது முத்தாரப்பன் தெருவில் இருக்கும் விடுமுறை விடுதியில். அவன் எந்த அறையில் இருக்கிறான் என்றெல்லாம் தெரியாது. இரண்டு நாட்களாக அவன் அங்கேதான் இருக்கிறான்.”

“மோகனுடன் பாதுகாப்பிற்கு?”

“இரண்டு பேர். முகுந்த், சிஷ்யா என்ற பெயர். துப்பாக்கி சுடுவதில் கெட்டிக்காரர்கள். அவர்களுடன் மோகன் விடுதிற்குள் நுழைந்தான். அவன் வெளியே வரவே இல்லை. முகுந்தும், சிஷ்யாவும் வெளியே வருகிறார்கள். வேண்டியதை வாங்கிக் கொண்டு லாட்ஜுக்குப் போகிறார்கள்.”

54135/6070525

“தாங்க்ஸ். நான் பார்த்துக் கொள்கிறேன். ஒரே ஒரு கேள்வி.”

“என்ன?”

ரூ. 70/-

“இவ்வளவு நாட்களாக டெலிபோனில் என்னிடம் பேசுகிறாயே. ஒரு தடவையாவது உன் பெயரை என்க்குச் சொல்லக் கூடாதா?”

டெலிபோன் குரல் சிரித்தது.

“வைத்துக் கொள்ளேன். ஆண்டவன் என்று” தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

நாயக் மகிழ்ச்சியுடன் எழுந்தான்.



12

நாயக் முற்றிலும் புதிய மனித
னாக மாறியிருந்தான். அவனுடைய
பைஜாமாவும், ஜிப்பாவும், வாய்
நிறைய சிவக்கச் சிவக்க போட்டிருந்த
பீடாவும், டை அடித்து செம்பட்டை
யாக மாற்றப்பட்டிருந்த முடியும்
ஹைதராபாத் செருப்பும் அவனை யார்
பார்த்தாலும், ஒரு வடநாட்டு வியா
பார ஏஜண்ட் என்றுதான் நினைக்க வைத்தன.

அந்த உடையுடன் அவன் முத்தாரப்பன் தெருவில்
இருக்கும் மார்க்கெட்டை அண்டினான். விடுமுறை விடு
திக்கு நேர் எதிரே இருந்த ஒரு ஹோட்டலில் அவனுக்கு
அறை கிடைத்தது. முதல் மாடியில் அறை, கீழே ஹோட்
டலின் உணவு விடுதி.

அந்த விடுதிக்கு வடநாட்டு ஆசாமிகள் அடிக்கடி வந்து
தங்குவதால், அந்த லாட்ஜில் அவனுக்கு ரூம் கிடைப்பதில்
எந்தவித சிரமமும் இருக்கவில்லை.

நாயக் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு எதிரே
இருந்த லாட்ஜை ஆராய்ந்தான். லாட்ஜ் வாசலே குறியாக
நினைத்து தன் பைனாகுலர்களின் வழியாக இரண்டு
நாட்களாகத் தன் பார்வையை லாட்ஜ் வாசலில் நிலைகுத்த
வைத்தான்.

மூன்றாம் நாள் காலை ஷேவிங் பிளேட் வாங்குவதற்காக
வந்த மோகன் அவனுடைய பைனாகுலர்களின் வட்டத்தில்
சிக்கினான்.

நாயக் தன் பற்களை மட்டும் உதடுகளைப் பிரித்துக்
காட்டி மெல்லச் சிரித்துக் கொண்டான். உதடை நாவால்
ஒருமுறை வருடிவிட்டுக் கொண்டான்.



இரைக்காக எதிர்பார்த்துக் காத்திருந்த புலி இரையைக்
...டதும் நாவால் தன் உதடுகளை வருடி விட்டுக்
...வதுபோல் இருந்தது அவனுடைய செய்கை.

நாயக் பைனாகுலர்களால் மோகனைத் தொடர்ந்தான்.
மோகன் வெறும் பனியனுடன் வெளிப்பட்டிருந்ததால்,
அவன் அங்கிருந்து காலி செய்யும் நோக்கத்துடன் வெளியே
...ல்லை என்று புரிந்தது.

மேலும், மோகன் அந்த லாட்ஜில்தான் தங்கியிருக்கிறான்
...பதும் இப்போது உறுதியாகிவிட்டது. மோகன் லாட்
...குப் பக்கத்தில் இருந்த ஒரு டீக்கடையில் இருந்து
...டு ஒன்றை வாங்கிக் கொண்டு மறுபடி லாட்ஜிற்குள்
...வதைப் பார்த்ததும் அவனுக்கு மோகன் இன்னும்
...கேதான் இருக்கப் போகிறான் என்பதும் தெளிவானது.

இனி மோகனை வழியனுப்பி வைக்கும் வழியில் ஈடுபட
...டியதுதான் என்று தீர்மானித்தான்.

தான் தங்கியிருந்த லாட்ஜை உடனே காலி செய்தான்.
...து சாந்தோம் அறைக்கு சென்று, தாடியும், மீசையும்,
...ர் கண்ணாடியும், பிடரியில் அலையும் மயிரும்,
...ான்வாஸ் பேன்ட்டும், பனியனும் கொண்ட ஒரு
...ட் போல் தன்னை மாற்றிக் கொண்டு, மறுபடி ஒரு
...யில் விடுமுறை விடுதி வாசலில் வந்திறங்கினான்.
...ல் ஒரு சூட்கேஸ்.

ரிசப்ஷனில் ரூம் கேட்டான். முன்னதாகவே இரண்டு
... ரூபாய்களை ரிசப்ஷன் டேபிளில் எடுத்து வைத்தான்.

ரெஜிஸ்டர் நாயக் பக்கம் திரும்பியது.

நாயக் ரெஜிஸ்டரை மெல்லப் புரட்டினான். அறை எண்
...றுப் பத்து மட்டும் நான்கு நாட்களாக ஒரே பெயரில்

இருக்க, மற்ற அறைகள் எல்லாம் அவ்வப்போது காலி செய்யப்பட்டு வேறு வேறு ஆட்களால் ஆக்கிரமிக்கப் பட்டுக் கொண்டிருந்தன.

நாயக் அறை எண் ஐநூற்று ஒன்பது அல்லது அறை எண் ஐநூற்றுப் பதினொன்று காலியாக இருக்கிறதா என்று பார்த்தான். ஐநூற்றுப் பதினொன்று காலியாக இருந்தது.

ரெஜிஸ்டரின் அறை எண்ணிற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் '511' என்று எழுதினான்.

ரிசப்ஷன் ஆசாமி ஒன்றும் வித்தியாசமாக எண்ணாமல், அறை எண் ஐநூற்றுப் பதினொன்றை நாயக்கிற்காக ஒதுக்கினான்.

லிஃப்ட் வயதான முனகல்களுடன் நாயக்கை ஐந்தாவது மாடியில் கொண்டு வந்து சேர்த்தது.

நாயக், வராந்தாவில் காலை வைத்ததும் முகுந்தையும், சிஷ்யாவையும் பார்த்தான். அவர்கள் இருவரும் லிஃப்ட் அந்த மாடியில் நின்றவுடனேயே எச்சரிக்கை உணர்வை அடைந்தது தெரிந்தது. அவர்கள் இருவரின் கைகளும் தங்களுடைய இடுப்பருகே வெகு இயல்பாகச் சென்றடைந்தது தெரிந்தது. எந்நேரமும் துப்பாக்கி எடுத்துச்சுட ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று புரிந்தது நாயக்கிற்கு.

நாயக் வெகு இயல்பாக நடந்து சென்று தன் அறையைத் திறந்தான். அவர்களைக் கவனிக்காதது போல் நடந்து கொண்டான். அறைக்குள் நுழைந்ததும் கதவைச் சாத்திக் கொண்டு கதவின் மேல் சாய்ந்து நின்றான்.

தான் நுழைந்த அறையைச் சுற்றி நோட்டமிட்டான். ஆங்கிலேயன் காலத்தில் கட்டப்பட்ட அறை என்பதற்கு



...ம் அது ஒரு சாட்சியாய் இருந்தது. அறையில் நிறைய ... வேலைப்பாடுகள்.

...யத்தில் கட்டில், சுவர்களில் பாதி உயரம் வரை ...வுட் பட்டைகள் என்றைக்கோ பூசப்பட்ட ...டன் இப்போது வெளிறிப் போயிருந்தன. தலைக்கு ... ஒரு ஷாண்டலியர். ஷாண்டலியரில் பொருத்தப் ...ருந்த ஒரு நாற்பது வாட் விளக்கு. நீள இறகுகளைக் ...ண்ட, சுற்றும்போது அரிசி மில்லின் இயக்கத்தை ...கப்படுத்தக்கூடிய ஒரு ஃபேன். தரையில் விரிக்கப் ...ருந்த நிறைய கறைகளுடனும், ஓட்டைகளுடனும் ... கார்ப்பெட் அறையின் ஒரு மூலையில் இருந்த, ...கான வேலைப் பாடமைந்த கால்களைக் கொண்ட ...காலியும், மேஜையும்.

அறையை ஒட்டி அதன் இடதுபக்கம் ஒரு பாத்ரூம் ...ந்தது. சுத்தமாக காற்றோட்டம் என்றால் என்னவென்று ...யாத பாத்ரூம். அதன் வழியாக வெளியே போக, ...ளே வர என்று ஏதாவது ஒரு திருடன் நினைத்தால் கூட ...த் திணறியே அவன் செத்துப் போகக் கூடும் என ...றுத்திய பாத்ரூம்.

நாயக் பால்கனிப் பக்கம் நடந்தான். பால்கனி கொஞ்சம் ...ழுப்பான சிமெண்ட் தரையுடன் இரண்டடி அகலத் ... இருந்தது. யாராவது அங்கே வந்து நின்று கீழே ...க்கை பார்க்கலாம். உட்கார்ந்து பொழுதைப் போக்க ... வசதியற்ற பால்கனி.

நாயக் பால்கனியில் நின்று ஒரு முறை அங்கிருந்து கீழே ...த்தான். மார்க்கெட். அதன் மக்கள்... என்று காலை ...துச் சுறுசுறுப்புடன் அந்த பிரதேசம் இயங்கிக் கொண் ...ருந்தது. நாயக் உள்ளே வந்தான். பால்கனியில் இருந்து

திரும்பி அறை நோக்கி வந்தபோது தான் நாயக் அறைக் கதவை ஒட்டியிருந்த அந்த கணப்பைக் கவனித்தான்.

ஆங்கிலேயர்கள் வந்து தங்கியபோது குளிர்காலத்தில் எதற்கும் உதவும் என்பதற்காகக் கட்டப்பட்ட கணப்பு இப்போது அது காலியாக இருந்தது.

நாயக் கணப்பிற்குள் நுழைந்தான். நுழைவதற்குக் குனிய வேண்டியிருந்தது. உள்ளே நுழைந்ததும், நிமிர்ந்தான். கணப்பு அவன் தலை மட்டம் வரை உயர்ந்திருந்தது. அப்புறம் புகை போவதற்காக என, கணப்பின் கூரையி லிருந்து ஒரு இரண்டு சதுர அடி ஓட்டை ஒன்று தெரிய, நாயக் கணப்பின் சுவர்களில் இரண்டு கால்களையும் ஊன்றி எக்கி, அந்த இரண்டடிச் சதுர ஓட்டை வழியாகத் தலையை நீட்டிப் பார்த்தான். அது மேலே மேலே என்று மொட்டை மாடி வரை நீண்ட ஒரு புகைபோக்கி. ஒவ்வொரு அறை யிலும் ஒரு கணப்பு. அதற்கான ஒரு பொது புகை போக்கி.

நாயக் தனக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்ததை நினைத்து சந்தோஷப்பட்டான். தன் உடலை அந்த புகைபோக்கியின் இரு பக்கச் சுவர்களிலும் பொருத்தி அதில் அங்கங்கே அமைந்திருந்த சின்னச் சின்ன இரும்புப் பிடிப்புகளில் கால் வைத்து மேலே ஏறினான். மொட்டை மாடியில் தலைக்கு மேலே ஒரு சிமெண்ட் ஸ்லாப் இருந்தது. நாயக் அதை அசைத்தான். அசைந்தது. உடைக்க வேண்டிய அவசியமின்றி வெறுமனே எடுத்துப் பொருத்துகிற மாதிரி அமைந்த ஸ்லாப்.

நாயக் மொட்டை மாடியில் வெளிப்பட்டான். யாருமே உபயோகிக்காத மொட்டை மாடி என்று பார்த்தவுடன் தெரிந்தது. வரிசையாய் புகைபோக்கிகள். அவற்றின் மேல் சிமெண்ட் ஸ்லாப்கள். நாயக் ஐநூற்றுப் பத்து அறைக்குள்



...லும் புகைபோக்கியின் சிமெண்ட் பலகையை எடுத்துக் ...ழ பார்த்தான். ஐநூற்றுப் பத்தில் நுழைய வழி இருப்பதை புகை போக்கியின் வழியில் வந்து லேசாகப் படிந்திருந்த சூரிய வெளிச்சம் தெரிவித்தது.

நாயக் பழையபடி புகைபோக்கி வழியாகவே கீழிறங்கித் தன் அறையை அடைந்தான்.

முகுந்த், சிஷ்யா இருவரின் இடையூறும் இல்லாமல் ...கனை எப்படி முடிப்பது என்பதற்கான ஒரு வழி அவன் ...ளையில் தோன்றியது.

நாயக் தன் திட்டத்தை ஒரு கிங்சைஸ் சிகரெட்டுடன், ஒரு பாட்டில் பீருடன் அலச ஆரம்பித்தான்.



## 13

**கோ**விந்தப்பன், காலை எழுந்தவுடன் தன் வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு, குடும்பம் சகிதமாக எந்த ஏரியாவுக்குப் போவது என்று யோசித்துக் கொண்டிருந்தான். மச்சினி அரைப்பாவாடையும், தாவணி மூடாத ரவிக்கையும் அணிந்து, வாய் ...ய வெற்றிலை பாக்கைப் போட்டுக் கொண்டு, ...ில் தொங்கிய மத்தளத்தை ஒருமுறை டம்டம் என்று ...டினாள்.

கோவிந்தப்பனின் பையன் கையில் ஒரு ஊதாங்குழலை ...த்துக் கொண்டு, ஒரு முறை 'பீப்பி' என்று அகவி விட்டு ...ப் பசங்கல்லாம் ஒரு தரம் ஜோரா கை தட்டுங்கோ' ...று சொல்லி விட்டு, ஒரு முறை படபடவென்று ...டினான். கோவிந்தப்பனின் சின்னப்பையன் அந்த

இடத்திலேயே ஒருமுறை அந்தர் பல்டியடித்துப் பார்த்து பொதுமக்கள் முன் செய்து காட்டப் போவதற்கு முன்பாக ஒரு ஒத்திகை பார்த்துக் கொண்டான்.

கோவிந்தப்பனின் மனைவி அவன் முகத்தையே உற்று நோக்கினாள்.

''என்னா... எம்மூஞ்சையே பாக்கறே?'' என்றான் கோவிந்தப்பன்.

''கட்டிக்க ஒரு புடவை வாங்கிக் குடுய்யான்னு சொல்லி எவ்ளோ நாளாவுது. வேடிக்கை பார்க்க வர்றவனல்லாம் பொடவைப் பொத்தல் வழியா என் ஒடம்பை பாக்கறானுங்க...''

''ஆமா... பெரிய சித்தூரு ராணி பத்மினி. இவ அயகை வந்து அல்லாரும் பாத்துட்டாங்க... எங்கம்மே... நமக்குத் தெரிஞ்ச ஒரே தொழிலு இதான். வளையம் மாட்டி எடுக்கறது. கம்பிமேல நடக்கறது... அந்தர் பல்டி அடிக்கறது சர்க்கஸ்காரன் எவனும் நம்பளைச் சேத்துக்கமாட்டேங்கறான்... சாப்புடறதுக்கு இங்க லாட்டரி. பொடவை வேணுமாம். பொடவை... இன்னிக்கு எங்கம்மே போறது?''

நாயக் அவர்களுக்குத் தள்ளிநின்றதை கோவிந்தப்பனும் அவன் மனைவியும் கவனிக்கவில்லை.

மச்சினிச்சி தான் கவனித்து, ''மாமோவ்'' என்றாள்.

''என்னாம்மே?'' என்று மச்சினிச்சியின் குரலுக்கு உடனே பணிந்து திரும்பிய கோவிந்தப்பன் நாயக்கைக் கண்டு திகைத்து நின்றான்.

''என்னா சார்?''

நாயக் தன்னுடைய ஒழுங்கான முகத்துடன் வந்திருந் தான்.



''உனக்கு ஒரு நாள் தொழிலில் எவ்வளவு கிடைக்கும்?''

''இன்னாத்துக்குக் கேக்கறே?''

''எவ்வளவு கிடைக்கும்?''

''அறுவது ரூவா.''

''இதில் உன் பொண்டாட்டிக்குப் புடவை வாங்கிக் கொடுப்பது கஷ்டம்தான். இன்றைக்கு உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன். உனக்கு உன் பெண்டாட்டிக்கு, குழந்தைகளுக்கு மச்சினிக்கு என்று எல்லோருக்கும் உடை வாங்கித் தரலாம். நான் சொல்லும் இடத்திற்கு வந்து உன் வித்தையைக் காட்டுகிறாயா?''

''காட்றேஞ்சாமி.''

''இதோபார். எதிரில் இருக்கும் இந்த சந்தில்தான். லாட்ஜ் இருக்கிறதே. அதன் எதிரில் செய்ய வேண்டும்.''

''செய்யறோஞ்சாமி.''

''நான் பத்திரிகைக்காரன். என் ஆட்கள் உன்னை வேறு வேறு கோணங்களில் போட்டோ எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

அதனால் நீ காலையிலிருந்து மாலைவரை உன் தொழிலைச் செய்து கொண்டிருக்க வேண்டும். எங்கிருந்து போட்டோ எடுக்கிறார்கள் என்றெல்லாம் பார்க்கக் கூடாது.''

''சரி சாமி.''

''சாயங்காலம் நீ இங்கேயே வந்து சேர்ந்துவிடு. அதற்குப் பிறகு நான் வந்து என் பத்திரிகை சம்பந்தமாகக் கேள்விகள் கேட்கிறேன்.''

''சரி சாமி.''

''சாமி என்று சொல்லாதே. கோயில் பூசாரியை அழைக்கிற மாதிரி இருக்கிறது.''

''சரி சாமி.இல்ல சாமி. எனக்கு அப்படித்தான் சொல்ல வருது சாமி. நான் இப்பவே அங்க போயிரவா?''

நாயக், தலையசைத்து பாக்கெட்டில் இருந்து பத்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான்.

''சாமி கால்ல விழுந்து எழு புள்ளே'' என்று கோவிந்தன் தன் மனைவியையும் மச்சினியையும் உந்தித் தள்ள, நாயக் விலகி நின்று, மரியாதையை மறுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

நாயக் திரும்பி விடுமுறை விடுதிக்கு வந்த போது தாடி மீசையுடன் இருந்தான். டாக்ஸியிலிருந்து இறங்கிய அவனை கழைக் கூத்தாடி கண்டு கொள்ளவில்லை.

அவன் பாட்டுக்கு சாலையை ஏறக்குறைய அடைத்துக் கொண்டு தன் தொழிலைத் தொடங்குவதில் தீவிரமாக இருந்தான்.

நாயக் விடுதியில் நுழைந்து, லிஃப்ட்டில் பயணித்து, தன் அறை நோக்கிச் சென்றபோது, முகுந்தும், சிஷ்யாவும் வழக்கம்போல் எச்சரிக்கையடைந்து இடுப்பருகே கையைக் கொண்டு போனதைக் கண்டும் காணாத மாதிரி தன் அறைக்கதவை திறந்தான்.

அறையில் நுழைந்ததும் கதவைச் சாத்திக் கொண்டான். விடுதியில் வேலைக்காரப் பையன்கள் சரியாக வராதது அவனுக்கு வசதியாக இருந்தது. கூப்பிட்டாலே வருவ



இல்லை. கூப்பிடாவிட்டால், யாருமே எட்டிப் பார்க்கப் போவதில்லை.

நாயக், கணப்பின் அருகே சென்றான். கால்களில் இருந்த காலுறைகளைக் கழற்றினான். கைகளில் உறை மாட்டிக் கொண்டான்.

மோகன் தன் அறையில் இருந்தான். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, ஷீவாஸ் ரீகல் பாட்டிலில் இருந்த அருமையான, பதனப்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட விஸ்கியை கண்ணாடிக் கோப்பையில் அப்படியே சரித்துச் வைத்தான்.

ஏற்கனவே காலையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றிக் கொண்ட போதை அவனை மிதக்க விட்டுக் கொண்டிருந்தது. தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்தது. உச்சி மண்டை தொடங்கி, உள்ளங்கால் பாதம் வரை ஒரு கிளுகிளுப்பு அவன் உடலெங்கும் ஊடுருவி இருந்தது.

விஸ்கி அளிப்பது போன்ற போதையை எதுவும் அளிப்பதில்லை. பணம், பெண் இவை இரண்டும், அளிக்கும் போதையை விட வாழ்வில் விஸ்கிதான்... விஸ்கிதான்.

சிகரெட் அவன் விரல் இடுக்கில் இருந்து நழுவ, மோகன் பதற்ற உணர்வுடன் அதை மறுபடி பற்றினான்.

அவனுள் ஒரு தன்னம்பிக்கை ஏறியிருந்தது. ஒரு வார ஓடிவிட்டது. ரன்ஜித்தின் ஆட்களால் தன்னை நெருங்க முடியவில்லை. இனி மேலும், அவன் இருக்குமிடத்தை யாரும் கண்டுபிடிக்கப் போவதில்லை.

அப்படியே மிஞ்சி மிஞ்சிக் கண்டுபிடித்தாலும், முகுந்தும், சிஷ்யாவும் இருக்கவே இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

கீழிருந்து 'டுடும்' 'டுடும்' என்று மேளம் கொட்டப்படும் சத்தம் கேட்டது.

''ஐயா வாங்கோ, அம்மா வாங்கோ... பால் வடியற மூஞ்சியோட இருக்கற இந்தப் பையன் காட்ற வித்தையைப் பாருங்கோ.''

மோகன் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் இருந்து எழுந்தான்.

நாயக் புகை போக்கியில் மெல்ல ஏறினான். மொட்டை மாடியை அடைந்ததும், தலைக்கு மேலே மூடியிருந்த சிமெண்ட் பலகையை மெல்ல விலக்கினான்.

தலையை மெல்ல வெளியே நீட்டினான். மொட்டை மாடி வெயிலில் காய்ந்து கொண்டிருந்தது. யாரும் அங்கே இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, நாயக் மொட்டை மாடியில் குதித்தான். சிமெண்ட் பலகையை முன்பிருந்தபடியே வைத்துவிட்டு, ஐநூற்று பத்திற்கு நேர் மேலே இருந்த புகைபோக்கியின் சிமெண்ட் பலகையை அகற்றினான். உள்ளே இறங்கி, கால்களுக்குப் பிடிமானம் தேடிக் கொண்டு, சிமெண்ட் பலகையை இரு உள்ளங் கைகளாலும் தாங்கி முன்பிருந்தது போலவே செய்துவிட்டு கீழே இறங்கத் தொடங்கினான்.

வெகு நாட்களாகக் கவனிப்பார் இன்றி இருந்த புகை போக்கி என்பதால் சிலந்திகள் வெகு சுதந்திரமாகக் கூடு கட்டியிருந்தன. அங்கங்கே படர்ந்திருந்த வலைகள் நாயக் கின் கைபட்டுக் கலைய, வீடிழந்த சிலந்திகள் அங்குமிங்கும் அலையத் தொடங்கின.

நாயக் மெல்ல இறங்கி, கணப்பின் பக்கச் சுவர் அருகே இறங்கி நின்றான். அவ்வளவு பெரிய உடலை மறைப்பது



கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. சமாளித்து விட்டான்.

மெல்லத் தலையை மட்டும் நீட்டிப் பார்த்தான்.

மோகன் பால்கனியை நோக்கிச் சென்றது தெரிந்தது. நாயக் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

மோகன் கீழே எட்டிப் பார்த்தான்.

ஐந்து மாடிகளுக்குக் கீழே அந்த வித்தைக்காரன் இருந்தான். வித்தைக் கூட்டத்தில் இருந்த ஒரு பெண் இடுப்பில் ஒரு டூப் பெல்ட்டை இறுகக் கட்டிக் கொண்டு அதில் ஒரு நீண்ட மூங்கில் கம்பைச் செருக, கம்பு லாட்ஜின் மூன்றாவது மாடி வரை நீண்டது.

வித்தைக்காரன் ஒரே தாவலில் அந்தக் கம்பைப் பற்றினான். கொஞ்சம் கொஞ்சமாகக் கம்பில் ஏறத் தொடங்கினான்.

மேளம் இப்போது உச்சகதியில் டுடும் டுடும் என ஒரு இளம் பெண்ணால் தட்டப்பட்டுக் கொண்டிருந்தது. சின்னப் பையன்கள் இருவர் தரையில் பல்டியடித்துக் கொண்டிருந்தார்கள். சுற்றியிருந்த மக்கள், கம்பின் மீது ஏறிக் கொண்டிருந்தவனைக் கொஞ்சம் கொஞ்சமாக அண்ணாந்து, பிரமையுடனும், வியப்புடனும், பயத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''ஐயா பாருங்க... அம்மா பாருங்க... எல்லாரும் பாருங்கோ... ஜோரா ஒரு தடவை கை தட்டுங்கோ....''

கை தட்டினார்கள்.

''மேலே போறேன். இந்தக் கம்பு மேலே போறேன். கொஞ்சம் கையவுட்டாலும் கீழே வந்துருவேன். நான் கீழே

வந்தா என்னா ஆவும். எம்முஞ்சி மொகரைக் கழண்டு போய்டும். ரத்தம் வரும். மேலே போகப் பொறப்பட்டவன் ஒரேயடியா மேலே போய்டுவேன். ஒன் உசிரு ஒனக்கு வெல்லந்தானே. என் உசிரும் எனக்கு வெல்லந்தான். இருந்தாக்கூட நம்பள் இப்படிச் செய்றான்னா இன்னா விஷயம். இதோ இந்த ஐயா ஒரு நாலணா... அந்த அம்மா ஒரு எட்டணா... ஜிப்பா போட்ட பெரிய மனிஷன் ஒரு ஓ ரூபா... பான்ட் போட்ட ஆபீஸ்காரரு ஒரு ரெண்டு ரூபா... டேய் சின்னப்பையா வாங்கிக்கோ. வாங்கிக்கோ. அவங் குடுத்தா நமக்குச் சோறு. வாங்கிக்கோ. வெட்கப்படாதே. வாங்கிக்கோ... இதோ மேல அஞ்சாவது மாடி தொரை ஒரு பத்து ரூபா குடுக்கறார் பார்... பார்... அடி மோளம் அடி தட்டு தட்டு ஜோரா கைதட்டு...''

கோவிந்தன் கம்பின் உச்சியை அடைந்தான். தன் வயிற்றைக் கம்பின் உச்சியில் பதிய வைத்தான். அங்கிருந்த படியே தட்டாமாலை சுற்றத் தொடங்கினான்.

கூட்டம் மொத்தமும் பிரமித்தது. 'ஹா' என்று ஆச்சரியக் குரல் எழுப்பியது.

மோகன் கண்களை விரித்தான்.

''டேய்... பாவி... காசுக்காகத்தானே செய்கிறாய். நான் தருகிறேன் காசு. இறங்கிவிடு. வீணாக செத்துப் போகாதே'' என்று கத்திக் கொண்டே, பாக்கெட்டில் கையை விட்டு ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து கீழே போடுவதற்காகக் குனிந்தான்.

நாயக் தன் சாக்ஸ் கால்களால் சத்தமின்றி கார்ப்பெட்டில் நடந்தான். குனிந்து தவழ்ந்து பால்கனியை அடைந்தான்.

அவன் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம்.



மோகன் குனிந்தபோது, அவன் கால்கள் இரண்டும் [illegible] எக்கின. நாயக் சடாரென்று அந்த இரு கால்களை [illegible] பற்றிவாரி விட்டான்.

மோகன் தனக்கு என்ன நடந்தது என்று தெரியாமல், "[illegible]'' என்று அலறி, அந்தரத்தில் வினாடியில் ஆயிரத்தில் [illegible] பங்கு நேரத்திற்கும் குறைவாக மிதந்து, தலைகுப்புற [illegible] இறங்கி, மேளம் அடித்துக் கொண்டிருந்த பெண் [illegible]குப் பக்கத்தில் 'தட்' என்று மோதினான். அவன் தலை [illegible] கொண்டது. மூளை தரையில் அடிபட்டு சிதறியது.

மோகன் இமைக்கக்கூட கடைசி வினாடியில் மறந்து [illegible]தால், திறந்த கண்கள் திறந்தபடி இருக்க, கீழே விழுந்த [illegible] கணம் இறந்து போனான்.

கூட்டம் 'ஓ'வென்று அலறியது. அவனை நோக்கி ஓடி [illegible].

நாயக், சர்ரென்று பின் வாங்கினான். கணப்பில் நுழைந்து [illegible]வென மேலேறினான்.

மோகனின் அறைக்கு வெளியே முகுந்தும், சிஷ்யாவும் [illegible] காவல் காத்துக் கொண்டிருந்தார்கள்.

நாயக் தன்னறையை அடைந்து, ஒரு பாட்டில் பீரை ஒரே [illegible] குடித்துவிட்டு, கையுறையை உருவிப் போட்டு [illegible] ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் [illegible], நிம்மதியான ஒரு பெருமூச்சை விட்டான்.

அவனுக்குத் திருப்தியாக இருந்தது. வெகு திருப்தியாக.

[illegible] பண்ணி, விஸ்வம் மூன்று பேரையும் அழித்த [illegible] அலெக்ஸாந்தர், மோகன் மூன்று பேரையும் அழித் [illegible] விட்டது.

[illegible] சந்தோஷப்படப் போகிறார்.



14

ஜெயதேவ் கவலையுடனும் கோபத்துடனும் உட்கார்ந்திருந்தா அவரைச் சுற்றி நாய்கள் உட்கார திருந்தன. எஜமானனின் கோபம் அவ றுக்கும் தெரிந்த மாதிரி ஒரு மாதி சோகமுகத்துடன் அந்த நாய்கள் அமா திருக்க, ஒரே ஒரு டாபர் மேன் ம டும், ஜெயதேவைச் சமாதானப்படுத்தும் நோக்கத்திலோ என்னவோ, எழுந்து நின்று ஜெயதேவின் கையைத் த சொர சொரப்பான நாவால் நக்கிக் கொடுத்தது.

''போடா'' என்று அதை உதறி, தலையை ஒரு சிலு சிலுத்தார் ஜெயதேவ். அவருடைய பிடரிமயிர் இட தோளில் இருந்து வலது தோள் வரை ஒருமுறை பிரயாண செய்தது.

அவருடைய கோபத்தைக் கண்டு எதிரில் பத்தடி தள்ளி கை கட்டாவிட்டாலும் அதற்குரிய பணிவுடன் நின்று கொண்டிருந்த ஒருவன் உள்ளூர நடுங்கிக் கொண்டிருந்தான்.

''கஜேந்திரா'' என்ற ஜெயதேவின் குரல் ஒரு சிங்கத்தின் கர்ஜனை போல் இருந்தது.

கஜேந்திரன், ''சார்'' என்றான். தொண்டையிலிருந்து குரல் மேல் எழும்பவில்லை.

''ஸ்வாமியைக் கூப்பிடு.''

கஜேந்திரன் ஓடினான். டெலிபோன் டயலில் விரலை சுற்றும் போது அவன் விரல்கள் நடுங்கின.

ஸ்வாமி சுத்தமாக ஆறடி உயரமிருந்தான். அவனு கென்று இருந்த ஒரு தனி அறை இந்திரா நகரில் ஒ



குப்புறமான ஒரு குறுக்குச் சந்தில் இருந்தது. ...ருந்த இடத்தை அறை என்று சொல்லமுடியாது. ஒரு ... நட்சத்திர ஹோட்டலின் 'சூட்' என்று தான் சொல்ல ...டும்.

...ஸி. கார்ப்பெட், கண்ணாடி ஜன்னல்கள், டி.வி, ...ஆர். என்று வாழ்க்கையின் நவீன வசதிகள் அத்தனை ...கொண்ட ஓர் அறை.

...லெக்ட்ரிக் ஹீட்டர், ஃப்ரிட்ஜ், பெர்கொலேட்டர், ...டன் கூடிய எலக்ட்ரிக் ஸ்டவ் என்று நவீன பான்ட் ... தேவையான அத்தனை சாதனங்களும் கொண்ட ஒரு ...

...த் டப், ஷவர், ஒல்ட் ஸ்பைஸ், வெஸ்டர்ன் ...ட், ஸ்பார்க் டெக்டைல்ஸ், பாம்பே டையிங் ...கள் என்று அத்தனை விஷயங்களையும் உள்ளடக்கிய ...

ஒரு கிரவுண்ட் பரப்பளவில் அது தனியாகக் கட்டப் ...ருந்தது. சுற்றிலும் தோட்டம், தோட்டத்தில் ...மென் நிறத்தில் பூக்கள். கரும்பச்சை மரங்கள். ...யன் புற்கள். செயற்கை நீரூற்று. ஒரு கான்க்ரீட் ...வில் இருந்த கொக்கியில் மாட்டப் பெற்ற மூங்கில் ... நாற்காலி.

...ஸ்வாமி இப்போது மொட்டைமாடியில் 'காதாஸ்' ...கொண்டிருந்தான். லெஃப்ட், ரைட், பேக், ஃப்ரன்ட், ...லோயர் என்று அவனைச் சுற்றி சகல இடங்களிலும் ...கட்டுகிற மாதிரி அவன் கால்களும் கைகளும் காற்று ...ல் பாய்ந்து கொண்டிருக்க, அவன் அடிவயிற்றி ... எழுந்த ஹுங்காரம் தொண்டை வழியே வெளிப் ...அந்த வீட்டிலிருந்து நூறடி தள்ளியிருந்த ஒரு வீட்டின்

போர்டிகோவில் படுத்திருந்த ஒரு கன்றுக்குட்டி சை
அல்சேஷனைத் துள்ளி விழச் செய்தது.

ஸ்வாமியின் கை ஒரு முறை மேலிருந்து கீழே இற
கினால் எரியும் செங்கற்கள் தூள் தூளாக உடையு
மூன்றடிக்கு, இரண்டடி ஐஸ் பாரை அவன் தலையா
மோதினால் ஐஸ் பார் கண்ணாடிச் சில்லுகள் போ
உடைந்து கூர் கூராகச் சிதறி பக்கத்தில் நிற்பவர்கள் உட
பாயும்.

ஸ்வாமி தன்னைச் சுற்றி சிதறியிருந்த வியர்வை
வெள்ளத்தை ஒரு பார்வை பார்த்து விட்டு தலையை
சிலிர்த்தான். ஆறடிச் சுற்றளவிற்கு நீர்த்திவலைகள் சிதறி
நடந்து சென்று மொட்டை மாடி கைப்பிடிச் சுவரி
பொருத்தப்பட்டிருந்த ஒரு பிளாஸ்டிக் வளையத்தில் இரு
டவலை எடுத்து உடலை ஒத்திக் கொண்டு கீழிறங்கினா

டெலிபோன் 'குக்' 'குக்' என்று அவனைத் தொந்தர
செய்யாமல் மென்மையாக அழைத்தது.

ரிசீவரை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டான்.

''ஸ்வாமி?''

''யெஸ்.''

''கஜேந்திரன்.''

''சொல்லு.''

''பெரியவர் அழைக்கிறார்''

''வருகிறேன்.''

ஸ்வாமி ரிசீவரை வைத்தான். நிமிர்ந்தான். பெரியவ
அவனை அழைக்கிறார் என்றால் நிச்சயம் ஏதாவது முக்கிய



மாக இருக்கும். இல்லாவிட்டால் அவனை வீணாக
தொந்தரவு செய்திருக்கமாட்டார்.

ஸ்வாமி அவசர அவசரமாக தன் காலை நேரக் கடமை
முடித்துக் கொண்டான் ப்ரெட் டோஸ்ட், முட்டை
ஆம்லெட், கருப்புக் காபி என்று காலை டிபனை முடித்துக்
கொண்டான்.

ஷெல்ஃபைத் திறந்து துப்பாக்கியை அதன் தோலுறையி
லிருந்து விடுவித்தான். வீட்டிலிருந்து வெளிப்பட்டான்.

கதவைச் சாத்தினான். ஆட்டோமாடிக் டிக் என்றது.

அவன் பிரதான சாலையை அடைந்த போது மர நிழலில்
இளைப்பாறிக் கொண்டிருந்த ஒரு அம்பாஸிடர் விழித்துக்
கொண்டு எழ, ஸ்வாமி காரில் ஏறிச் சாய்ந்தான்.

கார் புறப்பட்டது.

ஸ்வாமி, ஜெயதேவைச் சந்திக்கும் முன், ஸ்வாமியைப்
பற்றி சில வரிகள்.

ஸ்வாமியின் அப்பா யார், அம்மா யார்?

தெரியாது.

ஸ்வாமிக்கு நினைவு தெரிந்த நாள் முதலாகத் தெரிந்த
ம் ஜெயதேவ் தான்.

ஒரு அனாதை ஆசிரமத்திலிருந்து அவனை ஜெயதேவ்
எடுத்துக் கொண்டு வந்ததாக ஜெயதேவ் அவனிடம்
இருக்கிறார் - அவனுக்கு நினைவு தெரிந்த

ஸ்வாமி கேட்டு இதுவரை ஜெயதேவ் எதையும் மறுத்த
கேட்ட உணவு கிடைத்தது. கேட்ட உடை

கிடைத்தது. கேட்ட வசதி கிடைத்தது. கேட்ட படி கிடைத்தது. கேட்ட பெண் கிடைத்தாள். எல்லாம் ஜெய தேவின் ஏற்பாடு.

ஜெயதேவ் அவனிடம் எதிர்பார்த்தது ஒன்றுதான் உடலை வளர்த்துக் கொள்ள வேண்டும். தைரியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். சண்டை பழக வேண்டும் துப்பாக்கியால் சுடத் தெரிய வேண்டும். இலக்கை ஜெய தேவ் காட்டினால் ஏன், என்ன, ஏது என்ற கேள்விக்குறிகளை எல்லாம் சுத்தமாக ஃபாரின் ரப்பர் போட்டு அழித்துவிட்டு அவர் காட்டும் இலக்கைத் தாக்க வேண்டும். தாக்கி சிதைக்க வேண்டும். அதுவும் மாட்டிக் கொள்ளாமல் புத்திசாலித் தனத்தை உபயோகப்படுத்தி.

ஸ்வாமி - ஜெயதேவ் வைத்த பெயர் - இதுநாள் வரை அப்படித்தான் நடந்து கொள்கிறான். விசுவாசமாக வெறு விசுவாசமாக.

அவர் காட்டிய இலக்கை அழித்து முடித்தவுடன் மறுபடி தன் கூண்டுக்குள் புகுந்து கொண்டு, நியதி மாறாத அவன் வாழ்க்கையைத் தொடருவான்.

இப்போதும் ஜெயதேவ் ஏதோ ஒரு இலக்கைத் தீர் மானித்திருக்கிறார் என்று ஸ்வாமிக்குத் தோன்றியது அதனாலேயே முன்னேற்பாடாகத் துப்பாக்கியையும் கொண்டு வந்திருந்தான்.

அம்பாசிடர் ஜெயதேவின் காம்பவுண்டிற்குள் நுழைந்து வளைந்து, நெளிந்து சென்று, ஜெயதேவ் உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து இருபதடி தள்ளி நின்றது.

ஸ்வாமி இறங்கினான்.



அவனைப் பார்த்ததும், அத்தனை நாய்களும் குரைத்தன. தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தன. ஜெயதேவை விட்டு விலகி ஓடி வந்து ஸ்வாமியை கையை ஒன்று நக்க, ஒன்று காலைப் பிடித்துத் தாவியேற முன்னேற, இன்னொன்று ஸ்வாமியின் கையால் தலையில் தட்டப்பட வேண்டு மென்று, தலையைக் குனிந்து காட்டி, வாலை அசைத்து நின்றது.

அந்த நாய்களை ஜெயதேவுக்குப் பழக்கியவன் ஸ்வாமி. வெவ்வேறு இடங்களுக்குச் சென்று, நாய்கள் குட்டிகளாய் இருக்கும் போதே வாங்கி வந்து, அவற்றை வளர்த்து, அவற்றுக்குப் பயிற்சி தந்து ஜெயதேவிடம் சேர்த்தவன் ஸ்வாமி. அதனாலேயே நாய்கள் அவனைக் கண்டால் எப்போதும் அடி பணிந்து நிற்கும்.

ஸ்வாமி நாய்களைத் தட்டிக் கொடுத்து விட்டு நடந்தான்.

ஜெயதேவை அடைந்து, அவர் எதிரில் காலியாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

"கூப்பிட்டீர்களாமே'' என்றான்.

"ஆமாம்'' என்ற ஜெயதேவ் அவனை உற்றுப் பார்த்தார்.

"என்ன சொல்லுங்கள்.''

"ரன்ஜித்தின் சரக்கு ஒன்று டெலிவரியாகிறது என்று தகவல் வந்தது.''

"தகவல் கொடுத்தது யார்?''

"விஸ்வம்.''

"ரன்ஜித்தின் ஆள்?''

''ஆம். சரக்கைக் கைப்பற்றினேன். அதற்கு உதவியவர்கள் மோகன், மாலிக், அலெக்ஸாந்தர்.''

''சரி... சரக்கை டெலிவரி எடுத்த ரன்ஜித்தின் ஆட்கள்?''

''ஜோ, பண்ணி, விஸ்வம், மூன்று பேரையும் நம் ஆட்கள் முடித்து விட்டார்கள்.''

''விஸ்வத்தைக் கூடவா?''

''ஆம். துரோகிகளை நாம் விட்டு வைப்பதில்லையே.''

''அப்புறம்?''

''இப்போது மோகன், மாலிக், அலெக்ஸாந்தர் மூன்று பேரையுமே நாம் இழந்து விட்டோம்.''

ஸ்வாமி புருவங்களை நெறித்து ஜெயதேவைப் பார்த்தான்.

''விபத்து என்று போலீஸ்காரர்கள் சொல்கிறார்கள். மூன்று பேருக்கும் ஒரு வார காலத்திற்குள் விபத்து ஏற்படாது. அவர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். மிக சாமர்த்தியமாக, அவர்களைக் கொன்றது ரன்ஜித்தின் ஆள். இவ்வளவு சாமர்த்தியமாக நம் ஆட்களைக் கொல்ல வேண்டுமென்றால் அது ஒருத்தனால்தான் முடியும். நாயக் ரன்ஜித்தின் வெகு நம்பகமான ஆள்.''

''நான் என்ன செய்ய வேண்டும்?''

''ரன்ஜித்திற்கு நான் ஒன்றும் சளைத்தவன் இல்லை என்று ரன்ஜித்திற்குத் தெரிய வேண்டாமா?''

''அதனால்?''

''நாயக்கைக் கொல்ல வேண்டும். அதுவும் உன் கையால் உன் திறமை அத்தனையையும் உபயோகித்து. இதை எனக்காக நீ செய்வாயா?''



''செய்கிறேன்.''

''மாட்டிக் கொள்ளக் கூடாது. வெகு எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும். என்ன?''

''செய்கிறேன்.''

''எப்போது முடிப்பாய்?''

''ஏழு நாட்களுக்குள்.''

''சரி போ. உன்னிடம் பொறுப்பைக் கொடுத்து விட்ட நிம்மதியில் நான் இருப்பேன்.''

''நீங்கள் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள். இனிமேல் ரன்ஜித்தின் ஆட்கள் யாருமே நம்மைத் தொந்தரவு செய்ய முடியாதபடி நான் செய்து முடிக்கிறேன்.''

ஸ்வாமி அங்கிருந்து புறப்பட்டான்.

புறப்படுமுன் நாய்களுக்கென அவன் வாங்கி வந்திருந்த பிஸ்கெட்டுகளை ஒவ்வொரு நாய்க்கும் தனித்தனியாக விளையாட்டுக் காட்டிபோட்டு விட்டுப் புறப்பட்டான்.

ஜெயதேவ் ஒரு விடுதலை உணர்வுடன் சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார்.



## 15

ரன்ஜித் இன்டர்காம் ரிசீவரை அதனிடத்தில் வைத்து விட்டு எழுந்தார். அவர் மனம் முழுக்கச் சந்தோஷம் பரவியிருந்தது. அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டார்.

வராந்தாவில் நின்று கொண்டு, தூரத்தில் தெரிந்த வாசல் கேட்டை

நோக்கினார். வாசல் கேட்டருகே பென்ஸ் ஒன்று நின்றிருந்தது. பென்ஸின் அருகே நாயக் நின்றிருந்தான்.

நாயக்கை செக்யூரிட்டிக்காக ரன்ஜித் அமர்த்தியிருந்த ஆள் ஒருவன், நாயக்கின் உடல் முழுக்க சோதனை செய்து கொண்டிருந்தான். சோதனை முடிந்ததும், நாயக்கிடம் ஆயுதம் எதுவுமில்லை என்று தெரிந்ததும் அவனை அனுப்பினான்.

நாயக் பென்ஸில் ஏறி, பென்ஸ் உடனே புறப்பட்டு ரன்ஜித் நின்றிருந்த இடத்திற்கு வெகு அருகே வந்து நின்றது. நாயக் இறங்கினான். ரன்ஜித், ஆபீஸிலிருந்து திரும்பி வந்த அப்பாவைக் கண்டு விட்ட சந்தோஷத்துடன் கடகட வென்று படிகளில் இறங்கி, நாயக் அவரை நெருங்குவதற்கு முன்பாக, அவர் அவனை நெருங்கி அணைத்துக் கொண்டார்.

''ஐ ஃபீல் வெரி ப்ரவுட் ஆஃப் யூ மை பாய்.''

''தாங்க் யூ சார்'' என்றான் நாயக் வெகு அடக்கமாக, பணிவாக,

''மூன்று பேரும் போய்விட்டார்கள் என்று கேள்விப் பட்டேன்.''

''ஆம் சார். விபத்து போலவே...''

''உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? ஏழு நாட்கள் கேட்டாய். ஏழு நாட்களுக்குள் முடித்து விட்டாய். கேள். உனக்கு என்ன வேண்டும் கேள்., என் சாம்ராஜ்யத்தில் பாதி வேண்டுமா?''

''உங்கள் அன்பு இருந்தால் போதும் சார்.''

''அ... அதெல்லாம் ஸ்க்ரீன் டயலாக். வா. என்னோடு விஸ்கி குடி.''



''ஓகே சார்'' என்று நாயக் அவரைத் தொடர்ந்தான்.

ரன்ஜித் தன் அறையில் இருந்த காக்டெய்ல் டேபிளை நெருங்கினார். ஷெல்ஃபைத் திறந்து, இரண்டு கைகளையும் விரித்து, 'தேவையானதைத் தேர்ந்தெடு' என்ற பாவனை காட்டினார்.

நாயக் வாட் ஸிக்ஸ்டி நைனைத் தேர்ந்தெடுத்தான்.

ரன்ஜித் இரண்டு கோப்பைகளில் தாராளமாக விஸ்கியை ஊற்றினார். ஒன்றை அவனிடம் நீட்டி, இன்னொன்றை எடுத்துக் கொண்டு 'சீயர்ஸ்' என்றார் சீப்பினார்.

நாயக் மெதுவாக ருசித்தான்.

''நாயக்.''

''யெஸ் சார்.''

''எப்படி உன்னால் வேலை செய்யும் நேரத்தில் குடிக்காமல் இருக்க முடிகிறது?''

''டூட்டி ஃபர்ஸ்ட் சார்.''

''நீ என் நண்பன்தானே?''

''அடிமை சார்.''

''பின் எதற்கு வாசலில் செக்யூரிட்டி கார்டிடம் செக்யூரிட்டி எதற்காக நிற்கிறாய்? செக்யூரிட்டி செக் மற்றவர்களுக்குத்தான். உனக்கில்லை என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்.''

''நான் ஒருவன் உரிமை எடுத்துக் கொண்டால் மற்றவர்களுக்கும் அந்த உரிமை தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று விரும்புவார்கள் சார். என்னால் அப்படி ஒரு நிலை உங்களுக்கே வரக்கூடாது. ரூல் என்றால் ரூல் தான்.''

''மற்றவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''ஸாரி சார் புதிதாக ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று பார்க்கிறேன்.''

''ஓ.கே. ஆஸ் யூ விஷ். அப்புறம் ஜெயதேவ் உன் மீது கோபமா இருப்பான். அவனது மூன்று ஆட்களை நீ காவு வாங்கியிருப்பதற்காக.

''தெரியும் சார்.''

''பீ கேர் ஃபுல்''

''யெஸ் சார்! நான் போகலாமா?''

''ம்''

நாயக் லேசான தள்ளாட்டத்துடன் எழுந்தான். ரன்ஜித்தின் அறையை விட்டு வெளியேறி, தனக்காகக் காத்திருந்த பென்ஸில் ஏறி அமர்ந்தான்.



## 16

அடையாறு சர்தார் வல்லபாய் படேல் சாலையின் குறுக்கே வெட்டிச் செல்லும் பக்கிங்ஹாம் கால்வாயை ஒட்டி இருக்கும் கேன்ஸர் இன்ஸ்டிடியூட்டின் காம்பவுண்ட் சுவர் ஓரமாக உள்ளே போகும் தெருவில் நுழைந்தால், சற்று தூரத்திற்குத் தெரு ஃப்ளாட் சிஸ்டம், பங்களாக்கள், கார்கள், டென்னிஸ் கோர்ட்டின் டொக், டொக், பெராம்புலேட்டர், காம்பளான் குழந்தைகள் என்று சற்று தூரம்வரை மிக புஷ்டியாகச் செல்லும்.

அது குறிப்பிட்ட ஒரு தூரம் வரை. அப்புறம் சாலை மேக்கப்பை மாற்றிக் கொள்ளும். அரசியல் சார்பற்ற



அம்பேத்கார் நற்பணி மன்ற போர்டு தெருவோரத்தில் நடப்பட்டிருக்கும் இடத்தில் இருந்து தெரு குண்டும் குழியுமாகச் செல்லும். தெருவின் இடது பக்கம் வரிசையாய் அமைந்திருக்கும் குடிசைகள். வலப்பக்கம் நேர்ச் செங்குத்தான ஒரு கோணத்திலிருந்து ஓடி வந்து சேரும் அடையாறு.

தூரத்தில் திரு.வி.க. பாலத்தின் போக்குவரத்து சாயங்கால சூரியனின் மஞ்சள் வெயிலில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

அந்தப் போக்குவரத்தையும், சாலையோரம் ஒதுங்கியிருந்த ஒரு திடலில் கபடி ஆடிக் கொண்டிருந்த, அம்பேத்கார் நற்பணி மன்ற உறுப்பினர்களையும் வேடிக்கை பார்த்துக்கொண்டே அவன் சைக்கிளில் விரைந்து கொண்டிருந்தான். விரைந்து கொண்டிருந்தவன் ஒரு லுங்கி கட்டியிருந்தான். பிளாஸ்டிக் செருப்பு அணிந்திருந்தான். சாதாரண நீலக்கலர் சட்டை. சமீபத்தில்தான் அவன் திருப்பதிக்கோ, பழனிக்கோ போய் வந்திருந்தான் என்பதை அவனது தலைமுடி தெரிவித்துக் கொண்டிருந்தது. தலையில் ஒரே அளவில் வளர்ந்திருந்த பத்து நாள் முடி. மீசை கூட பத்து நாள் மீசை. ஷேவ் செய்யாத கன்னங்கள். கண்களை ஒரு குளிர் கண்ணாடி மறைத்துக் கொண்டிருந்தது.

அவன் சைக்கிளை அழுத்தமாக ஒரு முறை மிதித்து விட்டு, அது சென்ற வேகத்தில் கொஞ்ச தூரம் ஓசி சவாரி செய்துவிட்டு, ஒரு பெரிய குடிசையின் வாசலில் சைக்கிளை நிறுத்தினான். இறங்கி ஸ்டாண்ட் போட்டான்.

உள்ளேயிருந்து எட்டிப் பார்த்த குழந்தை ஒன்று, ''மாமா வந்தாச்சு'' ''மாமா வந்தாச்சு'' என்று கத்திக் கொண்டே ஓடி வந்து அவன் கால்களைப் பற்றிக் கொள்ள, மூன்று வயதான

அந்தப் பெண் குழந்தையை அவன் தூக்கி முத்தமிட்டு குடிசைக்குள் நுழைந்தான்.

வெளியில் இருந்து பார்ப்பதற்குத் தான் குடிசை.

உள்ளே அப்படி ஒன்றும் குடிசைக்குரிய லட்சணங்கள் இல்லை. நன்றாகத் திட்டமிட்டுக் கட்டப்பட்ட விசால மான ஹால். படுக்கை அறைகள். கட்டில்கள், சமையல் அறை.

அவன் உள்ளே நுழைந்ததும், ஹாலில் படுத்திருந்த ஒரு பெண்மணி எழுந்து கொண்டாள். அவளுக்கு வயது ஐம்பது இருக்கலாம். தளர்ந்திருந்தாள். வாழ்க்கையில் நிறைய பிரச்சினைகளைச் சந்தித்திருந்தாள் என்று அவள் முகத்தில் இருந்த சுருக்கங்கள் கூறின.

''வாப்பா...'' என்று கூறிவிட்டு அவன் முகம் பார்த்தாள்.

அவன் அவள் எதிர்பார்க்கும் ஏதோ ஒன்றைச் சொல்லப் போகிறான் என்ற நம்பிக்கையுடன் பார்த்தாள்.

அவன் எதுவும் சொல்லவில்லை. மௌனமாக முற்றத்தில் இறங்கி காலைக் கழுவிக் கொண்டான்.

கால் கழுவும் ஒலி, குழந்தையின் 'மாமா வந்தாச்சு' என்று எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்து சமையல் அறையில் இருந்து எட்டிப் பார்த்த அந்தப் பெண்ணிற்கு வயது இருபத்திரண்டு இருக்கலாம்.

''வாங்க அண்ணா'' என்றாள் அவளும் அவன் எதுவோ சொல்லப் போகிறான் என்ற எதிர்பார்ப்புடன் அவனைப் பார்த்தாள்.

அவன் டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டே அவளைப் பார்த்தான். கை நீட்டி அவள் தலையைத் தொட்டு ஆதுரமாக வருடிவிட்டான்.



''என்ன இந்திரா கவலையா இருக்கா?'' என்றான்.

''ஆமாம் அண்ணா'' என்றாள் அவள்.

''உன் அண்ணன் ஸ்வாமியும், ரங்கநாயகியின் பையன் நாயக்கும் இப்போது நேருக்கு நேர் மோதிக் கொள்ளப் போகிறார்கள்'' என்றான் அவன்.

''ஐயையோ'' என்று ஒரே குரலில் இந்திராவும், ரங்கநாய கியும் பதற்றக் குரல்களை வெளிப்படுத்தினார்கள்.

''எதற்குப் பதற வேண்டும் நீங்கள்?'' என்று கேட்டான் அவன்.

''அண்ணன் இன்னொரு கொலை பண்ணப் போகிறதா? ஏற்கனவே அண்ணன் ஜெயிலில் இருக்க வேண்டியவன். யார் புண்ணியத்திலோ வெளியே இருக்கிறான். அவன் இந்தத் தடவை போலீசில் மாட்டி ஜெயிலுக்குப் போனால், அவனைத் தூக்கில் தொங்க விட்ட பிறகுதான் போலீஸ் காரர்கள் சும்மா இருப்பார்கள்.''

''நாயக்கும் அப்படித் தானே தம்பி, என்ன இருந்தாலும் என் பையன். அவன் செத்துப் போய் விட்டால் என்னால் உயிரோடு இருக்க முடியாது. அவனை என்றைக்காவது ஒரு நாள் என்னிடம் கொண்டு வந்து சேர்க்கிறேன் என்று நீ சொன்னதை நம்பித்தான் நான் இன்னும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருக்கிறேன். நீ எப்போது நாயக் வரப்போகிறான் என்ற சேதியைச் சொல்லப் போகிறாய் என்றே எனக்குத் தெரியவில்லை.''

''ஒரு வருஷமா, இரண்டு வருஷமா? இருபத்தைந்து வருஷங்களாகப் பொறுத்துக் கொண்டிருக்கிறீர்களே ரங்க நாயகிம்மா. இன்னும் கொஞ்சநாள் பொறுக்கக் கூடாதா? ஏன் இந்திரா. உன்னையுந்தான் சொல்லுகிறேன். உனக்குச்

சோறு போட்டு, உனக்குத் தேவையானதை வாங்கிக் கொடுத்து, உனக்குக் கல்யாணமும் செய்து வைத்து, உன் பிள்ளையைக் கான்வென்ட் ஸ்கூலில் சேர்த்திருக்கும் என்னைப் பார்த்தால் உனக்கு அண்ணனாகத் தெரிய வில்லையா? ஸ்வாமிநாதன் உனக்கு அண்ணனாகத் தெரி கிறதானா?''

இந்திரா அழத் தொடங்கினாள்.

''ஸ்வாமி ஒன்றும் தெரியாதவன் அண்ணா, அவனைக் கெடுத்து, இந்த நிலைக்குக் கொண்டு வந்திருப்பதே...''

''ஷ்...'' என்றான் அவன். இந்திராவின் கன்னத்தில் லேசாகத் தட்டினான். ''அழக் கூடாது. நான் சும்மா வேடிக் கைக்குச் சொன்னேன். எனக்கு உன்னைப் பற்றித் தெரியாதா என்ன? அம்மாவிடம் சொன்னதுதான் உனக்கும். இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்திரு. உனக்கு சந்தோஷமான செய்தி தருகிறேன்.''

''அதற்குள் நாயக்கும், ஸ்வாமியும் மோதிவிட்டால்?''

''ஒன்றும் ஆகாது என்றுதான் நினைக்கிறேன். அப்படி ஏதாவது நடந்தால், அது என் கைமீறிப் போன விஷயம் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று லேசான கவலையுடன் கூறிவிட்டு, அவன் ஒரு படுக்கையறைக் கதவைத் திறந்து, உள்ளே நுழைந்து தாள் போட்டுக் கொண்டான்.

கட்டிலை நெருங்கி, சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு படத்தை எடுத்துக் கட்டில்மேல் வைத்தான். சுவரில் ஒரு மரக்கதவு. சுவர் நிறத்திற்குப் பெயின்ட் அடிக்கப்பட் டிருந்தது.

அவன் அதைத் திறந்தான்.



உள்ளே ஒரு டெலிபோன் இருந்தது. ரிசீவரை எடுத்தான். டயல் செய்தான்.

எதிர்முனையில், மணிஅடித்தது. ரிசீவர் எடுக்கப்பட்ட 'க்ளிக் டக்' கேட்டது.

''ஹலோ'' என்றான் இவன்.

''யெஸ்.''

''ஸ்வாமி?''

''யெஸ்''

''நண்பன்'' என்றான் இவன்.

''ஓ... ஹலோ...'' என்றான் ஸ்வாமி எதிர்முனையில். ''நீ தொடர்பு கொள்ள மாட்டாயா என்றுதான் காத்திருந் தேன்.''

''எதற்காக?''

''எனக்கொரு இன்ஃபர்மேஷன் வேண்டும்.''

''என்னது?''

''நாயக் இப்போது எங்கே இருக்கிறான்? என்ன செய்து கொண்டிருக்கிறான்?''

''உன்னால் கண்டுபிடிக்க முடியவில்லையா ஸ்வாமி?''

''என் ஆட்கள் நான்கு பேரை அதற்காக ஏவிவிட வேண் டும். நேரம் செலவாகும். மேலும் என் ஆட்கள் நாயக்கைத் தேடுவது, நாயக்கிற்கோ, ரன்ஜித்திற்கோ தெரிந்தால் அவர்கள் உஷாராகி விடுவார்கள். என் ஆட்கள் தேடினால் விஷயம் லீக் ஆகிவிடும் என்று பயப்படுகிறேன்.''

''நாயக் இருக்குமிடம் எனக்குத் தெரியும்.''

''சொல்லு... சொல்லு...''

''இருபத்தைந்தாயிரம்...''

''சரி.''

''பணத்தை மயிலாப்பூர் லஸ் சர்ச் ரோடிலிருக்கும் ஒரு பழைய புஸ்தகக்கடை.''

''ஃப்ரண்ட். விவரம் வேண்டாம். எனக்குத் தெரியும். இன்னும் இரண்டு மணி நேரத்தில் போஸ்ட் பாக்ஸில் பணம் இருக்கும். நீ இன்ஃபர்மேஷனைச் சொல்.''

''ஓ.கே.நாயக்கை என்ன செய்யப் போகிறாய்?''

''கொல்லப் போகிறேன்.''

''நாயக் அவ்வளவு சுலபமாகச் சாகமாட்டான்.''

''அந்தக் கவலை என்னுடையது. நாயக் எங்கே இருக்கிறான் சொல்.''

''நாயக்கிற்கு வேலை இல்லாத நேரங்களில் ஒரே பொழுது போக்கு பீர் குடிப்பது. அதுவும் அளவுக்கு அதிகமாக.''

''நாயக் எங்கே குடிப்பான்?''

''நீல நிலாவில்.''

''ரன்ஜித்தின் ரெஸ்டாரெண்டில் தானே?''

''ஆம். தினம் மாலை ஏழு மணிக்கு அங்கே வருவான். நள்ளிரவு வரை அவன் அங்கேதான் இருப்பான். நேற்று வந்தான். இன்றைக்கும் வருவான்.''

''தாங்க்யூ ஃப்ரண்ட்'' என்றான் ஸ்வாமி. ''ஒரே ஒரு சந்தேகம்''

''என்ன?''



''என்னாலேயே கண்டு பிடிக்க முடியாத விஷயங்கள் எல்லாம் உனக்கு எப்படித் தெரிகிறது?''

''இன்ஃபார்மரின் வேலையே கண்களையும், காதுகளையும் அகலத் திறந்து வைத்துக் கொள்வதுதான்... அதை நான் ஒழுங்காகச் செய்கிறேன். இல்லாவிட்டால் உனக்கும், உன் கூட்டத்திற்கும் நான் இவ்வளவு விஷயங்களைத் தரமுடியுமா?''

''அந்த அளவிற்கு சம்பாதிக்கிறாயே...''

''நான் சம்பாதிப்பதையெல்லாம் என்னிடம் வேலை செய்கிறவர்கள் அத்தனை பேருக்கும் தருகிறேன். நான் வாங்கும் பணம் எனக்கேவா செலவழிகிறது?''

''இவ்வளவு பேசுகிறாயே... உன் பெயர் தான் என்னவென்று சொல்லேன்?''

''ஆண்டவன் என்று வைத்துக் கொள்ளேன்'' என்று ரிசீவரைக் கீழே வைத்தான் அவன். அவன் நெற்றியில் கவலைக்கோடுகள் பிறந்திருந்தன. லேசாக வியர்த்திருந்தான். ஸ்வாமியிடம், நாயக் மாட்டிக் கொள்வான் என்றுதான் அவனுக்குத் தோன்றியது.

ஏதோ யோசித்தவன் மறுபடி ரிசீவரை எடுத்து டயல் செய்தான்.

''ஹலோ ஆண்டவன்'' என்றான் எதிர்முனையில் குரல் கேட்டதும்.

''ஆண்டவன்... தாங்க்யூ... தாங்க்யூ'' என்றான் நாயக்.

''எதற்கு தாங்க்ஸ்?''

''மோகன் இருந்த இடத்தைச் சொன்னதற்கு.''

“நான் இப்போது போன் செய்தது எதற்காகத் தெரியுமா?”

“தெரியும்.”

“என்ன?”

“என் உயிர் ஆபத்தில் இருக்கிறது. அப்படித்தானே?”

“ஆம்.”

“என்னைக் கவனித்துக்கொள்ள எனக்குத் தெரியும்.”

“இருந்தாலும்... நான் சொல்வதை உதாசீனப்படுத் தாதே...”

“சொல்.”

“காசில்லாமல் நான் சொல்லும் முதல் இன்ஃபர் மேஷன்.”

“சொல்.”

“ஸ்வாமி உன்னைத் தீர்த்துக் கட்டப் போகிறான்.”

“தாங்க்யூ. நேரில் அவனைச் சந்தித்தால் ஸ்வாமியை நான் தீர்த்துக் கட்டுகிறேன்.”

“நீ ஏமாந்தால் அவன் ஜெயிப்பான்.”

“அவன் ஏமாந்தால் நான் ஜெயிப்பேன். ஆண்டவன் பார்த்துக் கொண்டேயிரு. ஸ்வாமிதான் ஏமாறப் போகிறான்...! எனிவே... தாங்க்யூ ஃபர் தி இன்ஃபர்மேஷன்...”

எதிர்முனையில் போன் தொடர்பு துண்டிக்கப்பட, நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வை முத்துக்களைத் துடைத்து விட்டுக்கொண்டு எழுந்தான் அவன்.





## 17

ஸ்வாமி தன்னறையில் உட்கார்ந்திருந்தான். ஏ.ஸி. மெலிதாக தேனீ ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

முழுக்க முழுக்கக் கண்ணாடியிலான டீப்பாய் மீது ஸ்வாமி ஒரு வரைபடத்தைப் பரப்பி வைத்துக் கொண்டிருந்தான். அது நீலநிலா ரெஸ்டாரெண்டின் வரைபடம். கார்ப்பொரேஷன் ஆபீஸில் இருந்து அந்த வரைபடம் அவனுக்கு வந்து சேர்ந்திருந்தது. நீலநிலா கட்டி முடித்து ஒரு வருஷம்தான் ஆகியிருந்தது என்பதாலும், ரன்ஜித்தின் நீலநிலா ரெஸ்டாரெண்டுக்கான ப்ளானை கார்ப்பொரேஷன் எந்த ஒரு மாற்றமுமின்றி கட்டிக் கொள்ள அனுமதி அளித்திருந்தாலும், நீலநிலா இன்றைக்கும் அந்த வரை படத்தின்படி தான் இருக்கும் என்பதில் ஸ்வாமிக்கு சந்தேகம் எதுவும் இன்றி இருந்தது. ஸ்வாமி கையில் ஒரு பென்சிலை வைத்துக் கொண்டு அந்த வரைபடத்தை மிகத் தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கார் பார்க்கிங், புல்வெளி, கான்க்ரீட் பாதை, கட்டடத்தின் முகத்திற்கு அழகு சேர்ப்பதற்கு இரண்டு சிலைகள், பிரம்மச்சாரி வேலைக்காரர்கள் தங்கிக் கொள்ள க்வார்ட்டர்ஸ், ரெஸ்டாரெண்ட், சமையலறை, பார், மதுவகைகளை வைத்துக் கொள்ள ஸ்டோர் ரூம், ஸ்டோர் ரூமிலிருந்து யார் பார்வையிலும் படாமல் வெளியேற ஒரு வழி என்று நீலநிலா வெகு நேர்த்தியான திட்டத்துடன் கட்டப்பட்டிருந்தது. அந்த நீலநிலாவில் பிறர் பார்வையில் படாமல் நுழைய முடியுமென்றால் ஒரே வழி தான் இருந்தது. பாருக்கான ஒரு ஸ்டோர் ரூம். அந்த ஸ்டோர் ரூமிலிருந்து வெளியேறும் வழி.

ஸ்வாமி அந்த வழியில் நுழைந்து வெளியேறித் தான் தன் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தான்.

ஸ்வாமி வரைபடத்தை டீப்பாயிலேயே வைத்துவிட்டு, லெமனேட் நிறைந்த ஒரு கோப்பையை மெல்ல சீப்பினான்.

உட்கார்ந்திருந்த சோபாவில் தனக்குப் பக்கத்தில் வைத்திருந்த கவர் ஒன்றை எடுத்தான். அதைப் பிரித்து அதில் இருந்த போட்டோக்களை எடுத்தான்.

நீல நிலாவில் வேலை செய்பவர்களின் படங்கள்.

ஒவ்வொரு படமாகப் பார்த்துக் கொண்டே வந்த ஸ்வாமி, பாரில் மது வகைகளை அளந்து அளந்து ஊற்றும் துரையப்பாவின் படத்தைப் பார்த்ததும் பார்வையை அதில் நிலைக்க விட்டான்.

துரையப்பா முன் வழுக்கையுடன் இருந்தான். ஐம்பது வயதுக்காரன் என்பது வயதுக்காரன் போல் முகத்தில் சுருக்கங்களுடன் காட்சி தந்தான். அவனுக்குக் கீழே கொடுக்கப்பட்டிருந்த குறிப்பில் துரையப்பாவிற்கு நான்கு பெண்கள் ஒரு பையன் என்றும், துரையப்பா பிற்காலத்தில் சம்பாதித்துத் தன்னைக் காப்பாற்றப் போகும் மகன் மீது நிறைய பாசம் வைத்திருப்பவர் என்றும் ரேஸ் பைத்தியம் என்றும் கொடுக்கப்பட்டிருந்தன.

துரையப்பா ஸ்வாமிக்காகவே படைக்கப்பட்டிருந்தான்.

ஸ்வாமி அவனை உபயோகப்படுத்திக் கொள்வது என்று தீர்மானித்தான்.

ஸ்வாமி அரை மணி நேரத்திற்குள் தன்னை முழுதாக மாற்றிக் கொண்டிருந்தான். நன்றாக மழுங்க ஷேவ் செய்யப்பட்ட முகம். பின்னால் விர்ரென்று மேல் நோக்கிப் போகிற மாதிரி ஸ்டைலில் தலை வாரல். ஒரு வெள்ளை முழுக்கை சட்டை. ரேமண்ட் டை. க்ரே நிற ரேமண்ட் பான்ட். ஷூ. கையில் ஒரு லெதர் பேக். கண்களை மறைக்க ஒரு கூலிங் கிளாஸ். பெரும்பாலானவர்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்படுவது கண்களை வைத்துத்தான் என்பதால் கண்களை மறைத்து விடத் தீர்மானித்தான் அவன்.



வீட்டிலிருந்து வெளியே வந்தான். அவனுடைய தொலைபேசி உத்திரவுக்குப் படிந்து பிரதான சாலையில் ஒரு யமஹா நின்றிருந்தது. இக்னிஷன் சாவி அதில் செருகப்பட்டிருந்தது. பெட்ரோல் டாங்க்கை மூடிக் கொண்டிருந்த தோல் பை ஒன்றின் ஜிப்பை நீக்கி அதனுள் பார்த்தான் ஸ்வாமி. அவன் கேட்டிருந்த ஸேல்ஸ் ரெப்ர சென்டேடிவ் ஐடன்டிடி கார்டு இருந்தது. த்ரீ-சீயர்ஸ் மதுக்கம்பெனியின் சேல்ஸ் ரெப்ரசென்டேடிவ் என்று அந்த கார்டு ஸ்வாமியின் தற்போதைய போட்டோ ஒன்றுடன் காட்சி தந்தது.

யமஹாவைக் கிளப்பினான்.

நீல நிலா ரெஸ்டாரெண்ட் காலை பதினோரு மணிக்குக் கொஞ்சம் சோம்பேறித் தனமாகவே காட்சி தந்தது. எட்வர்ட்ஸ் எலியட்ஸ் சாலை என்று முன்னாளிலும், ராதா கிருஷ்ணன் சாலை என்று இந்நாளிலும் வழங்கி வந்த சாலையின் ஒரு குறுக்கு வெட்டில் சற்று தூரம் போனால் ஏராளமான நிலப்பரப்பை அடைத்துக் கொண்டு அமைந் திருந்த நீல நிலா தான் அங்கிருப்பதை சினிமா ஸ்லைடுகள் மூலமும், பத்திரிகை விளம்பரங்கள் மூலமும் அவ்வப்போது தெரிவித்துக் கொண்டு வந்ததால் மட்டுமே நீல நிலாவின் சர்வைவல் சென்னை நகர வாசிகளுக்குத் தெரிந்திருந்தது. இருந்தாலும் ஆபீஸ், வியாபாரம் ஆகியவற்றுக்கான நேரம்

போக மீதி நேரத்தில் தான் மது, உணவு என்று வாடிக்கை யாளர்கள் நினைத்து விட்ட படியால், அந்த நேரத்தில் அது சோம்பி இருந்தது. ஸ்வாமிக்கு எந்த வித ஆச்சரியத்தையும் உண்டு பண்ணவில்லை. அவன் அதைத்தான் எதிர்பார்த் திருந்தான்.

இன்-கேட்டில் நின்ற வாட்ச்மேன் ஒரு மங்கோலியன். யமஹாவைப் பார்த்து, ஸ்வாமியைக் கேள்வி கேட்காமல் உள்ளே அனுமதித்தான்.

ஸ்வாமி பைக்கை கார் பார்க்கிங்கில் நிறுத்தினான். நிறைய கார்களை நிற்க வைக்கலாம். தற்சமயம் இரண்டு கார்கள். இன் கேட்டிற்கு நேராக ஒரு பளிங்குப் பெண்ணின் சிலை நின்றிருந்தது. அவள் அஜந்தா, எல்லோரா குகைச் சித்திரங்களின் ஏதோ ஒரு போஸை ஞாபகப்படுத்தினாள். அவுட்-கேட்டிற்கு நேராக இந்தச் சிலையின் இன்னொரு ரெப்ளிகா. கார்கள் உள்ளே நுழைந்து சிலைக்கு இடதுபுறம் உருண்டு சென்று நின்று புறப்படும் போது சிலையின் பின்னழகைப் பார்த்துக் கொண்டே வந்து, இன்னொரு சிலையையும் கடந்து, அவுட்-கேட் வழியாக வெளியேறு கிற மாதிரி அந்த காம்பவுண்டிற்குள் கான்க்ரீட் சாலை வளைத்து வளைத்துப் போடப்பட்டிருந்தது. வரைபடத்தில் இருந்த புல்வெளியில் ஒரு வண்ண நிழற்குடை நடப்பட்டு அதன் கீழ் இருந்த நாற்காலிகளில் நான்கு ஃபாரினர்கள், இரண்டு ஆண்கள், இரண்டு பெண்கள் ரம்மோ, ஒயினோ குடித்துக் கொண்டிருந்தார்கள். சிக்கனோ, மட்டனோ கடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்வாமி ரெஸ்டாரெண்ட் வாசலை அணுகினான். வாசலில் ஒரு மஃப்டி ஆசாமி நின்றிருந்தான். கஸ்டமர் போலத் தெரியவில்லை. அடியாள் போலத் தெரிந்தான். ரன்ஜித்திடம் கூலி வாங்கும் அடிமட்ட ஆசாமிகளில் ஒருவனாய் இருப்பான். வெறும் ஹோட்டல் டூட்டிக்காரன். அவனுக்கு ஸ்வாமியைத் தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை.



உள்ளே நுழைய இருந்த ஸ்வாமியை வழி மறிப்பது போல் நின்றான்.

''எங்கே சார்?''

''துரையப்பாவைப் பார்க்க வேண்டும்'' என்றான் ஸ்வாமி.

''எதற்கு?''

''அவர் எனக்குக் கடன்தர வேண்டும்.''

''உங்களிடமும் வாங்கி விட்டானா? போங்கள். போங்கள். ரெஸ்டாரெண்ட் வழியில் வேண்டாம். பின் னால் ஒரு வழி இருக்கிறது. அப்படிப் போங்கள்.''

அவன் காட்டிய திசையில் நடந்தான் ஸ்வாமி. காம்ப வுண்ட் சுவர்கள் உயரமாக இருந்தன. கூரான கண்ணாடிச் சில்லுகள் பதிக்கப்பட்ட அந்த காம்பவுண்ட் சுவரைக் கடக்க வேண்டுமானால் போல் வால்ட்டில் எக்ஸ்பர்ட்டாக இருப்பவர்களால்தான் முடியும். ஸ்வாமி காம்பவுண்ட் சுவரைத் தாண்டிக் குதிக்கும் ஐடியாவை உடனே நிரா கரித்தான்.

லேசாகப் புல் வளர்ந்த சீராக வெட்டி விடப்பட்டு வெகு அழகாகக் காட்சியளித்த பாதையில் நடந்து, ஸ்டோர் ரூம் என்று லாமினேடட் போர்டு பதிக்கப்பட்டிருந்த அறைக் கதவைத் தட்டினான். திறந்தது.

எட்டிப் பார்த்தது துரையப்பா. மாட்டிக் கொண்ட எலியின் பயம் கண்களில்.

''யார்... யார் நீங்கள்?'' என்றான் துரையப்பா.

''உள்ளே வரலாமா? நான் ஒரு ஸேல்ஸ் ரெப்ரெசன்டேடிவ். த்ரீசியர்ஸ் லிக்வர் கம்பெனி. உங்கள் பாரில் இருக்கும் விஸ்கி, பிராந்தியை விட நல்ல தரமான விஸ்கி, பிராந்திகளின் சாம்பிள்களைக் கொண்டு வந்திருக்கிறேன். குறைந்த விலையில் கொடுக்கிறேன். உங்களுக்கு நிறைய கமிஷன்.''

துரையப்பா கதவை அகலமாகத் திறந்து விட்டான்.

'இதுபோதும்' துரையப்பாவை மடக்க என்று எண்ணிக் கொண்டான் ஸ்வாமி.

நுழைந்தான்.

ஸ்டோர் ரூம் வெகு நீட்டாக இருந்தது. வரிசையாக கோட்ரேஜ் ரேக்குகளில் அடுக்கப்பட்டிருந்த அட்டைப் பெட்டிகளில் விஸ்கி, பிராந்தி, ஜின், ரம், பீர், ஒயின் பாட்டில்கள் சாயங்காலங்களில் வரப்போகும் பெரிய மனிதர்களுக்காக காத்திருந்தன.

நடுவே டேபிள், சேர், ஏ.ஸியின் ரீங்காரம்.

''உட்காருங்கள்.''

ஸ்வாமி உட்கார்ந்தான். லெதர் கேஸைத் திறந்தான். ஏற்கனவே தயாரித்துக் கொண்டு வந்திருந்த 750 மில்லி பாட்டில்களை கவர்களுடன் எடுத்துக் கொடுத்தான்.

சுமார் பதினைந்து நிமிடங்கள் பேசினான். துரையப்பா தனக்கு வரப்போகும் ஐம்பது சதவீத கமிஷனை நினைத்து மகிழ்ந்து நிறைய ஆர்டர் கொடுத்தான். ஸ்வாமி முன் கமிஷனாக ஒரு ஆயிரம் ரூபாயை நீட்டினான். துரையப்பா சந்தோஷமாக வாங்கிக் கொண்டான்.



'எப்போது சரக்கைக் கொண்டு வருவீர்கள்?'

''இன்னும் ஒரு வாரத்தில்'' என்றான் ஸ்வாமி. ''ரெஸ்டாரெண்டைச் சுற்றிப் பார்க்கலாமா? எனக்கு ஏதாவது ஐடியா தோன்றும், ஸேல்ஸ் இம்ப்ரூவ்மெண்டிற்கு.''

''ஓ யெஸ்... ஓ யெஸ்'' என்று இரண்டு முறை ஆமோதித்து விட்டு, ஸ்வாமியைக் கூட்டிக் கொண்டு பாரில் நுழைந்தான் துரையப்பா. பார் ஒரு குதிரை லாடம் போல் வடிவமைக்கப்பட்டு இருந்தது. ஸ்டோர் ரூமிலிருந்து வெளிப்படுகையில் ஆள் உயரத்திற்கும் சற்று உயரக் குறைவான மரக்கவுண்டர் ஸ்டோர் ரூம் வாசல் வரை வளைந்து வந்து முடிந்தது. ஸ்டோர் ரூமில் இருந்து தவழ்ந்து தவழ்ந்து யாராவது பாருக்குள் நுழைந்தால் வெளியே இருப்பவர்கள் யாரும் கண்டுபிடிக்க முடியாது.

''இந்த பாருக்கும் நீங்கள் தான் பொறுப்பா?''

''ஸ்டோர் ரூம், பார் இரண்டிற்கும் நான் தான் இங்கே எல்லாமே. இதோ ஹார்ஸ் ஷூ கவுண்டருக்கு அந்தப் பக்கம் இருக்கும் ஸ்டூல்களில் கஸ்டமர்கள் உட்காருவார்கள். நான் தான் ஸர்வ் பண்ணி கணக்கு வைத்துக் கொள்வேன். ஹோட்டல் பேரர்கள் என்னிடமிருந்து பெக், பெக்காக சரக்கு வாங்கிப் போவார்கள். நான் தான் கணக்கு. ஸ்பௌண்டர் நான்கு பெக், மக்டவல் பிராந்தி மூன்று பெக், ப்ளாக் நைட் ஹாஃப் பாட்டில் பீர் மூன்று, ஹேவார்ட்ஸ் பைவ் தவுசண்ட் ஒரு பத்து... இப்படி எல்லாக் கணக்குமே (மூளைப் பகுதியைத் தொட்டுக்காட்டி) இங்கே தான். நான் இல்லா விட்டால் பார் ஆடிப் போகும்! ஏதாவது சாப்பிடுகிறீர்களா?''

''ஒன்றும் வேண்டாம்'' என்று மறுத்து விட்டு, துரையப்பாவுடன் வியாபார விஷயமாக சாக்லேட் பேச்சை

இன்னும் சிறிது நேரம் பேசி விட்டு, பேசிக் கொண்டிருந்த நேரம், ரெஸ்டாரெண்டை, அதன் அமைப்பை நன்றாக உற்றுப் பார்த்து மனதில் படிய வைத்துக் கொண்டு வெளியேறினான் ஸ்வாமி.

ஸ்வாமி நீல நிலா ரெஸ்டாரெண்டிலிருந்து புறப்பட்ட அதே சமயம், மகாபலிபுரம் நோக்கிச் செல்லும் பழைய பாதையில் அமைந்திருந்த கல்லூரி ஒன்றின் அருகில் அந்த நிகழ்ச்சி வெகு எளிதாக நடந்தேறியது.

துரையப்பாவின் மகன், உலகு என்னும் உலகநாதன் அந்தக் கல்லூரியில் இருந்து வெளியேறினான். வீட்டை நோக்கிப் புறப்படுவதற்காக.

உலகநாதன் பி.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி படித்துக் கொண்டிருந்ததும், தற்சமயம் ஃபைனல் இயரில் இருப்பதும் கதைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் என்பதால் -

பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்து கொண்டிருந்த உலகநாதனின் பக்கத்தில் அந்தக் கார் வந்து உரசிய மாதிரி நின்றது.

உலகநாதன் திகைத்துப் போய்க் காரினுள்ளே பார்த்தான்.

வெள்ளை வெள்ளையில் இருந்த டிரைவர், டிரைவருக்குப் பக்கத்தில் இருந்து இன்னொருவன்.

''தம்பி உலகநாதன் தானே?''

''ஆமாம்.''

''துரையப்பா உங்க அப்பா தானே?''

''ஆமாம்.''

''பார்ல வேலை செய்றப்ப ஒரு விஸ்கி பாட்டில் ஒடைஞ்சி அவர் கண்ல சாராயம் கொட்டிரிச்சி. ஆஸ்பத்திரில அட்மிட் பண்ணிருக்கோம். ஒன் பேரைச் சொல்லி புலம்பிக் கிட்டிருக்காரு. அதான் கூட்டிட்டுப் போலாம்னு வந்தோம். பயப்படறதுக்கு ஒண்ணுமில்ல. எங்க கூட வர்றீங்களா? இல்ல வீட்டுக்குப் போய் அம்மாவைக் கூட்டிட்டு வர்றீங்களா? தேவகி ஹாஸ்பிடல்லதான் அட்மிட் பண்ணியிருக்கோம். வார்ட் இரண்டு...''



''உங்க கூடயே வந்துடறேன்.''

மிகப் பழைய டெக்னிக். ஆனாலும் எப்போதும் கை கொடுக்கும் டெக்னிக். உலகநாதன் ஏமாந்து போய் காரில் ஏறி அமர்ந்தான்.

போன் ஒலித்ததும் அதற்காகவே காத்திருந்த ஸ்வாமி ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ. நான் முத்தரசு சார்.''

''என்ன அரசு?''

''வேலை முடிந்து விட்டது சார்.''

''பையன் எங்கே?''

''சிந்தாதிரிப் பேட்டையில் நம்முடைய பிரிண்டிங் பிரஸ் இருக்கிறதில்லையா? அங்கே தான்.''

''சரி... தாங்க்ஸ். பையனைப் பார்த்துக் கொள்ள ஆள் போட்டு விட்டு, நீ நான் சொன்னபடி செய்.''

''சரி சார்.''

ஸ்வாமி ரிசீவரை வைத்து விட்டு லெமனேட் கோப்பையை எடுத்து நிதானமாக சீப்பிக் குடிக்கத் தொடங்கினான்.

அன்று மாலை.

துரையப்பாவின் வீடு.

துரையப்பாவின் மனைவி இன்னும் வீடு திரும்பாத தன் மகனுக்காகக் கவலைப்பட்டு, விஷயத்தை போனில் துரையப்பாவிற்குத் தெரியப்படுத்த, துரையப்பா ஒரு அவசர பர்மிஷன் போட்டு விட்டு, வீடு வந்து சேர்ந்து மனைவியிடம் கோபப்பட்டுக் கொண்டிருந்த நேரம், முத்தரசு துரையப்பாவின் வீட்டில் ஒரு சிறுத்தை போல் நுழைந்தான்.

முத்தரசு - இளைஞன் - சுருள் சுருளாக இருந்த முடி. பெரிய கண்கள். ஏறக்குறைய சதுர முகம்.

துரையப்பா திடீரென வீட்டுக்குள் நுழைந்த அவனைப் பார்த்துத் திகைத்தான்.

''ஏய்... யார் நீ?''

''துரையப்பா கொஞ்சம் என்னோடு முன்னறை வரை வருகிறீர்களா. நீங்களும் நானும் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்.''

துரையப்பா புரிந்து கொள்ள முடியாமல், அவனிடம் பேசியவனை எதிர்க்க முடியாமல் முன்னறைக்கு வந்தான்.

''இப்போது சொல்லு யார் நீ?''

''துரையப்பா, உங்கள் பையன் உலகநாதன் உயிரோடு உங்களுக்கு வேண்டும் இல்லையா?''

மிகச் சரியான சொல்லம்பு அது. துரையப்பாவின் இதயத்தில் நடுமையத்தை துளை போட்டது அது. துரையப்பா காற்று இறக்கப்பட்ட ட்யூப் போல தளர்ந்து, தொங்கி, முன்னறை சோபாவில் சரிந்தான்.

''என் பையன். என் பையன்... அவனை நீ என்ன செய்திருக்கிறாய்?''



''இதுவரை ஒன்றும் செய்யவில்லை. இனிமேலும் ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டுமென்றால் நான் சொல்வதை நீ கேட்க வேண்டும்.''

''என்னிடம் பணம் எதுவும் இல்லையே. இன்றைக்கு சம்பாதித்த ஒரு ஆயிரம் ரூபாய் இருக்கிறது. மனைவி கழட்ட மாட்டேன் என்று பிடிவாதமாய் போட்டுக் கொண்டிருக்கும் ஒரு ஏழு பவுன் செயின் இருக்கிறது. இரண்டையும் தந்து விடுகிறேன். என் பையனை எதுவும் செய்ய வேண்டாம். ப்ளீஸ்... என் பையனை என்னிடமே...''

முத்தரசு சிரித்தான்.

''உன் பணம் எனக்கு வேண்டாம் துரையப்பா. நான் உனக்குப் பத்தாயிரம் தருகிறேன். உன் பையனையும் உன்னிடம் திருப்பித் தந்து விடுகிறேன். நான் சொல்வதை மட்டும் நீ கேட்டால் போதும்.''

''என்ன?''

''நீல நிலாவிற்கு நாயக் வருகிறான் இல்லையா?''

''ஆமாம்.''

''நேற்று வந்தானா?''

''ம்.''

''முந்தா நேற்று?'' ''ம்''

''இன்றைக்கு வருவானா?''

''வருவான். வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்.''

''எத்தனை மணிக்கு வருவான்?''

துரையப்பா தயங்கினான்.

''உன் பையனின் உயிர் துரையப்பா.''

''ஏழு மணிக்கு.''

''குட் எத்தனை மணி வரை தங்குவான்.''

''இரவு பன்னிரண்டு வரை.''

''எங்கே உட்காருவான்?''

''எனக்கு எதிரில் இருக்கும் ஒரு ஸ்டூலில்.''

''நாயக் எப்போதும் ஸ்டூலில்தான் உட்காருவானா?''

''ஆம்.''

''ஸ்டூலில் உட்காருபவர்களுக்கு பாரில் இருப்பதெல் லாம் தெரியுமா?''

''என் இடுப்புக்கு மேலே உள்ளதெல்லாம் தெரியும்.''

''தட்டிஸிட். உன் இடுப்புக்குக் கீழே என்ன நடந்தாலும் தெரியாது இல்லையா?''

''தெரியாது.''

''குட் நாளை மாலை ஆறு மணி சுமாருக்கு நீ ஸ்டோர் ரூமின் வெளிப்பக்கக் கதவைத் திறந்து வைக்க வேண்டும். என் ஃப்ரண்ட் ஒருவன் அங்கே வரப் போகிறான். அவனை நீ கவனிக்கக்கூடாது. அவன் பாருக்குள் வந்து ஹார்ஸ் ஷூ கவுண்டருக்குப் பின்னால் கீழே குனிந்து உட்கார்ந் திருப்பான். நீ வழக்கம் போல் மது ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். நாயக் வந்து ஸ்டூலில் உட்கார்ந்த வுடன் உனக்குப் பக்கத்தில் கீழே உட்கார்ந்திருப்பவனின் ஷூக்காலை நீ மிதிக்க வேண்டும். உனக்குப் பக்கத்தில் கீழே



ஒருவன் உட்கார்ந்திருக்கிறான் என்ற விஷயத்தை நீ வெளியே விட்டால்... அவ்வளவுதான்... உலகநாதன் உனக்குக் கிடைக்கமாட்டான். அது மட்டுமில்லை. உன் உயிரும் இருக்காது. அது மட்டுமில்லை...''

''இவ்வளவு பயமுறுத்திய வரை போதும்'' என்றான் துரையப்பா.

''செய்கிறாயா?''

''செய்கிறேன். பத்தாயிரம் ரூபாய்?''

முத்தரசு பாக்கெட்டில் இருந்து பழைய நூறு ரூபாய்க் கட்டு ஒன்றை எடுத்து நீட்டினான்.

துரையப்பா அதை வாங்கிக் கொண்டான்.

''நாயக்கை கொல்லப் போகிறீர்களா?''

''பின் என்ன... உப்பு மிளகு தூவி போட்டு டேஸ்டா பார்க்கப் போகிறோம்.''

''அதை பாருக்குள் வைத்துக் கொள்ள வேண்டுமா என்ன? நாயக் ஏழு மணிக்குப் பாருங்க வருவான் என்று சொல்லி விட்டேன். அவன் வருகிற வழியிலேயே அவனைத் தீர்த்துக் கட்டினால் இப்போது நான் அவதிப்பட வேண டாமே...''

''துரையப்பா நீ உன் தகுதிக்கு மீறிய பேச்சுப் பேசுகிறாய். இருந்தாலும் சொல்கிறேன் கேள். பறந்து கொண்டிருக்கும் பறவையை வீழ்த்துவதை விட, பதுங்கியிருக்கும் புலியை வீழ்த்துவது எளிது. நாயக் எங்கேயிருந்து வருகிறான். எதில் வருகிறான் என்பதை எல்லாம் ரகசியமாக வைத்திருக் கிறான். அவனை சாலையில் வைத்துச் சுட்டால் அவன் சாவது கஷ்டம். ஃபிப்டி ஃபிப்டி சான்ஸ். பாருக்குள்

'தண்ணி' மிதப்பில் இருக்கும் போது சுட்டால் நூறு சதவீதம் அவன் சாவு உறுதி...! உன் சந்தேகம் தீர்ந்ததா? இன்னும் ஏதாவது சந்தேகம் கேட்டால் நாயக்கிற்குப் பதிலாக, நீ தான் போக வேண்டி இருக்கும்.''

துரையப்பா வாயை இறுகத் தைத்துக் கொண்டான்.

மறுநாள்.

மாலை ஆறு முப்பது.

துரையப்பா நடுங்கும் கரங்களுடன் ஸ்டோர் ரூமின் வெளிப்புறக் கதவின் தாளை நீக்கிவிட்டு, பாரின் கவுண்டருக்குப் பின்னால் வந்து காத்திருந்தான். அவன் உடலில் மின்சாரம் இடைவிடாது பிரயாணம் செய்து கொண்டிருந்தது.

ஸ்டோர் ரூம் கதவு திறக்கப்பட்டது கண்ணின் ஓரத்தில் தெரிந்தது. உள்ளே ஓர் உருவம் நுழைந்தது தெரிந்தது. அதன் கையில் ஒரு பெரெட்டா துப்பாக்கி இருந்தது தெரிந்தது.

உள்ளே நுழைந்த உருவம் கதவை சார்த்தி விட்டு, தவழ்ந்து தவழ்ந்து வந்து பாரின் ஹார்ஸ் ஷூ கவுண்டருக்குப் பக்கத்தில் மறைந்து, துரையப்பாவின் காலருகே வந்து அமர்ந்த போது, துரையப்பா குனிந்து பார்க்க ஆசைப்பட்டான். வந்தவனை அடையாளம் காண நினைத்தான்.

முதல்நாள் வந்திருந்தவன், துரையப்பாவைக் குனியக் கூடாது, நிமிரக் கூடாது என்று ஏகப்பட்ட எச்சரிக்கைகள் விடுத்திருந்ததால் துரையப்பா குனியப் பயப்பட்டான்.

பின்னால் திரும்பி நடந்து சென்று, ஷெல்ஃபில் இருந்து விலை உயர்ந்த ஷீவாஸ் ரீகல் பாட்டில் எடுத்து இரண்டு



பெக்கை ஒரு கோப்பையில் ஊற்றி அப்படியே குடித்தான். குடித்தான் என்று கூட சொல்ல முடியாது. சரித்துக் கொண்டான்.

உள்ளே திரவம் இறங்க இறங்க, அதன் சூடு நெஞ்சில் பரவப்பரவ. துரையப்பாவின் நடுக்கம் சற்று விலகிய மாதிரி இருந்தது. மின்சார ஓட்டம் கொஞ்சம் நின்ற மாதிரி இருந்தது.

ரெஸ்டாரெண்டில் ஒன்றிரண்டு, ஒன்றிரண்டு என அங்கங்கே கஸ்டமர்கள் சேர ஆரம்பித்திருந்தார்கள். துரையப்பா பேரர்கள் கொண்டுவந்த ஆர்டரைக் கவனிக்கத் தொடங்கினான்.

ரெண்டு லார்ஜ் மக்டவல்.

ஒரு கோல்டன் ஈகிள்.

மூன்றாவது ஆர்டரான ஒரு லார்ஜ் ஷீவாஸ் ரீகலை அவன் அளவு கிளாஸில் ஊற்றிக் கொண்டிருந்தபோது, ரெஸ்டாரெண்ட் வாசலில் நாயக்கைப் பார்த்தான். தடுமாறினான்.

விஸ்கி கீழே கொஞ்சமும், அவன் கட்டியிருந்த ஏப்ரனில் கொஞ்சமும், அளவு கோப்பையில் கொஞ்சமுமாகச் சிதறியது.

நாயக் அங்கிருந்தே உற்சாகமாய்க் கையசைத்தான்.

துரையப்பா அவனை குனிந்து நிமிர்ந்து ஜப்பானிய ஸ்டைலில் வணங்கினான்.

நாயக், துரையப்பாவிற்கு நேர் எதிரே இருந்த ஸ்டூலில் ஏறி உட்கார்ந்தான்.

''எப்படி இருக்கிறாய் துரையப்பேன்?''

''இருக்கிறேன் சார்'' என்றான் துரையப்பா. குரல் நடுக்கத்தை மறைத்துக் கொண்டு, அவன் கால்களில் ஒன்று மெல்ல மெல்ல கவுண்டருக்குக் கீழே உட்கார்ந்திருந் தவனின் ஷூக்காலை நோக்கி நகர்ந்தது.

''சுரத்தேயில்லாமல் பேசுகிறாயே துரையப்பேன். நேற்று நீ அவ்வளவு உற்சாகமாய்ப் பேசினாய். பேசிக் கொண் டிருந்தவன் திடீரென்று பர்மிஷன் போட்டு வீட்டுக்குப் போய்விட்டாய். நேற்றைக்கும், இன்றைக்கும் உன்னைப் பார்த்தால் ஒரு பத்து வயது கூடிப்போன மாதிரி தெரிகிறது. என்ன விஷயம்? உடம்பு சரியாகத்தானே இருக்கிறது?''

''சரியாகத்தான் இருக்கிறது சார்'' என்றான் துரையப்பன். அவன் கால் மேலும் நகர்ந்தது.

''உன் கையெல்லாம் நடுங்குகிறது. குரல் நடுங்குகிறது. ஸம்திங் ராங் வித் யூ? ஓ.கே. எனக்கு வழக்கம் போல ப்ளாக் லேபிள் எடு.''

துரையப்பன் கையருகே வைத்திருந்த, நாயக் கேட்ட, பிளாக் லேபிள் பாட்டிலை எடுத்து, அதன் மூடியைத் திறந்து பாட்டிலை நீட்டினான்.

நாயக் அதை அப்படியே வாங்கி, சட்டை நனைய நனைய ஒரு முறை குடித்துவிட்டு, புறங்கையால் உதட்டைத் துடைத்துக் கொண்டான்.

''துரையப்பா... இங்கே வா'' என்று அழைத்தான்.

துரையப்பா கவுண்டரில் முகம் பதித்து நாயக்கை நெருங் கினான். அவன் கால், பக்கத்தில் கீழே உட்கார்ந்திருந் தவனின் ஷூக்காலை மிதித்தது.

''துரையப்பா பையனைப் பற்றித் தானே கவலைப் படுகிறாய். வாசலைப் பார்'' என்றான்.

முழுநேர கிளை நூலகம்
வில்லிவாக்கம்,
சென்னை-49.



துரையப்பா வேகமாகப் படபடக்கும் இதயத்துடன் ரெஸ்டாரெண்ட் வாசலை நோக்கினான். உலகநாதனைப் பற்றி, நாயக்கிற்கு எப்படித் தெரிந்தது. ரெஸ்டாரெண்ட் வாசலில் உலகநாதன் நின்றிருந்தான். அங்கிருந்தே துரையப்பாவைப் பார்த்துக் கையாட்டினான். உற்சாகக் கையாட்டல்.

54135/6070585
ரூ.70/-

டூ லேட். இட் ஈஸ் டூ லேட்.

வினாடி நேரத்திற்குள் துரையப்பா எதிர்பார்த்த, எதிர் பார்க்காத எல்லாமே நடந்து முடிந்துவிட்டது.

துரையப்பன் காலை அழுந்தியதும், கீழே குனிந்து உட்கார்ந்திருந்தவன் எழுந்து கொண்டு, கையில் வைத் திருந்த பெராட்டாவை, நாயக்கை நோக்கித் திருப்பி, சுடுவதற்கு விசையை அழுத்த முயல -

அதற்குள் அவன் நெற்றிப்பொட்டில் இன்னொரு துப்பாக்கிமுனை படிந்தது.

''ஹாண்ட்ஸ் அப்.''

நாயக் எதற்கும் ஒரு தற்காப்பு முயற்சியாகக் கீழே குனிந்தான்.

பெராட்டா சுடவில்லை. அதைப் பிடித்திருந்தவன், தன் நெற்றிப் பொட்டில் பதிந்த துப்பாக்கி உலோகத்தின் ஜில்லிப்பை உணர்ந்து தன் உயிருக்குப் பயந்து, டிரிக்கரை அழுத்தாது விட்டான். இரண்டு கைகளையும் உயரத் தூக்கினான்.

நெற்றிப் பொட்டில் துப்பாக்கி பதித்தவன், உயர்த் தப்பட்ட கையில் இருந்த பெராட்டாவைப் பிடுங்கினான்.

நாயக் நிமிர்ந்தான்.

பெராட்டா வைத்திருந்தவனின் முகத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்தான்.

''நான் ஸ்வாமியை இந்த இடத்தில் எதிர்பார்த்தேன். நீ புதிதாக இருக்கிறாய். யார் நீ?'' என்று கேட்டான்.

''முத்தரசு'' என்றான் முத்தரசு. அவன் முகத்தில் நேற்று மாலை இருந்த தைரியம் இல்லை. பயம் இருந்தது.

துரையப்பா வாய் பிளந்தான். உலகநாதன் கடத்தப் பட்ட விவரம் நாயக்கிற்கு எப்படித் தெரிந்தது? முத்தரசின் நெற்றிப்பொட்டில் துப்பாக்கியை பதித்தவன் எங்கிருந்து முளைத்தான்?

''ஸ்வாமி எங்கே?'' என்றான் நாயக்.

''வெளியே, காரில், ஸ்வாமிதான் இங்கே வருவதாக இருந்தது. கடைசி செகண்டில் பிளானை மாற்றி ஸ்வாமி என்னை இங்கே அனுப்பினார்.''

''அதுதானே பார்த்தேன். ஸ்வாமி கெட்டிக்காரன். இங்கே நுழைந்தால் மாட்டிக் கொள்வோம் என்று அவனுக்குத் தெரிந்திருக்கிறது. அதுதான் பலியாடாக உன்னை அனுப்பியிருக்கிறான். நான் ஸ்வாமியை இந்த பாரில் வைத்துக் கொல்லப் போவதாக நினைத்துக் கொண்டிருந்தேன். ப்ச். அவன் சாவு இன்னும் சில நிமிஷங்களுக்குத் தள்ளிப் போய்விட்டது. ஓ.கே... கம்மான், ஸ்வாமியின் ப்ளான் என்ன... அவுட் வித் இட்.''

''நான் உள்ளே வந்து உன்னைச் சுடவேண்டும். துப்பாக்கியின் சத்தம் கேட்டவுடன் ஸ்வாமி வெளியே அவன் உட்கார்ந்திருக்கும் காரை ஸ்டார்ட் செய்வான். நான் ஸ்டோர் ரூம் வழியாகவே வெளியே அவுட் கேட்டை அடைந்து விடும். 'யாரும் நம்மைத் தடுக்குமுன், வெகுதூரம் போய்விடலாம்' என்று ஸ்வாமிதான் திட்டம் போட்டு, என்னை உள்ளே போகச் சொன்னார்.''



''ஸ்வாமியின் கார் நம்பர் என்ன? என்ன கார்?''

''மாருதி, டி.எஸ்.எச்.எய்ட், செவன், ஸிக்ஸ், ஃபோர்... நீலநிறம்.''

''வெரிகுட். அந்தக் கார் காம்பவுண்டை விட்டுப் போகக் கூடாது. அதிலேயே நான் ஸ்வாமிக்கு சமாதி கட்டுகிறேன். என்னை ஒழிக்கப் பார்க்கிறானா அவன்? யார் ஒழியப் போகிறார்கள் என்று இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிந்துவிடும்... ஜெகன்... நம் ஆட்கள் ஹோட்டல் மொட்டை மாடியில் ஒளிந்திருக்கிறார்கள் தானே?''

''யெஸ் நாயக்.''

''எல்லோரிடமும் டெலஸ்கோப் பொருத்திய ரைஃபிள்கள் இருக்கின்றன தானே?''

''ஏ.கே. ஃபார்ட்டி செவனே இருக்கிறது நாயக்.''

''கார் பார்க்கிங்கில் இருந்து புறப்படும் மாருதியை ஏ.கே. ஃபார்ட்டி செவனின் குண்டு தொடுமா?''

''யெஸ் நாயக்.''

''ஓ.கே. நீ ரகசியமாக மேலே போ. நம் நண்பர்களிடம் சொல். டி.எஸ்.எச்.8764. மாருதி. நீலக்கலர். அது ஸ்டார்ட் ஆகிப் புறப்பட்டவுடன் அதைச்சுட வேண்டும் என்று சொல். மாருதி எரிய வேண்டும். டிரைவிங் சீட்டில் இருக்கும் ஸ்வாமி இந்த காம்பவுண்டை விட்டுத் தாண்டக்கூடாது... அவனும் சாக வேண்டும்'' என்று சொல்லிவிட்டு. ஜெகனின் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னான் நாயக்.

ஜெகன் தலையை அசைத்து விட்டு, தன் துப்பாக்கியை நாயக்கிடம் கொடுத்து விட்டு, நீலநிலா ரெஸ்டாரெண்டின் கூரைப் பகுதியை நோக்கிப் போனான்.

''என்ன துரையப்பா... ஆச்சரியமாக இருக்கிறதா... நான் சாகாமல் தப்பித்தது?''

''ஆம் சார். இல்லை சார். என் பையனை அவர்கள் கடத்திக் கொண்டு போய் வைத்து என்னை மிரட்டிய தால்தான் நான் அப்படி...''

''தெரியும். உன்மேல் தப்பில்லை. உன் நிலையில் நானிருந் தால் நானும் அப்படித்தான் நடந்து கொண்டிருப்பேன்... ஸ்வாமி என்னைக் கொல்லப் போகிறான் என்று தெரிந்த உடனேயே, அவன் நுழையும் இடம் எது என்று யோசித்துப் பார்த்தேன். நீலநிலா ரெஸ்டாரெண்ட்தான் என்று புரிந்தது. அதுவும் டெய்லி நான் இங்கே மது அருந்த வருவது எப்படியாவது வெளியில் தெரியும். அதனால் என்னை இங்கே வைத்துத்தான் கொல்ல முடிவு செய்வான் ஸ்வாமி என்று எதிர்பார்த்தேன். வாசலில் காவல் இருக்கிறது. புது ஆள் வந்தால் தெரியும். அதனால் ஸ்வாமி நுழையக்கூடிய வீக்கான இடம் ஸ்டோர் ரூம் தான். அப்படியென்றால் உன்னைத்தான் அவன் விலைக்கு வாங்க வேண்டும். உன் பையன், உன் மனைவி, உன் பெண்கள் எல்லோரையும் வாட்ச் பண்ணச் சொன்னேன். உன் பையனை ஸ்வாமி கடத்தியது பற்றி நியூஸ் வந்தது. அவனைக் காப்பாற்றி வரச் சொன்னேன். நான் இங்கே வரும் நேரம் என்னைச் சுட முயற்சி செய்வான் என்று எதிர்பார்த்ததால் ஜெகனை முதல் நாளே ஸ்டோர் ரூமில் இருக்கும் பரணில் ஒளிந்து கொள்ளச் சொன்னேன். நேற்று முழுக்க ஜெகன் அங்கேதான் இருந்தான். இன்றைக்கு சரியான சமயத்தில் வந்து என்னைக்



காப்பாற்றி விட்டான்... எப்படி... பையா... உடலில் வலு இருந்தால் மட்டும் போதாது. மூளையும் வேண்டும். நீ போய் ஸ்வாமியிடம் சொல்லாதே. அவன் உயிரோடு இருக்கப் போவதில்லை. தெரிந்து கொள். பின்னால் எப்போதாவது உதவும். ஓ.கே.?''

''ஓ.கே! சார்'' என்றான் முத்தரசு நாவால். உலர்ந்து போன உதடை வருடி விட்டுக் கொண்டு.

ஜெகன் கீழே வந்தான்.

''நாயக். ஆல் செட்டு கோ'' என்றான்.

நாயக் முத்தரசைப் பார்த்தான்.

''வெரிகுட் முத்தரசு. நீ கிளம்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. நான் உன் பெராட்டாவால் ஒரு தடவை இங்கே இருக்கும் ஏதோ ஒன்றைச் சுடுவேன். சுட்டவுடன் நீ பின் வாசல் வழியாக தப்பி ஓடு. ஸ்வாமி புத்திசாலி. காரைக் கிளப்புவான். உனக்காகக் காத்திருப்பான், அவன் காரில் ஏறி நீங்கள் இருவரும் தப்பித்துக் கொள்ளுங்கள்.''

''நாயக். நீங்கள் காரைச் சுடப் போகிறீர்களே.''

''ஆம்.''

''அதில் ஏறினால் நானும் செத்துப் போய் விடுவேன்.''

''ஏறாதே. கேட்டை நோக்கி ஓடு. ஓடித் தப்பித்துக் கொள்.''

''தாங்க்யூ. நாயக் தாங்க்யூ'' என்றான்.

நாயக், முத்தரசின் பெராட்டாவை உயர்த்தி, கண்ணாடி ஷாண்டலியரை நோக்கிக் குறிவைத்துச் சுட்டான்.

டுமீல்.

டுமீல்!

காரில் உட்கார்ந்திருந்த ஸ்வாமிக்கு அந்த துப்பாக்கிக் குண்டின் சத்தம் தேனாகப் பாய்ந்தது. ஸ்வாமி நீலநிலா ரெஸ்டாரெண்டின் பக்கப்பகுதியில் இருந்து வெளியே வரப்போகும் முத்தரசிற்காகக் காத்திருந்தான். காரை ஸ்டார்ட் செய்தான்.

ஸ்டோர் ரூம் வழியாக முத்தரசு ஓடிவருவது தெரிந்தது.

திடீரென்று நீலநிலா ரெஸ்டாரெண்டின் கூரையின் மேல் அவர்கள் தென்பட்டார்கள். சுட ஆரம்பித்தார்கள்.

முத்தரசு பின்னால் திரும்பிப் பார்த்தான். பார்த்த வேளை அவன் நெற்றிப் பொட்டில் ஒரு குண்டு பாய்ந்தது. முத்தரசு ஒரு குட்டிக்கரணம் அடித்து எழுந்து ஓடிவந்து, அங்கே நின்றிருந்த சிலையைத் தழுவிச் சரிந்தான். அவன் கழுத்து சிலையின் ஏதோ ஒரு பாகத்தில் பதிந்து நிற்க, முத்தரசு உடனடி மரணத்தைத் தழுவினான்.

நீல மாருதி, புறப்பட்டது. டி.எஸ்.எச்.8764.

குண்டுகள் அதன் டயர்களை, அதன் உடலை, காரில் அமர்ந்திருந்த டிரைவர் காரைப் படுவேகமாகக் கிளப்ப, மேலே வந்திருந்த நாயக் ''ஷூட் ஹிம் டவுன்'' என்று ஆணையிட, குண்டுகள் வரிசையாக மாருதியின் டிரைவரை அடைந்தன. துளைத்தன.

கார் ஒரு சின்ன வட்டம் போட்டு, சிலையைச் சுற்றி வரும் வேளையில் குப்பென்று தீப்பிடித்தது.

இன் கேட்டருகே இருந்த ஒரு பழைய ஆஸ்டின் கார் சர்ரென்று புறப்பட்டு, இன் கேட் வழியாக சாலையைத் தொட்டது.



ஆஸ்டின் காரின் டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்த ஸ்வாமி ஆக்ஸிலேட்டரை அழுத்தினான், ஆக்ஸிலேட்டர் பெடல் தரையைத் தொடும் அளவு.

கார் மேலும் புகைகக்கி, மேலும் சீறி, ஒரு விமானத்தின் டேக்-ஆஃப் வேகத்தில் சாலையில் பாய்ந்தது.

''ஹலோ... நாயக்?''

''யெஸ்... அட... ஆண்டவனா... உனக்கு ஒரு சந்தோஷமான செய்தி வைத்திருக்கிறேன்.''

''என்ன?''

''ஸ்வாமி செத்துப் போய்விட்டான்.''

''என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஸ்வாமி சாகவில்லை.''

''நோ... ஸ்வாமி ஓட்டி வந்த மாருதியை என் ஆட்கள் சுட்டார்கள். அவன் உடல் கூட கிடைக்கவில்லை.''

''ஸ்வாமி புத்திசாலி. அந்த மாருதியில் அவன் இல்லை. வேறொரு ஆள் இருந்தான். அவன் தப்பித்து விட்டான்.''

''ஆஸ்டின் கார்?''

''ஆம்.''

''பாஸ்டர்ட்.''

''ஒரு புத்திசாலியைத் திட்டாதே. உனக்கு ஸ்வாமியை நேருக்கு நேர் பார்க்க விருப்பமா?''

''யெஸ்.''

''சண்டை கூடாது. ஆயுதம் கூடாது. வெறும் பேச்சுதான். நீ நடந்து வர வேண்டும். உன்னுடன் துணையாக யாரும்

வரக்கூடாது. ஸ்வாமியும் ஆயுதமின்றி நான் சொல்கிற இடத்திற்கு வருவான். அப்போது சில உண்மைகளை உனக்குச் சொல்லப் போகிறேன். அதிர்ச்சியான உண்மைகள்.''

''நீ யார்?''

''நேரில் வா. தெரியும்.''

''எங்கே?''

''பிளாட் நம்பர் பன்னிரெண்டு, கால்வாய் சாலை, அடையாறு.''

''ஓ.கே. எப்போது?''

''மாலை ஆறுமணிக்கு.''

''சரி.''

''ஹலோ... ஸ்வாமி.''

''ஆண்டவன்... தாங்க்யூ ஃபார் யுவர் இன்ஃபர்மேஷன். நான் நாயக்கை முடித்து விட்டேன் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். நாயக் உயிரோடு இருக்கிறான். நீ மட்டும் புத்திசாலி இல்லை. முத்தரசிடம் மாருதிக்கு வரச்சொல்லிவிட்டு, அதில் வேறு ஒருத்தனை உட்கார வைத்துவிட்டு, நீ ஆஸ்டினில் தப்பி வந்து உன்னைப் புத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். நாயக் உன்திட்டத்தை அறிந்து அதை முதலிலேயே கிள்ளி விட்டான். முத்தரசை ஓடச் சொல்லி விட்டு, உள்ளே துப்பாக்கியை வெடிக்கச் செய்தான். குண்டு ஒரு ஷாண்டலியரைச் சேதப்படுத்தியது நாயக்கை அல்ல.''

''பாஸ்டர்ட்.''



''திட்டாதே. அவனை நேரில் பார்க்க விரும்புகிறாயா?''

''யெஸ்.''

''ஆயுதம் கூடாது.சண்டை கூடாது. துணை கூடாது.நீ தனியே வரவேண்டும். உனக்குச் சில அதிர்ச்சியான உண்மைகளைச் சொல்லப் போகிறேன்.''

''யார் நீ?''

''நேரில் வா. சொல்கிறேன்.''

''எங்கே?''

''பிளாட் நம்பர் 12, கால்வாய் சாலை, அடையாறு.''

''ஓ.கே. எப்போது?''

''இன்று மாலை, ஆறு மணிக்கு.''

''வருகிறேன். அந்த நாயக் எப்படி இருக்கிறான் என்று பார்க்கிறேன்.''

MATலை ஆறு மணி.

கால்வாய் சாலையில் பிளாட் நம்பர் பன்னிரண்டில் அந்த வீடு இருந்தது. வீட்டு வாசலில் இந்திரா நின்றிருந்தாள். பக்கத்தில் ரங்கநாயகி.

தூரத்தில் ஸ்வாமி தெரிந்தான். தன் பகட்டையெல்லாம் விட்டு விட்டு, மிக எளிமையாக நடந்து வந்த அவனைக் கண்டதும், இந்திரா அவனை நெருங்கினாள்.

''அண்ணா'' என்றாள்.

ஸ்வாமி திகைத்தான். ''நானா? உன் அண்ணனா?''

''ஆமாம் அண்ணா. நீ என்னுடைய சொந்த அண்ணன் தான். உள்ளே வா. எல்லாம் விவரமாக பேசலாம்.''

ஸ்வாமி ரங்கநாயகியைப் பார்த்தான். தயங்கி உள்ளே நுழைந்தான்.

ஆறு ஐந்துக்கு நாயக் வந்தான்.

ரங்கநாயகி அவனை நெருங்கினாள். அவன் உடலைத் தடவித் தடவிப் பார்த்துக் கண்ணீர் விட்டாள்.

''ராஜா... வந்து விட்டாயா? அந்தத் தம்பி சொன்னான் நீ வருவாய் என்று வா. உள்ளே வா. என்ன சாப்பிடுகிறாய்?''

கொஞ்சம் நாடகம் போல் உணர்ந்த நாயக், ''யார் நீ?'' என்றான்.

''உன் அம்மாடா... நான் உன் அம்மா'' என்றாள் ரங்கநாயகி.

நாயக் உள்ளே நுழைந்தான்.

நாயக் ஸ்வாமி இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தபோது பக்கத்து அறைக்கதவு திறந்து அவன் வெளிப்பட்டான்.

அவனைப் பார்த்த இரண்டு பேருமே வியப்பான குரலில் ''விஸ்வம்'' என்றார்கள்.

''யெஸ். நான்தான் விஸ்வம். நான்தான் நண்பன். நான்தான் ஆண்டவன்.''

''நீ செத்துப் போய்விட்டாய் என்றுதானே...''

''இல்லை. நான் சாகவில்லை. ஜெயதேவிற்கு ரன்ஜித்தின் சரக்கு வருகிறது என்று துப்புக்கொடுத்தவன் நான்தான். என்னை ஜெயதேவ் சுடச் சொல்லியிருப்பான் என்று தெரியும். புல்லட் புரூஃப் கோட் போட்டிருந்தேன். சுட்டார்கள். செத்தவன் போல் நடித்தேன். பாறாங்கல் கட்டி கிணற்றில் போட்டார்கள். கிணற்றிலிருந்து ஜெகன் என்னை வெளியே எடுத்தான். ஜெகன் என் ஆள். என் ஆட்கள் எப்படியும் என்னைக் காப்பாற்றி இருப்பார்கள். என் ஆட்கள் ரன்ஜித்திடமும் இருக்கிறார்கள். ஜெயதேவிடமும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லா இடங்களிலும் ஊடுருவி இருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த தகவலை வைத்துத் தான் நான் உங்களுக்கு இன்ஃபார்மராக இருந்தேன்.''



''எதற்காக?''

''ரன்ஜித் அழிய வேண்டும். ஜெயதேவ் அழிய வேண்டும். அவர்களின் ஆட்கள் அத்தனை பேரும் அழிய வேண்டும். ஏறக்குறைய அழிந்து விட்டார்கள். இன்னும் ரன்ஜித்தும், ஜெயதேவும்தான் பாக்கி... இருங்கள் என் மேல் பாய வேண்டாம். முழுக்கச் சொல்லி விடுகிறேன். நாயக். ரன்ஜித்தை நீ உன் காட்ஃபாதர் போல் நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன் அம்மா உன்னை அனாதையாக விட்டுப் போய் விட்டாள் என்று நீ நினைத்திருப்பாய். இல்லை, உண்மை அதில்லை. உன் அப்பா, அந்த நாளில் ரன்ஜித்தின் எதிரி. நேர்மையான போலீஸ்காரன். அவர் ரன்ஜித்தால் சாகடிக்கப் பட்டார். அவர் வருவார் என்று எதிர்பார்த்த உன் அம்மா ஏமாந்து போனாள். அவள் ஏமாந்த நேரம் நீ கைக்குழந்தை. உன் அம்மாவிடம் இருந்து உன்னைப் பிரித்துக் கூட்டிப் போய் உன்னை வளர்த்தது ரன்ஜித். எதற்காக? ரன்ஜித்தின் ஈகோ திருப்தியடைய வேண்டும். போலீஸ்காரனின் மகன் கொலைகாரனாக மாறவேண்டும். இருபத்தைந்து வருடங்களில் அவன் உன்னைக் கொலைகாரனாக்கி விட்டான். உன்தாய் பற்றி உனக்குத் தப்பான போதனைகள் கொடுத்து, நீ கேட்டதெல்லாம் வாங்கித் தந்து... நீ இப்போது ஒரு இரக்கமற்ற கொலைகாரன்...

''ஸ்வாமியின் கதையும் உன் கதை போலத்தான். ஜெயதேவ் ஸ்வாமியின் சின்னவயதில், அவனுடைய

அப்பாவையும் அம்மாவையும் நகைக்காக கழுத்தை நெறித்துக் கொன்ற ஒரு திருடன். கொலைகாரன் கொன்று விட்டு பெண் குழந்தையை விட்டுவிட்டு, உன்னை மட்டும் தூக்கிப் போய்விட்டான் - கொலைகாரன் ஆக்குவதற்கு...

''இதெல்லாம் எனக்குத் தெரிந்த பின் நான் வெகு துல்லியமாகத் திட்டம் போட்டேன். உங்கள் இருவரைக் கொண்டே அந்தக் கூட்டத்தை அழிக்க வேண்டுமென்று நினைத்தேன். இப்போது ரன்ஜித்தும், ஜெயதேவும்தான் மிச்சம் இருக்கிறார்கள்... வாருங்கள்... சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்... அம்மா... சாப்பாடு போடு... இந்திரா அண்ணனுக்குத் தட்டுவை...''

அன்று இரவு முழுக்க அந்த வீட்டில் யாரும் தூங்க வில்லை. விஸ்வம் பேசினான். பேசினான் பேசிக் கொண்டே இருந்தான். கண்களில் நீரே பார்த்தறியாத நாயக்கும், ஸ்வாமியும் கன்னங்களில் வழிந்த கண்ணீருடன் விஸ்வம் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அன்றைக்கு மூன்றாவது நாள்.

நாயக் மேலே ஒளிர்ந்த பௌர்ணமி நிலவை மிக விரக்தியாகப் பார்த்தான். நடந்தான். ரன்ஜித்தின் காம்ப வுண்ட் கேட் வந்ததும் நுழைந்தான். வாசலில் இருந்த செக்யூரிட்டி நாயக்கை சோதித்தான். ஆயுதம் எதுவுமில்லை என்று தெரிந்தவுடன், அங்கிருந்த பென்ஸில் நாயக்கை ஏற்றி ரன்ஜித்தின் அறை வாசலருகே விட்டான்.

நாயக் படிகளைக் கடந்து, ரன்ஜித்தின் அறைக் கதவை அடைந்து, தட்டி அனுமதி பெற்று உள்ளே நுழைந்தான்.

ரன்ஜித் இரவு உடையிலிருந்தார்.

அவனைக் கண்டதும் ''வா... வா'' என்றார்.



நாயக் அவருக்கு அருகில் இருந்த சோபாவில் அமர்ந்தான்.

''என்ன விஷயம் நாயக். என்னைப் பார்க்க வேண்டும் என்றாயாமே...?''

''ஒரு கணக்கு தீர்க்க வேண்டி இருக்கிறது'' என்றான் நாயக்.

ரன்ஜித் சற்றும் எதிர்பாராத ஒரு தருணத்தில் ரன்ஜித் மீது அவன் பாய்ந்தான்.

நாயக்கின் வெகு வலுவான கரங்கள் அவர் கழுத்தைப் பற்றி அழுத்தின. அழுத்திக் கொண்டே இருந்தன.

ரன்ஜித் தளர்ந்து தொய்ந்து விழுந்த பிறகும்...

காம்பவுண்ட் கேட்டை உடைத்துக் கொண்டு போலீஸ் வேன்கள் நுழைந்த பிறகும்...

அறைக்கு வெளியே கதவு இடிபடும் சத்தம் கேட்ட பிறகும்...

நாயக்கின் கைகள் அவர் கழுத்தை அழுத்துவது நிற்கவே இல்லை.

அதே இரவு.

ஸ்வாமி ஜெயதேவியின் வீட்டுக் காம்பவுண்டிற்குள் அடியெடுத்து வைத்தான். ஜெயதேவியின் படுக்கை அறையை சர்வ சுதந்திரத்துடன் நெருங்கினான்.

ஜெயதேவ் படுத்திருந்தார்.

நாய்கள் காவல் காத்தன. ஸ்வாமியைக் கண்டதும் அவை ஜெயதேவின் படுக்கையிலிருந்து எழுந்து வந்து ஸ்வாமியைச் சூழ்ந்தன.

ஜெயதேவ் முழித்து, ஸ்வாமியைப் பார்த்து திடுக் கிட்டார்.

''என்ன ஸ்வாமி இந்த நேரத்தில்...?''

''ஒரு கணக்கைத் தீர்க்க வந்திருக்கிறேன்'' என்றான் ஸ்வாமி.

நாய்களைப் பார்த்தான். ஜெயதேவைப் பார்த்தான். அவரை நெருங்கினான். அவன் கை நகங்கள் ஜெயதேவின் முகத்தில் பதிந்து சதையைப் பெயர்த்தன.

''ஸ்வாமி... ஸ்வாமி... ஸ்வாமி.''

''கில் ஹிம்... காட்ச் ஹிம்... கில் தட் பாஸ்டர்ட்.''

ரத்த வாசனை பார்த்த நாய்கள் ஜெயதேவைக் குதறத் தொடங்கின.

போலீஸ் வேன்கள் ஜெயதேவின் காம்பவுண்டில் நுழைந்தன.

முடிவுரை

''நாயக்... ஸ்வாமி... நீங்கள் இருவரும் வருந்த வேண்டியதில்லை. யூ ஹாவ் டன் தி க்ரெட் திங்க். நான் வெறும் விஸ்வம் இல்லை. இன்ஸ்பெக்டர் விஸ்வம் என்பது உங்களுக்குத் தெரியும். ரன்ஜித்தையும், ஜெயதேவையும் அழிக்க, ஸ்பெஷலாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவன் என்று உங்களுக்குத் தெரியும். நான் என் வழியில் செயல்பட்டேன். எனது உதவி ஆட்களை ரன்ஜித்தின் கும்பலின் நடுவேயும், ஜெயதேவின் கும்பலின் நடுவேயும் ஊடுருவ விட்டேன். என் உயிர் பற்றி கவலைப்படாமல் நானும் இதில் நுழைந்தேன். எதற்காகத் தெரியுமா? உன் அம்மாவிற்காக. உன் தங்கைக்காக. இந்தக் கேஸை ஆராயும் போது அவர்கள் இருவரும் தற்செயலாக இடறினார்கள். என்னைப் பாதித்தார்கள். அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை நான் எடுத்துக் கொண்டேன். ரன்ஜித்தும், ஜெயதேவும் அழிய வேண்டும் என்று அப்போது தான் தீர்மானித்துப் படிப்படியாக செயல்பட்டேன். நீங்கள் ரன்ஜித்தையும், ஜெயதேவையும் கொல்லவில்லை. நான்தான் தூண்டினேன். ஸோ... டோன்ட் ரிக்ரெட். இது என் வழி. சட்டத்திற்குப் புறம்பான வழி. ஆனால் நியாயத்திற்கு நேரான வழி. மேலிடத்தை நான் சமாளிப் பேன். உங்களிடம் இருந்து நான் அவ்வப்போது வாங்கிய பணத்தில் நான் ஒரு அனாதை இல்லம் ஒன்றைத் துவங்கி இருக்கிறேன். அதைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களுடையது. போங்கள். அம்மாவுடனும், தங்கையுடனும் அந்த பொறுப்பில் உற்சாகமாக ஈடு படுங்கள். கண்ணீர் வேண்டாம். அன்பு வேண்டும். ஆதரவு வேண்டும். உழைப்பு வேண்டும்...''

விஸ்வம் அவர்களைக் கட்டியணைத்தான். அவர்களின் கண்ணீர் அவன் தோள்களை நனைத்தது.